ஸஞ்சிகை 15

ஸ்ரீ வாணீ விலாஸினீ.

பராபவ௵

ஆனி ௴

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 MAR 1907
MADRAS.

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1906.

Copyright Registered.

THE MADRAS LAW TIMES!

A Cheap, ILLUSTRATED "Multum in Parvo" Legal Periodical.

Published **Fortnightly** in Four Separate Parts.

"Well conducted" and "Ably Edited" with the co-operation of eminent Editorial and regular Reporting Committees.

Warmly welcomed by the PROFESSION.
Proudly patronized by the PUBLIC.
Eminently extolled by the PRESS.

Main Features:—

(1) Biographical sketches of the Bench and the Bar.
(2) Beautiful Portraits of Judges and Lawyers.
(3) Contributions by eminent Lawyers and Jurists.
(4) Cream of Contemporary Legal Literature.
(5) Notes and Discussions on Current Legal topics.
(6) Verbatim Reports of all Privy Council cases.
(7) Prompt publication of important decisions of all the Indian High Courts.
(8) "Well arranged" Digest of every one of the cases reported and noted in all the Indian Law Reports and Journals, official and private.
(9) Summary of all interesting English and American Cases, and notes of Privy Council Cases.
(10) Free supply of all Acts, Regulations, Rules and Circulars passed and issued by the Government of India, the Local Governments and the Indian High Courts, and Boards of Revenue.
(11) A consolidated Digest and a periodical abridgment and Current Index.
(12) High-class printing and neat get-up.

Annual Subscription:— Rupees Twelve. (*Post Free*).

A good Advertising Medium.

Address all orders and communications to,

"THE MADRAS LAW TIMES OFFICE,"
HIGH COURT BUILDINGS,
MADRAS.

WORKS BY A. GOVINDÂCHÂRYA, C. E., F. T. S.

(Veda-Griham) MYSORE.

1. **The Bhagavad-Gîtâ,** with *Srî-Râmânujâ's* Commentary, translated into English. 600 Pages, Demy. 8vo. Cloth Rs 6; Paper Rs 5-0-0.

Highly spoken of by Prof. Max Muller, Dr. Pascal of France and others.

2. **The Holy Lives of the Azhvars** or Drâvida Saints, with Table of the 108 Holy Shrines and the Hierarchic table, 303 Pages, Crown 8vo. in English Rs 1-8-0

Sri Yogi Pârthasarathi Aiyangâr B.A., B.L., speaks of this work as:—"My learned and pious friend A. Govindâchârya's invaluable work."

3. **The Divine wisdom of The Drâvida Saints,** 255 Pages, Demy 8vo. in English ... ... Rs 2-0-0.

*'In this, he digs into the rich mine of Southern Indian Wisdom, and brings to the surface many rare gems hitherto unknown. * * * The work is written by a Bhakta for Bhaktas, and such will find in it pleasant and helpful reading" [Central Hindu College] Magazine.*

4. **Three Lectures on Inspiration, Intuition and Ecstasy.** 214 Pages, Crown 8vo. in English

Part I; Occidental.
Part II; Oriental.
Part III; Theosophical.
} Per Set: Rs 1-2-0.

For golden opinions, See the Theosophist, the Siddhânta Dîpika &c.

5. **The Rationale of Image Worship,** by Yogi S. Pârthasârathi Aiyangar in English ... Rs 0-6-0

Inaugural address on Theosophy in English Rs 0-1-0

Apply to:—

THE MANAGER,
Bookselling Department,
Sri Vani Vilas Press,
SRIRANGAM.

Our Specialities

Enlargements on permanent bromide finished in artistic styles.

Postage Stamp Portraits of the size and shape of stamps reproduced from any photograph at Rs 6-0-0 per 100 Rs 3-0-0 for 50 and Rs 1-12-0 for 25.

Engravings for printers' use in line and half-tone. Samples and prices of these forwarded on application.

Rates strictly moderate.

Correspondence solicited.

S. K. LAWTON & Co.,

PHOTOGRAPHIC ARTISTS &C.

JAFFNA, CEYLON.

Law Examination Manual Series.

By T. R. DESAI, B.A., L.L.B.,

High Court Vakil, BOMBAY.

Latest editions: Case Law up to date with facts of typical cases; very cheap.

1. **Law of Contract**. To be read with and helps to revise, Cunningham and Anson .. .. .. Rs. 3—0—0.
2. **Principles of Equity,** with English and Indian Law of Mortgage, Trusts and Specific Relief Act and the Transfer of Property Act. .. .. Rs. 3—0—0.
3. **Law of Torts**. (Parekh) Companion reader to Pollock's treatise on Torts, with 125 typical problems .. Rs. 2—0—0.
4. **Law of Limitation,** with the whole text, Commentary and 100 Examination Questions and Answers; Useful to Practitioners also. .. .. Rs. 3—8—0.
5. **Law of Registration, Court fees and Stamps;** No reported cases are omitted; Important ones are marked Rs. 3—0—0.
6. **The Criminal Procedure Code**. An analytical Commentary, L.L.B., Examination Questions and Answers and a brief summary of the Code; Useful both for students and practitioners. Rs. 3—8—0
7. **The Indian Penal Code Manual.** A catechetical Commentary; typical cases selected as illustrations under the different offences; Questions (with answers) set at the L.L.B., High Court and District Pleader's Examinations during the last 15 years numbering over 150 are given in the appendix. Elements of important offences distinctly given. .. .. Rs. 3—0—0.
8. **The Civil Procedure Code Manual**. The same plan as the Indian Penal Code Manual. The only manual on the subject. .. .. Rs. 3—0—0.
9. **The Indian Succession Act**. Hindu Will's Act; Parsi Succession Act; Registration Act; Easements Act; Negotiable Instruments Act: Deccan Agriculturist's Relief Act; With the University Examination Questions on each of these Acts and also on Mahomedan Law from 1891—1905. .. .. Rs. 2—8—0.
10. **Hindu Law**. Second Edition. Entirely re-written. Contains 430 pages. BANERJI J. "Very useful manual." GOSH J. Very useful to Students. *Advocate of India.* "The best analysis of Mayne's Hindu Law." 3—8—0.
11. **The Law of Evidence**. (Second Edition is being printed at the Sri Vani Vilas Press and will be out shortly) Students can dispense with all bulky commentaries.

For copies of the above books apply to,

The Manager,
BOOK-SELLING DEPARTMENT.
Sri Vani Vilas Press,
SRIRANGAM.

WORKS BY

M. C. Satakopachariar.

SANSKRIT PANDIT,

SRIRANGAM.

1.	**Samasadipika.** A treatise on Sanskrit compounds with explanation in English, very useful to Students of the High School Department.		0 2 0
2.	**Sabdaratnamala.** A book on Sanskrit Declensions, with conjugations of certain important verbs (IV Edition, revised and enlarged) Approved by the Director of Public Instruction as a text-book for Lower Secondary classes.		0 3 0
3.	**Harshacharitasara.** (II Edition. Revised and enlarged)		0 4 0
	Niroshthyaramayanasangraha. Written in beautiful stanzas of various metres together with a Dandaka. The chief feature of this book is that none of the labials, *viz.* उ, ऊ, ओ, औ, प, फ, ब, भ, म, व and ‐ is used anywhere in the book		0 2 0
5.	**Raghuvamsa.** (Cantos IX-XI) with an easy commentary, Translation and Notes		0 6 0
6.	do (Cantos XII-XVII)	do ..	0 8 0
7.	**Kumarasambhava.** (Cantos I-V)	do ..	0 8 0
8.	**Meghaduta.** (Complete)	do ..	0 8 0
9.	**Nagananda** (Complete)	do ..	1 0 0
10.	**Nitisataka.** (of Bhartrihari)	do ..	0 8 0
11.	**Balakanda.** (of Bhojachampu)	do ..	0 8 0
12.	**Malavikagnimitra.** (complete)	do ..	0 12 0
13.	**Aryasataka.**		0 1 0
14.	**காதம்பரீஸாரஸங்கிரகம்.** (A beautiful story in Tamil)		0 2 0

Apply to:—

THE MANAGER,

Bookselling Department

SRI VANI VILAS PRESS,

Srirangam.

விஷயங்கள்.

1.	விபீஷண சரணாகதி. பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.	209
2.	பழிக்குப்பழி.	218
3.	வேதாந்தம். ம. ஜகதீச ஐயர்.	224
4.	ஹேமந்தகுமாரி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பீ.ஏ.	234
5.	அவுரி. அ. சேதுராமையர்.	260
6.	W. C. பானர்ஜி. எஸ். சாமிநாதையர்.	263
7.	கிறிஸ்து போன்ற ஒழுக்கமுறை நூல். ஆத்மநாதன்.	273
8.	பூகம்பங்கள். வி. ராமசந்திர ஐயர் எம். ஏ.	280
9.	விகடஸஞ்சீவினி. மீனம்பாள்-லக்ஷ்மி.	293
10.	சிறுவர்க்கான பக்கங்கள்.	297
11.	சென்ற மாதம்.	305
12.	புத்தகவரவு.	311

Action Songs, Songs on Object Lessons

AND

Kindergarden Stories.

(IN TAMIL)

BY

C. K. NARAYANASWAMI AIYAR, *Head Master* *…vernment Girls, School, Madura.*

SECOND EDITION REVISED AND ENLARGED.

Price Annas 6 Postage Exclusive.

Apply to THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS, ***Srirangam.***

READY FOR SALE.

University of Madras.

First in Arts Examination.

QUESTION PAPERS

ON

The English Language.

For the past 35 years

1871—1905,

Price Annas 4 only per copy.

Apply sharp, as only a limited No. of Copies are printed.

BEAUTIFULLY GLAZED

Fancy Pictorial . .

. . Post Cards.

Hundreds of Designs to choose from.

Rs. 2-4-0 only, per 1000.

Special concessions are allowed on large orders.

Apply to:—

THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS,

Srirangai

ஸ்ரீமத். உமேச சந்திர பானர்ஜி.

வா. 3. பராபவஸு ஆனிமீ ந. 15.

விபீஷணசரணாகதி.

இவ்வாறு அருளிச்செய்யக்கேட்டு, ஸுக்ரீவ மகாராஜன், பெருமாள் சொன்ன வாக்கியத்தைத் தான் அனுவதித்து அர்த்தத்தை நன்று யாலோசித்தவாறே, தோஷங்களைச் சொல்லி யிவ்வபிஸந்தியை மாற்றத்தகாத வாக்கியமா யிருப்பக்கண்டு என் செய்வோ மென்று பயந்து, பெருமாள் சொல்லி முடிவதற்கு முன்பே, பெருமாளை பனுசரிக்க வேண்டும்படியான தன் சேஷபூத ஸ்வரூபத்தையும் பாராமல் சடுதியாய்த் தன் பிரேமாதிசயத்தால் மிகவு மழ

கியதான வார்த்தையைச் சொல்லத் தொடங்கினன். "இவன் துஷ்டனேயாக, தோஷஹீனனேயாக, இந்த ரஜனீசரனுல் நமக்குப் பிரயோஜன மொன்று மில்லாமையால் இவனை விட்டு விடுவதே நலம். நம்மிடத்திலிவன் சரணமென்று வந்தபடியால் நம் காரியத்தைச் சாதித்துக்கொடுப்பானென் றெண்ணவேண்டாம். ஏனென்றால், சகோதரனுக்கு நகரமழிவது பந்துக்கள் சாவதான இப்படிப்பட்ட மஹத்தான ஆபத்துக்கள் நேரிட்டிருக்குங் காலத்தில், அவனை எவனொருவன் விட்டுவிட்டு நிந்திப்பதும் செய்கிறானே அவன் ஒருவனை யடுத்து ஆபத்துக்காலத்தில் விடாமலிருந்து உதவிசெய்யமாட்டான். ஆகையால் இவன் கூட்டரவு நமக்கு வேண்டுவதில்லை."

இப்படி வானராதிபனுன ஸுக்கிரீவன் சொன்ன வாக்கியத்தை அப்ரதிஹத பராக்கிரமத்தையுடையவனுன காகுத்தன் கேட்டு, ஸுக்ரீவனுக்குத் தன்னிடத்திலுண்டான ப்ரீதியைக்கண்டு முறுவல் செய்து, இம்மகாராஜனது பரிகரத்தில் நமக்காளாவாருண்டோ வென்றுபார்த்து அங்கே ஒருவரையுங் காணுமையால், தன்னுடைய சரணுகத ரக்ஷணத்தைக்கண்டு மகிழ்வுற்று அக்கௌதூகலம் வடிவிலே தோற்றும்படி விளங்கின மகாபுத்திமானுன இளைய பெருமாளைப் பார்த்து "ஹரீசுவரனுன சுக்கிரீவனுல் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள், சாஸ்திரங்களை யோதாமலும், பெரியோர்களான ஆசாரியர்களை யனுவர்த்தனம் பண்ணி விசேஷார்த்தங்களை யறியாமலுமிருக்கிறவர்களால் சொல்லக் கூடியன வல்ல" என்று மகாராஜனைப் பிரசம்ஸித்து, விபீஷணனை விசுவஸனீயனென்று தான் சொல்லப் புகுவது அரசர்கள் எல்லார் பக்கலிலு முள்ளதுதா னென்று சுக்கிரீவனைக் குறித்துச் சொல்லியருளுகிறுன்:—"நீர் மொழிந்ததைக் காட்டிலும்

அதி ஸூக்ஷ்மமானதாயும், ஸமஸ்த அரசர்களிடத்துங் காணப்படுகிறதாயும், லோகவிதித்த மானதாயு மிருக்கிற ஒரு அர்த்த மிருக்கிறது. ஒருவனுக்கு வியஸனங்கள் வந்த வளவில் அவனை உபத்திரவிக்கிற அமித்திரர்களாக நீதி சாஸ்திர வித்துக்களால் சொல்லப்படுமவர்கள் அக் குலீனர்களான ஜ்ஞாதிகளும், அனந்தரதேசவர்த்திகளான அரசர்களுமேயாம். ஆகையால், இராவணன் தனக்கு நம்மாலே ஆபத்துக்கள் வந்த வளவில் குலீனனான இவன் நம்மைப் பிரகரிப்பானென அவன் நலியக் கூடுமென்று கருதி யிவன் இவ்விடத்துக்கு வந்தான். ஜ்ஞாதிக ளெல்லார்க்கு மொவ்வாதோ? இவனுக்கு விசேஷமென்ன? என்ன ஒண்ணாது; அவனுக்கு ஹிதஞ்சொல்லுகிற விடத்திலே நம்முடைய உத்கர்ஷமும் அவனுடைய அபகர்ஷமுந் தோற்றச்சொன்னான். இதனாலும் இவன் பக்கலில் சத்துருபுத்தி பண்ணக்கூடு மல்லவா? ஜ்ஞாதி தோஷ சூனியனானால் தன்னைச் சேர்ந்த ஹிதபரர்களான ஸ்வஜனங்களைக் கொண்டாடுவான். ஆகிலும், நரேந்திரர்களுக்குப் பந்து ஸம்பாவனரூபமான இந்தச் சோபன ஸ்வபாவம் மிகவும் ஸம்சயிக்கத்தக்கதாகவே யிருக்கும். ஆகையால், தான் ஹிதபரனாகிலும் இராவணன் ஹிம்ஸகனாகையால் தன்னை யாதரியானென் றெண்ணி விபீஷணன் நம்மிடத்திலே வந்தான். சத்துருபலம் கைக்கொள்ளத் தகுவ தன்றென்று கருதி நீர் சத்துருவான இராவணனுக்குத் தம்பியாகிய இந்த விபீஷணனைச் சேர்க்கக்கூடாதென்று சொன்ன விஷயத்தில், பக்ஷபாதத்தை விட்டு யதாசாஸ்திரம் இவன் கைக்கொள்ளத்தக்கவன் என்னு மதை உம்முடைய ஹிருதய மிசையும்படி சொல்லுகின்றேன் கேளும். இராவணன் இப்போது நம்மால் ஆபத்தை யடைந்திருக்கையில் இந்த விபீஷணன் அவனுக்கு ஜ்ஞாதியாகையால் அவனுடைய ராஜ்யத்தைவிரும்பி, அக்குலத்

திற்பிறவாமல் இக்ஷ்வாகுவம்சஜராய் அந்த ராஜ்யத்தில் விருப்பமுமில்லாமல் பலவான்களா யவனை யெதிர்த்திருக்கிற நம்மைப்பற்றி ராஜ்யத்தைப் பெறவேண்டு மென்று நம்மிடத்தில் வந்தான்; ஒரு ராக்ஷஸனுக்கு இவ்வித புத்தி யெல்லா முண்டாகக்கூடுமோ வென்று சொல்வது கூடாது; எல்லா ஜாதியிலும் இப்படி விமர்சிக்கும் புத்திமான்க ளிருக்கலாம். நம்மைக்கொண்டு தான் ராஜ்யம் பெறவந்தவனை யழியச் செய்கை யப்பிராப்தம்; ஆகையால், மேல்ஹிதகாரியாகக் கடவனானவிவனை யங்கீகரிப்பதே யுக்தம். நினைவும் சொல்லும் செயலும் பேதித்திருக்கும் துஷ்டர்களானால் இவ்வளவு பொறுமையோடும் ஒற்றுமையோடும் இருக்கமாட்டார்கள். இவனோ சிறிதும் பதற்ற மில்லாதவனாயும் ஐக்கிய முள்ளவனாயும் இருக்கிறான். இவனுடைய கூக்குரலும் கேட்டவர்க்கும் உடனே யிவனபேக்ஷையைப் பூரணம் பண்ணியல்லது குடியிருக்க வொண்ணாதபடி ஆர்த்தி தோற்றியன்றோ விருக்கிறது. சிலராலே சிலர்க்குப் பயம் பிறந்தால் அவர்களை யவர்கள் விட்டுப் போவார்களாகையால், இவன் ராவணனால் பயந்து அவனை விட்டு வந்தான். ஆகையால் அங்கீகரிக்க யோக்யன்.

தன் தாயான கைகேயி தான் சம்பராஸுரயுத்த காலத்தில் பெற்ற வரத்தினால் ஸம்பாதித்துத் தனக்குக் கொடுத்த ராஜ்யத்தையும் விட்டுக் காட்டில் பின்தொடர்ந்து வந்து 'உம்முடைய ராஜ்யத்தை நீரே கைக்கொள்ளும்' என்று நிர்ப்பந்தித்து, நமக்குப் ப்ரீத்யர்த்தமாகத் தனக்குப் பொருந்தாத ராஜ்யத்தை யேறிட்டுக்கொண்டு, நான் காட்டிற்பட்ட கிலேசத்தினுமதிகமாகப் படைவீட்டிலிருந்து அனுபவிக்கும் பரதனைப்போல ஸகோதரரும், அறுபதினாயிரமாண்டு மலடு நின்று பின்பு தவம் புரிந்து

என்னைப்பெற்று என்னைக்கொண்டு பிராணதாரணம் பண்ணிப் போந்து நான் வனவாஸம் வருகையில் என் பிரிவாற்றாமையாலே லோகாந்தரத்தை யடைந்த தசரத மஹாராஜரைப் போலத் தகப்பனாரும், ராஜ்யத்துக் குரியவனென்கிற முறையில் என் ஐயரால் ஸ்வேச்சாதத்தமாயிருக்கிற யௌவராஜ்யத்துக்கு இளையமாதாவால் விக்னம் பிறக்க அதில் விவாதம் பண்ணாதே பித்ருவசனத்தையே யாதரித்து நெடுநாள் வனவாஸம் பண்ணிப் போந்த என்னைப் போல ராஜபுத்திரரும், நீர் முன்வரக்கடவதாகப் பண்ணின ஸமயத்தை யல்ப மதிலங்கிக்க, அது பொறாதே நான் கோபித்து இளையவனையனுப்ப, அவனும் அதிகுபிதனாய்ச் சொல்லக்கடவ தல்லாத வார்த்தையைச் சொன்னவிடத்திலும், ஸத்தியத்தையே பார்த்து வந்த உம்மைப் போல ஸுஹ்ருத்துக்களும் புறம்பே யுண்டோ? ஆனபின்பு லோகவியவகாரத்தைப் பார்த்தா லிராவணன் தன்னை நலிவனென்று அவனை விட்டு இங்கே வருகையுங் கூடும்.''

இப்படி சரணாகதனான விபீஷணனிடத்தில் பெருமாளுக்குண்டான பக்ஷபாதாதிசயத்தைக் கண்டு, சுக்கிரீவ மகாராஜன் இளைய பெருமாளையுங் கூட்டிக்கொண்டு எழுந்திருந்து நமஸ்கரித்து விண்ணப்பஞ் செய்கிறான்.—தேவரீர், விபீஷணன் பண்ணின சரணாகதியைக்கண்டு மயக்கமுற்று நான் சொன்னவற்றைத் திருவுள்ளம் பற்றவில்லை; இப்போது நாங்களிருவருமாகச் சரணாகதி பண்ணி விண்ணப்பஞ் செய்கிறோம். கேட்டருளவேண்டும். இந்த நிசாசரன் இராவணனால் அனுப்பப்பட்ட தூதன்தான்; கள்ளரைப் போல மத்ய ராத்திரியிலே புறப்பட்டுப் பரஹிம்ஸை பண்ணிக்கொண்டு திரியும் ஜன்மமென்று இவன் தன்மை திருவுள்ளத்திற் படாமையினாலேயே இவன் நமக்கு ஸஹகாரியென் றருளிச்செய்

தது. பொறையுடைய பூமானே! இவற்றையெல்லாம் ஆராயுங்கால் இவனைக் கொலைசெய்வதே யோக்யம்; தேவ ரீருடைய க்ஷமாகுணத்திற்கு இந்த ராக்ஷஸன் விஷய மானவனல்லன். நீச ஜாதியானவிவன் ஸ்வஜாதிக்குக் காரியஞ் செய்வானேயல்லாமல் தார்மிகரான நமக்குக் காரியஞ் செய்யான். இந்த விபீஷணன், ராவணனாலனுப் பப்பட்டவனாகையால் தன் குடிலமான புத்தியால் அநு கூலன்போலவேயிருந்து தன்னிடத்தில் விசுவாசம் வரச் செய்துகொண்டு, நாம் சேர்த்துக் கொள்கையில் நம்மை உபத்ரவிக்கைக்காக இங்கே வந்தான். தோஷமுடையவ னானாலும் இவனை யங்கீகரிக்கத் திருவுள்ளமானால் ஸீதா தேவியையும் விட்டுப் பற்றும்படி ஸுஹ்ருத்துக்களில் சிரேஷ்டனாகத் தேவரீர் நினைத்திருக்குமென்னையும், தேவ ரீரை விட்டு க்ஷணகாலமும் தரிக்கமாட்டாத இளைய பெருமாளையும் இவன் உபத்ரவிப்பன். அப்போது ஒரு ராக்ஷஸனுக்காக எங்களிருவரையும் இழக்கவேண்டி வரும். ஆகையால், இந்தப் பொல்லாங்குகளொன்றும் வாராதபடி ஆலோசித்துச் செய்தருளவேண்டும். அன கனே! உம்முடைய திருத்தோள்களை யடுத்துக்கொண் டிருக்கிற வெங்களைச் சத்துருவின் கையிலே காட்டிக் கொடுக்கலாமோ? எங்கள் பக்கலிலே தண்ணளியும் அவன் பக்கலிலே தோள்வலியு மாகையன்றோ தகுவது. ஆகை யால் இவனையும் இவன் பரிஜனங்களையுங் கொல்வதே யுக்தம்.”

தான் போனவழியை யனுஸரித்துச் செல்லும் பரி கரத்தை யுடையவனும், ஸர்வ வசன வ்யக்திகளிலுமுள்ள குணதோஷங்களை யறியவல்லவனுமான சுக்கிரீவன் ஆர்த்த ரக்ஷகர்களில் தலைவனும் பிறருடைய அபிப்பிராய பூர்வக மாக வார்த்தை சொல்லவல்லவனுமான ரகுசிரேஷ்டனை

ஸ்ரீராமனைக்குறித்து இவ்வாறு சொல்லிப் பின்பு தன் சீர்மை யறியாதவரை நாம் சொல்லுவதுண்டோ வென்று பிரணய ரோஷத்தாலே மௌனமா யிருந்துவிட்டான்.

இவ்விதம் ஹரிபுங்கவனான ஸுக்கிரீவன் ப்ரேமாந்தனாய்த் திருவுள்ளமறியாமல் விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீராமன் கேட்டு இதற்குத் தகுந்த உத்தர மின்னதென்று விமர்சித்து, தன்சொற் கேட்டிலரென்ற கோபத்தாலே பேசாதிருந்த ஸுக்கிரீவனை நோக்கிச் சுபதரமான சில வார்த்தைகளை யருளிச்செய்யத் தொடங்கினான்:—“ரஜனீசரனான இந்த விபீஷணன் நீர் சொன்ன வண்ணம் துஷ்டனானாலென்ன? நான் சொன்ன வண்ணம் துஷ்டனாகாவிடிலென்ன? இவை யிரண்டும் அப்ரயோஜகம். ஏனெனில், சரணாகதனானவன் பக்கலிலே அநேக பிரகாரங்களாகத் தோஷங்களைச் சொன்னீரே யாகிலும், துஷ்டனென்று என் நெஞ்சிற் படமாட்டாது; உமக்கு மறுமாற்றமில்லாதபடி ஹேதுக்களாலே இவனுடைய தோஷமின்மையை யேற்றித்தந்தாலும், இடமில்லாவிடத்தில் பயமுறுகின்ற உம்முடைய நெஞ்சிற் படமாட்டாது. நீர் நினைத்தபடியே பாதகனாய் வந்தவனாயிடுக, ஹிதமாத்திரனான விவன், நமக்கென்ன வபகாரம் பண்ணுவான்? இவனுக் கஞ்சின நீர் எங்ஙனே இராவணவதம் பண்ணக் கடவதாக எடுத்து விட்டிருக்கிறபடி? நம் தோள்வலியைக் கண்டால் நெஞ்சாலுமோரஹிதத்தை இவன் பண்ணச் சக்தனல்லன். ஆகவே, ஓ ஸுக்கிரீவனே! இந்த விபீஷணனைக்குறித்து நீரே னிப்படி பயப்படுகிறீர்? இந்த பஞ்சாசத் கோடி யோஜனம் பரப்புள்ள பூமியிலிருக்கும் ராக்ஷஸர்களனைவருமே சேர்ந்து வந்தாலும், இன்னமும் அப்படி க்ரூரர்களான பிசாசங்களும், அஸுரர்களும், யக்ஷர்களும் கூடி யிவர்களுக்குச் சகாயமாய் வந்தாலும்

இவர்களைக் கொஞ்சமும் மதியேன். இவர்களைக் கொல்ல நினைத்தால் ஆயுதமும் வேண்டா; நுனிவிரலினால் புழுக் களைப்போலத் தேய்த்து விடுவேன்.

பக்ஷிகளைக் கொன்று ஜீவிக்கிற ஸஹஜ சத்துருவான ஒரு கிராதன் ஒருகால் மழையிலகப்பட்டுக் குளிரினால் கைகால்கள் விறைத்து ஆஹாரத்தைத் தேடவு மசக்தனாய் இருளினால் வழிதப்பி யோர்மரத்தடியில் வந்து சேர, அம்மரத்திலிருந்த புறா, தன் பேடையைப் பிடித்துக்கொண்டு போனவனென்று தெரிந்திருந்தும் அதைக் கணிசியாமல், தான் வஸிக்குமிடத்தில் வந்து அல்லற்படுகின்ற தன் சத்துருவான வேடனைக்கண்டு, மிகவு மிரக்கமுற்று, அவன் துன்பத்தைப் போக்க நினைந்து, மூக்கினாலுலர்ந்த கொம்புகளைப் பொறுக்கிச் சேர்த்து நெருப்பைமூட்டி அவனுக்குச் சீதளத்தைப் போக்கிப் பின்பு தானுமத்தீயில் விழுந்து, தன் மாம்ஸங்களினால் அவனைத் திருப்திபண்ணி வைத்தது. இந்த இதிஹாஸத்தை நீருங் கேட்டிருப்பீர். ஞான சூனியமான பக்ஷி, தனக்கு வைரியாயினும் சரணமடைந்த வேடனைத் தன் பிராணன்களைக் கூட விட்டு ரக்ஷித்திருக்க, பகைவனது தம்பி சரணமென்று வந்தால் இக்ஷ்வாகு குலத்திற் பிறந்து எந்த விரோதம் வரினும் போக்கச் சமர்த்தனாயிருக்கிற நான் எப்படி விட்டுவிடலாம்? நன்றா யாலோசனை செய்யும். உடலில் நின்று முயிரைப் பிரித்தாற்போல அந்தப் புறாவின் பேடையை வலையினாற் பிடித்துக் கொண்டவன் தானிருந்த விடத்துக்கு வந்த மாத்திரத்தினால் ரக்ஷித்திருக்க நான் என்னை செய்ய வேண்டுமோ சொல்லும். வேடனைக்காட்டிலும் விபீஷணனுக் குண்டான தோஷம் கொஞ்சம்; குணங்கள் மிகவுமதிகம்; புறாவைக்காட்டிலும் எனக்கு ஞானமும் சக்தியும் அதிகம்; செய்ய வேண்டும்

காரியம் அத்யல்பம். புறவைப்போல் நான் பிராணனை விடவேண்டுவதில்லை. நான் ரக்ஷியாவிடினும் ஹிதமறிந்த வானரர்களில் தலைவரான உமக்கு இப்படி சொல்வது தகுமா?

இவ்விஷயத்தில் ஞானமில்லாத பக்ஷியின் நடத்தையே யல்லாமல் ஸம்பூர்ண ஞானத்தை யுடையவரும் வாய்மை பிழையாதவருமான கண்வ புத்திரரான கண்டு மஹாமுனிவரால் சொல்லப்பட்ட காதையுமுண்டு. அதைச் சொல்லுகிறேன் கேளும். சத்துருவாகிலும் தன்னிருப்பிடத்துக்குவந்து காயிகப்பிரபத்தியான அஞ்சலியை யாவது, மானஸிகப் பிரபத்தியான ஆதரத்தை யாவது, வாசிகப் பிரபத்தியான பிரார்த்தனையையாவது செய்தால் அவனை யெவ்வளவுங் கொல்லக்கூடாது. எவனாவது சாஸ்திரமறியாமல் கொன்றால் அவனைக்கண்டு ஜனங்கள் இவன் நிர்த்தயனென்று பயப்படுவார்கள்.

(இன்னும் வரும்.)

பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.

பழிக்குப்பழி.

பழிச்சொல்லிற் பாதி யுண்மையிருக்கும் என்பது உண்மை மொழியென்பது விசதமாகின்றது. மனத்திலிருக்கும் தீய எண்ணம் வெளியே தோன்றும். இது விஷயத்தை உண்மையான பெண் எவளும் இவ்வளவு சீக்கிரத்தில் எளிதில் அறியமாட்டாள். இவள் தீயவளாகையால் நேரக்கூடிய தீமையை முன்னமேயே அறிந்து கொண்டாள். என் மனைவி———ஐயோ! அவளை அவ்விதம் எழுதவேண்டியிருக்கிறதே!—சுபாவமாகத் தீயவள். குருடரான உலகோரின் நல்லெண்ணத்தையடைய எவ்வளவு ஆவலுடையவளாக இருக்கின்றாள். எளிய உலகமே! எவ்வளவு சுலபமாய் ஏமாந்து விடுகிறாய்? என்னைச் சுற்றிப் போட்டிருக்கும் பொய்யாகிய பிரிய வலையைச் சிறிது சிறிதாக நீக்கிக் கொள்ள வேண்டுமென்றே!

"நான் இங்கிருக்கும்போது உன்னை ஏளனமாக எவரும் பேச விடுவேனோ? ஆனால் சந்திரவதனனிடம் உனக்குப் பிரியமில்லாதிருந்தால்———"

"அவனிடம் எனக்குப் பிரியமில்லை. அவன் மூடன். அவனைக்கண்டால் எனக்குப் பயம். பிரியமில்லை."

"அப்படியானால்—சந்திரவதனனுக்காக வருந்துகிறேனாயினும்——அவன் மிகுதியும் ஏமாந்து விடுவான். மற்றவிஷயங்களில் நான் சந்தோஷப்படுகிறேன். ஏனெனில்——"

"என்ன?"

"ஏனென்றால் உன்னைப்போன்ற அழகுடைய பெண்மணியை யடைய மற்றைய மனிதர்க்கு இடனுண்டாகிறதால்."

"அந்தத் துஷ்டனுயிருடனிருக்கும் வரைக்கும் மற்றைய மனிதர்க்கு இடங்கொடான். அவன் என்னை அடைகாக்கிறான். அவன் இங்கு வருமுன் வேறு ஊருக்குப் போவதாக எண்ணியிருக்கிறேன்."

"என்னத்திற்குப் போகவேண்டும்?"

"நான் முன்னமேயே சொல்லிய வண்ணம் அவனைக்கண்டால் எனக்குப் பயம். தாங்களிருக்கும் போது யான் தைரியமாக இருக்கலாமென்றாலும்———"

இது தான் சமயம் வாய்த்துவிட்டது. முயற்சி செய்யவேண்டும்.

"என் துணையை நீ வேண்டுமானல் எப்பொழுதும் அடையலாம்" என்றேன்.

"புருஷோத்தமரே! என்ன சொல்கின்றீர். தாம் சொல்வது ஒன்றுந் தெரியவில்லை." என்று ஹேமாங்கினி எழுந்து நின்றாள்.

"நான் நினைப்பதைச் சொல்லுகின்றேன். என் துணையை எப்போதும் அடையமுடியாது என்றல்லவா சொல்லுகிறாய். என் பாதுகாப்பை—என் மனைவியாக விருந்து——எப்பொழுதும் அடையலாம்". என்று சொன்னேன்.

"என்ன."

"பெண்மணி! நம் இருவர்க்கும் உள்ள வயது வித்தியாசத்தை நான் நன்றாக உணர்கின்றேன். எனக்கு இளமையாவது, வலிமையாவது, அழகாவது உன்னை அடைவதற்கு, இல்லை. யான் அடைந்த வருத்தம் என்னை இவ்விதமாக்கியது. ஆனால் என்னிடம் அளவற்ற செல்வமிருக்கின்றது. எனக்கு கவுரவமும் அந்தஸ்தும் இருக்கின்றன. இவைகளல்லாமல் உனக்கேற்றதைச் செய்ய வேண்டும் என்னும் ஆசையுடையவனாகவிருக்கிறேன். என்னுடன் இன்பமாக விருக்கலாமென்று உனக்குத்தோன்றுமாயின் வெளிப்

படையாகச்சொல். என் காதலுடன் இளமையை உனக்குத் தர வல்லனல்லேன். என் இரத்தக்கொதிப்பு அடங்கிவிட்டது. ஆனால் என்னால் செய்யக்கூடியதை அவசியம் செய்கிறேன்."

"ஆனால் உண்மையாக என்னைக்காதலிக்கின்றீரா?" என்று என் தோள்கள்மீது தன்கையை வைத்தாள். அப்பொழுது அவளை இறுகக்கட்டியணைத்து முக முழுதும் முத்தமிட்டுக்கொள்ள எண்ணங்கொண்டேன். மறு விநாடியில் என்னமூட எண்ணங்கொண்டேன் என்று வெறுத்துச் சும்மாநின்றேன். அவள் தன் கையை எடுத்துக்கொண்டு,

"நீர் என்னைக் காதலிக்கவில்லை. என்னிடம் பிரியமே உமக்கு இல்லை. ஆனால் நான் உண்மையைச் சொல்லுகிறேன்—நான் உம்மைக் காதலிக்கிறேன்."

அவள் சொல்லியது பொய்யென நன்றாய் உணர்ந்தனனேனும் அவள் கையைப் பற்றிக்கொண்டு,

"உண்மையாகவா என்னை விரும்புகிறாய்" என்று பன்முறை கேட்டேன்.

அவள் சிரித்து "உண்மையாக உம்மைக் காதலிக்கிறேன். நான் உம்மைக்கண்ட நாள் முதல் காதலிக்கிறேன். என்னுடைய புருஷனையும் காதலிக்கவில்லை. அவனைவிட உம்மிடம் எனக்கு அடங்காதகாதல் எழுகின்றது. நீர் நம்பினாலும் சரி. இல்லாவிடினும் சரி. உலகத்திலிருப்பவர்கள் எவரினும் உம்மைத்தான் யான் எப்பொழுதும் விரும்புகிறேன்."

"ஆனால் நீ என் மனைவியாக விருப்பாயா?"

"ஆம்." "ஆயின் சரி."

மின்னலைப்போல என்னை இருகரத்தாலும் கட்டியணைத்துக்கொண்டு தன் முகத்தை மேல் நோக்கியவண்ணம் "என்னை முத்தமிட்டுக்கொள்ளுங்கள்" என்றாள். அவள் விரும்பிய வண்ணம் பொய் பிதற்றும் அதரங்களில் முத்தமிட்டுக் கொண்டேன். ஆம். விஷம் நிறைந்த பாம்பின் அதரத்தை முத்தமிட்டுக் கொண்டிருக்கலாம். எனினும் அந்த முத்தம் இன்பத்தை விளைக்காமல் கோப

த்தை விளைத்தது. அவளைக் கட்டியவண்ணம் ஓர் நாற்காலியில் உட்கார்ந்தேன்.

"என்னை உண்மையாகக் காதலிக்கின்றாயா?" என்று மறுபடியும் கேட்டேன்.

"ஆம்."

"நீ விரும்பும் புருஷர்களில் நானா முதல்வன்?"

"நீர்தாம்."

"சந்திரவதனனைக் காதலிக்கவில்லையா?"

"இல்லை."

"நான் முத்தமிட்டுக்கொண்டதைப்போல அவன் முத்தமிடவில்லையா?"

"என்றும் ஒரு விசை கூடவில்லை."

ஏ! தெய்வமே! என்ன பொய்வருஷங்கள்? எவ்வளவு உண்மையெனச் சொல்லப்படுகிறது? என்றும் ஒருவிசையா கூடவில்லை, கடைசியில் உண்மையே வெளியாயிற்று. நான் முன்னர்——முன் ஜன்மத்தில்—அவள் கையில் என் பிரியத்தினறிகுறியாக அணிந்திருந்த வைரமோதிரத்தைக் கழற்றிக்கொண்டு பதின்மடங்கு விலையில் மேன்மையான ஓர் ஆழியை அணிந்தேன். அந்த மோதிரத்தைக் கண்டு மிகுந்த ஆனந்தத்துடன் மறுபடியும் என்னைத்தழுவினாள்.

"இது விஷயத்தைச் சந்திரவதனனுக்கு நீங்கள் தெரிவிக்கலாகாது."

"அவன் திரும்பிவரும் வரையில் சொல்லேன். தெரிவித்தால் இப்பொழுதே மதுரையினின்றும் ஓடி வருவான். அவன் வரவேண்டாமே!" என்று அவளை உற்றுப் பார்த்துக் கேட்டேன். சிறிது நேரம் மறுமொழி சொல்லவில்லை. ஆ! ஆ! தன்னுடைய பழைய நாயகனுடைய கரங்களே. ஆம். தான் ஏமாற்றி மோசஞ் செய்த நாயகனுடைய கைகளே—தன் காதலுக்கு இடையூறாக நின்ற புருஷனுடைய கைகளே — இறந்ததனால் இன்பத்தை விளைத்த மணவாளனுடைய கரங்களே தன்னை அணைத்திருப்பதாகத்

தெரிந்தனளாயின் இவ்வளவு இனிமையுடன் நகைப்பாளோ? அப்பொழுது என்னை முத்தமிட்டுக்கொள்வாளோ?

* * * * *

"பிறகு எனக்கு ஒரு உபகாரம் செய்வீரா? ஆம் எனக்கு மிகவும் இன்பம் விளைக்கும் ஒரு செய்கையை——"

"என்ன என்ன? உன் கட்டளைக்கு யான் கீழ்ப்படியச் சித்தனாக விருக்கின்றேன்."

"தாம் தரித்திருக்கும் புகைக் கண்ணாடியை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்."

"பிரியமுள்ள கண்மணி! அதைத்தவிர வேறு எதையேனுங் கேள். சிறிதுகாலமான பிறகு அதை எடுத்து விடுகிறேன். பிரகாசம் எவ்வளவு சிறிதாயினும் சகிக்கமுடியவில்லை. ஆகையால் அதை எடுக்கமுடியாமலிருக்கிறது. உன் வேண்டுகோளைப் பூர்த்திசெய்ய முடியவில்லையே யென்று வருத்தப்படுகிறேன்."

"ஆனால் எப்போது அதை எடுத்து விடுகிறீர்கள்?"

"நாமிருவரும் ஸ்திரீபுமான்களாகவிருக்கும் இரவன்று."

"அத்தனைக்காலத்தின் பிறகா?"

"என்னத்திற்குக் காலதாமதம்?"

"என் புருஷனிறந்து இன்னும் மூன்று மாதங்களாகவில்லையே. மேலும் என் கல்யாணி இறந்து ஒரு மாதமும் ஆகவில்லையே."

"இது காரணங்களுக்காகத்தான் நீ வேறு ஒரு துணைவனைச் சீக்கிரம் அடையவேண்டும்."

"அப்படியானல் உங்கள் இஷ்டப்படி நடக்கிறேன்."

"ஆயின் நேரமாகின்றது யான் போய் நாளை வருகின்றேன். பெண்மணி! இப்பொழுதே யான் தெரிவிக்கிறேன். வியாதியஸ்தனாகிய என்னை நீ விரும்பியிருக்கிறாய். உன் இளமைக்கு ஒரு வைரியாக யானிருக்கிறேன். யோசனை இன்றி அவசரமாக ஒரு காரியமும் செய்யாதே."

"என்னை அடைந்ததும் உங்கள் வியாதியெல்லாம் ஒழிந்து விடும். யான் அவைகளை நெருங்கவொட்டாமல் ஒழித்துவிடு கிறேன்."

என்னை உற்றுப்பார்த்தாள். நடுக்கங்கொண்டாள். *உங்களைப்பார்க்கும்போதெல்லாம் என் பழைய புருஷனின் சாயலென நினைத்துப் பயப்படுகிறேன்." என்று நடுக்கத்துடன் சொன்னாள். உடனே, "என்னைக்கண்டதும் பயமாயிருந்தால் இப்பொழுதே சொல்லிவிடு." என்றேன்.

"வருத்தப்படவேண்டாம். ஏதோ தெரியாமையால் பிதற்றினேன். உண்மையாக உம்மிடம் எனக்குப் பயமில்லை. உலகமே மாறினாலும் தம்மிடம் பாராட்டும் காதலை மாற்ற முடியாது."

"ஆனால் சரி. நம்முடைய நட்பை இரகசியமாகவா பாதுகாக்க வேண்டுமென்கிறாய்?"

"ஆம். சந்திரவதனன் அறியலாகாது. அவன் கொடியவன்."

"அப்படியே" என்று யான் என் இருப்பிடத்தை நோக்கிச் சென்றேன்.

(இன்னும்வரும்.)

சருக்கை இராமசாமி ஐயங்கார்.

வேதாந்தம்.

(ஸ்ரீ அபேதானந்த ஸ்வாமிகள் அமெரிக்காவில் செய்த உபந்நியாசத்தின் மொழி பெயர்ப்பு.)

வேதாந்த சாஸ்திர மென்பதற்கு வேத ஸம்பந்தமான அல்லது இந்தியாவில் வழங்கும் புண்ணியமான சாஸ்திரமென்று மட்டும் அநேகர் ஓர் தப்பபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். "வேதம்" என்பது யாதொரு புத்தகத்தையும் குறிக்கமாட்டாது. "வேதம்" என்பதற்கு "ஞானம்" என்றும் "அந்தம்" என்பதற்கு முடிவு என்றும் பொருள். ஆதலின், வேதாந்த மென்பதற்கு "ஞானமுடிவு" என்பதே பொருள். அந்த சாஸ்திரம் "முடிவு" இன்னதென்பதையும் அந்த முடிவை யடையும் வழி இன்னவென்பதையும் விளக்குவதால் அதற்கு "வேதாந்தசாஸ்திரம்" எனப் பெயர் வாய்த்தது. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு முள்ள ஒற்றுமையை யறிவதே பலவகைப்பட்ட அறிவின்முடிவு. எந்த ஸத்தை நாம்

முடிவாய் அறிகிறோமோ அதுதான் ஸர்வ வியாபியான ஆத்மா. அதுதான் கரையிலா ஞானக் கடல். பல்லாயிரம் மைல் ஓடிச்செல்லும் நதிகள் முடிவில் கடலிற்போய்ச் சேர்வதுபோலப் பிரபஞ்சத் தோற்றத்தில் பல்வழியுஞ் சென்றலையும் அறிவுநதிகள் முடிவில் கரையற்ற அகண்ட ஸச்சிதானந்த பிரேமைக்கடலிற்போய்ச் சேர்கின்றன.

இந்த ஒற்றுமையை யறிவதே சரியான எல்லா மதத்தினுடையவுங் கருத்தாதல் வேண்டும். ஆரிய ரிஷிகள் அறிந்த அளவு தெளிவாய் அறிந்தவர்களேனும், அவர்கள் வெளியிட்டதுபோல் நிர்ப்பயமாய் வெளியிட்டவர்களேனும், வேறெந்நாட்டிலும் எக்காலத்திலும் நாம் அறிந்தமட்டில் மதஸம்பந்தமான சரித்திரத்தில் இல்லை. "ஸத் ஒன்றே. ஆனால் அதனை யடையும்வழி பல" என்ற உத்கிருஷ்டமான கொள்கை சுமார் சென்ற 5,000 வருஷகாலமாக இந்திய நாட்டிலே யுள்ளது. "உள்ளது ஒன்றே. அதனைப் பெரியோர்கள் பல பெயரிட்டழைக்கின்றனர்"

एकंसत् विप्रा बहुधा वदन्ति ।

என்பதை வேதங்களுட் புராதனமான ருக்வேதத்தினுட் காண்கிறோம். அந்த ஸத்தை யூதர்கள் "ஜிஹோவா" என்றும், "தேவன்" அல்லது "பரமண்டலத்திலிருக்கும் பிதா" என்றும் மகம்மதியர்கள் "அல்லா" என்றும், க்ஷபணகர்கள் "ஜினன்" என்றும், பௌத்தர்கள் 'புத்தன்' என்றும் வணங்குகின்றார்கள். அதனையே ஹிந்துக்கள் "பிரஹ்மம்" என்கிறார்கள். வேதாந்த சாஸ்திர முழுதும் அவ்வடிப்படியான தத்துவத்தையே ஆதாரமாய்க்கொண்டுள்ளது. "பல பெயர்களால் வழங்கினும் உள்ளவஸ்து ஒன்றுதான்" என்ற நியாயத்தை மற்றை மதங்களினும் அதிகமாக அது வற்புறுத்துகின்றது. துவைதம், விசிஷ்டாத்வைதம் என வழங்கும் பலவிதமான கொள்கைகளினும் மற்ற

வைகளிலுமில்லாத அடிப்படி அதனிடங் காணப்படுகின்றது. அதனால் பல மதங்களையும் ஒப்பிட்டு உய்த்தறியுங் கல்விமான்கள் இவ்வுண்மையைத் தெளியத் தொடங்கி விட்டார்கள்; ஆராய்ந்தறியின் உலகில் வழங்கும் பல மதங்களையும் தன்னுள் அடக்கிய ஓர் பொதுமதத்தை நிலை நிறுத்துவது வேதாந்தத்தின் இயல்பு. இன்னாரெனக் குறிப்பிடக்கூடிய ஒருவரையு மனுஸரித்து அது ஏற்படாததால் ஸர்வஸம்மதமான இவ்விந்தையான இயற்கை இன்னும் விந்தையாகின்றது. ஒருவனை யாதாரமாகக்கொண்டு ஏற்படும் எந்தமதமும் எந்த சாஸ்திரமும் யாவரும் தழுவும் மதமாக இயைந்துவராது. எந்த சாஸ்திரமாயினும் மதமாயினும், யாவருந் தழுவுந் தன்மையதாய் இருக்க வேண்டின் எவனேனு மொருவனைச் சிறிதுங் குறிப்பிடா திருக்கவேண்டியது இன்றியமையாததாகும். ஓர் மதஸ்தாபகன் இன்னானென்று ஏற்பட்டுவிட்டால் கிறிஸ்து மதம், மகம்மதியமதம், பௌத்தமதம் முதலிய அந்த அந்த மதங்களில் நாம் காண்பதுபோல் அவற்றை யுண்டாக்கினவர் பெயரையும் நினைவையு மட்டும் அனுஸரித்து வருமல்லது ஸர்வ ஸம்மதமாகமாட்டாது. இந்தப் பெரிய மதங்களைத் தழுவி நடப்போர் மதத்தின் தத்துவஸாரங்களை மறந்து ஸ்தாபகனிடம் அபிமானம் வைத்து மற்றவற்றைக் கருதாது போகின்றார்கள். இதுவே மதஸம்பந்தமான சரித்திரங்களில் நாம் காணும் வரம்பிலா வாதத்திற்குக் காரணமாகின்றது.

வேதாந்த விஷயமோ பல்முக முள்ளது. தன் தெய்வமெனக்கொண்டாடி வணங்கவும் ஏதேனு மொருவிதக் கொள்கையிற் பற்றுவைக்கவும் இடங்கொடுக்கும். ஜரதஷ்டர்மதம், யூதமதம், கிறிஸ்துமதம் முதலிய மதங்கள் போன்ற துவைதம் அத்துவைதங்களிலுள்ள அடிப்படி

(அல்லது முதன்மையான) நியாயங்களும் அந்தப் பன்முகத்தி லடங்கியுள்ளன.

விசிஷ்டாத்வைத பாகமோ பகவானுடைய ஸர்வ வியாபகத்துவத்தையும், ஸர்வத்திற்கும் அப்பாலாயுள்ள தன்மையையும் போதிக்கிற எல்லா சாஸ்திரக் கோட்பாடுகளையு மனுஸரித்திருக்கிறது. "பகவான் நம்மிடத்திலும் பிரபஞ்சத்திலும் விளங்குகின்றார். நாம் இருப்பதும், நகர்வதும், வளர்வதும், உண்டானதும் பகவானிடத்திலேயே. அவர் ஆன்மாக்களுக்கெல்லாம் ஆன்மா. அவர் விபு; நாம் அணு; நாமெல்லாம் அவர் புத்திரர்கள். நித்தியானந்தத்தின் திருக்குமாரர்கள்."

இத்தகைய அபிப்பிராயங்களையெல்லாம் விசிஷ்டாத்வைதமானது தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், வேதாந்தத்தின் அத்வைதபாகமோ எல்லாவற்றினு மேம்பட்டது. ஸர்வோத்கிருஷ்டமானது. இவ்வித ஆத்மாவின் அத்வைதத் தன்மையின் சிறப்பையும் உயர்வையும் அறியக்கூடிய புத்திமான்கள் மிகச் சிலரே. ஸகல சாஸ்திரங்களாலும் ஏற்படும் பிரச்னங்களுக்கும் முடிவாகிற முக்திக்கும் முறையே உத்தரங்களும் சாதனங்களும் இந்த அத்வைதத்தில்தான் நன்றாய்ப் புலப்படுகின்றன. அத்துவைத ஞானத்தினால்தான் "நானும் என் பிதாவும் ஒன்று" என்பதைப் பரிஷ்காரமாக நிரூபிக்கக்கூடும். வேதாந்தமானது சாஸ்திர ஸம்பந்தங்களையும் மதக்கோட்பாடுகளையுந் தழுவி நிற்பது. கிரீக் தேசத்திலும் ஜர்மனி தேசத்திலும் வெவ்வேறான சாஸ்திரக் கொள்கைகளிருப்பது உண்மையே. ஆனால் அவைகளிலொன்றேனும் மனிதனது மனத்தில் நிகழும் மதக்கோட்பாடுகளுக்கு இணங்கி வருவதில்லை. நிர்விகற்ப ஸமாதி (பிர்ம்மானந்தம்) அடைந்து அஞ்ஞானம், தன்னயங்கரு

தல், மற்றுமுள்ள துர்க்குணங்களை விலக்க எப்படி வேதா ந்த சாஸ்திரம் யுக்திக்கிணங்க வழிகாட்டுகிறதோ அப்படி மற்றவைகள் காட்டுவதில்லை. யுக்திக்கொவ்வாத எதை யேனும் அல்லது தர்க்கமுதலான சாஸ்திரங்கள் ஸம்மத மில்லாத எதையேனும் ஒப்புக்கொள்ளும்படியாவது அநு ஸரிக்கும்படியாவது வேதாந்த சாஸ்திரம் சொல்லுவது மில்லை. இந்தியாவிலோ தர்க்கம், கலைகள் மற்றெவைக ளும் ஒன்றுவிட்டொன்று பிரியக்கூடாத ஸம்பந்த முள் ளவைகளென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இத னால்தான் புராதனமாயுள்ள வேதாந்த சாஸ்திரம் தற்கால பற்பல சாஸ்திரங்களுக்கும் ஒத்துவருமேயல்லாமல் சற் றேனும் விரோதமாயிருப்பதில்லை. பரிணாமவாதத்தை (Evolution Theory) வேதாந்த சாஸ்திரம் புகட்டுகின் றது. இனி வருங்காலத்தில் கண்டுபிடிக்கவேண்டியிருக் கும் எல்லா வுண்மைகளுக்கும் தன்னிடத்திற் போதுமான இடங்கொடுக்கின்றது. ஒவ்வொரு மதத்திற்கும் முடிவில் லக்ஷ்யமான வஸ்து எதுவோ அதற்கு இன்னதுதான் வழியென்று விதிக்காதது வேதாந்த சாஸ்திரத்தின் மற் றோர் விசேஷம். இன்னும் விசேஷம் யாதெனில் மனித ர்கள் பலவாறான தன்மையோடிருப்பதால் அவரவர்கள் மனோபாவத்திற்கேற்பப் பொருந்திய வழியைக் காட்டு கிறது. மனிதர்கள் அவரவர்கள் மனோபாவத்திற்குத் தக்கபடி நான்கு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட, அப் பிரிவுகளுக்குள்ளும் அப்பிரிவினுட் பிரிவுகளுக்குள்ளும் ஸகல மனிதர்களும் வந்தடங்குவார்கள். ஒவ்வொரு வகுப் பினர்க்கும் அவ்வவர்களுக்குத் தக்கபடி மேற் சொல்லக் கூடிய வழிகளையுங் காட்டுகின்றது. ஒவ்வொரு வழிக் கும் ஸம்ஸ்கிருதத்தில் யோகம் எனப் பெயர்.

அவற்றுள் முதலாவது கர்மயோகம் எனப்படும். அது சுறுசுறுப்புள்ளவர்களுக்கும் தொழில்புரிய மனமு

ள்ளவர்களாய்ப் பிறர்க்கு உதவிபுரிய எப்பொழுதும் ஏதேனும் ஓர் காரியம் செய்பத் தயாராயிருக்கப்பட்டவர்களுக்குமாக ஏற்பட்டுள்ளது. சுருங்கச்சொல்லின் ஸதா உழைக்கத் திறமுடைய ஆண்பாலருக்கும் பெண்பாலருக்கும் இக்கர்மயோகம் ஏற்பட்டிருக்கிறது. கர்மயோகத்தினால் கர்மத்தின் உட்கருத்தையும் ரகசியத்தையும் அறியலாம். தினந்தோறும் நாம் செய்யும் எத்தொழிலையும் எவ்வாறு பலாபேக்ஷையில்லாத கர்மமாகச் செய்துகொள்ளலாமென்பதையும் இப்பிறவியில் கர்மமட்டுமே புரிந்து எவ்வாறு முக்தியை யடையலாமென்பதையும் கர்மயோகம் நமக்கு நன்குணர்த்துகின்றது. உழைக்கும் மனமுடையோர் அற்பசிரமமெடுத்துக்கொண்டால் பெருந்தொழிலையும் முடிக்கலாமென்பதைக் காட்டுவதால் அனுபவத்திற்கும் வரக்கூடியது. அவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. ஐயா அல்லவினால் இந்நாட்டில் பெரும்பாலோரது மனத்தீவிரஞ் சிதறிப்போகின்றது. மனவலியின்மையே யிதற்குக்காரணமன்றோ? கர்மம் எவ்வாறு செய்யவேண்டுமென்னும் ரகசியத்தை யறிவரேல் மனவலிமையை வீணே சிதறவிடாமல் ஆயுளையும் நீடிக்கச் செய்யலாம். கர்மயோகம் மேற்கூறிய உண்மைகளை யெடுத்து விளக்கி நிக்கிரக சக்தியையடைய வழியைக் காட்டுகின்றது.

இரண்டாவது பக்தியோகம். அது மனவுருக்கமுள்ளவர்களுக்கே யேற்பட்டது. ஸாதாரணமான உருக்கம் எவ்வாறு உயர்ந்த பக்தியுருக்கமாய்ப் பெருகியெல்லா மதங்களின் முடிவினது துணிவை யறிவதற்கு எவ்வாறு ஸாதனமாகு மென்பதைக் காட்டுகின்றது. சுருங்கச் சொல்லில் பக்தியும் பிரேமையும் நிறைந்த வழியாம். பக்திமுறை யின்னதென்று எடுத்துவிளக்கி மானி

டரிடம் செலுத்தும் அன்பு எவ்விதம் தெய்வத்தினிடம் மாறி இகபர மிரண்டிலும் பிறவிப்பயனை யெவ்வாறு கொடுக்குமென்பதையுங் காட்டுகின்றது.

மூன்றாவது ராஜயோகம். அது மனத்தை யொரு நிலைப்படுத்தித் தியானஞ்செய்யும் மார்க்கம். அதைப்பற்றிய விஷயமோ மிகவும் விஸ்தாரமானது. அது மனத்தைப் பற்றியதேயாம். அந்த யோகத்தால் மனத்தின் சக்தியை விருத்தி செய்து பிறர் மனநிகழ்ச்சியை யறிதல், மனவலியால் நோயைத்தீர்த்தல், உலகைந்தவரால் அற்புதங்களென்று சொல்லக்கூடிய எல்லாத்தொழில்களையும் புரிதல் கூடும். இந்த யோகத்தால் ஏசுகிறிஸ்துவும் அவர்களுடைய சீடர்களும் செய்ததாகத் தெரியவரும் ஸகல அற்புதங்களையும் நம் ஆரிய ரிஷிகள் இவர்களுக்கு வெகுநாளைக்கு முந்தியே செய்து காட்டியதுமன்றி யிப்பொழுதுஞ் செய்கின்றார்கள். இராஜயோகம் மனத்தின் வல்லமைகளையும் அதன் பகுதிகளையும் நன்றாக எடுத்துக்காட்டி அவைகளைக்கொண்டு ஓர் சாஸ்திரம் உண்டாக்குகிறது. ஸ்வாஸ லக்ஷணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது. பிராணாயாமப் பழக்கத்தால் உண்டாகும் பயனை மேனாட்டில் மனோவல்லமையால் நோயைத்தீர்க்குமவர்கள் அறியாமலிருக்கவில்லை. இராஜயோகம் மனோவல்லமையையும் அதனாலடையும் கீர்த்தியையும் செய்யக்கூடும் பல அற்புதங்களையும் சாஸ்திரமுறைப்படி யெடுத்தாளினும் அவ்வல்லமை யடைவது பிர்ம்ஹஞானத்தை யடைவதற்கு ஸாதனமாக மாட்டாதென்று வற்புறுத்துகின்றது. இவ்வாறு அற்புதச் செய்கைகள் பிர்ம்ஹஞானத்திற்கு ஸாதகமாக மாட்டாவென்னும் பரமோபதேசத்தை மனவலியால் நோயைத்தீர்க்குமவர்களும் இந்நாட்டுக் கிறிஸ்துவ சாஸ்திரிகளும் நம் பரதகண்டத்து

யோகிகளிடத்துக் கற்கவேண்டிய தவசியமான விஷயம். மனோசக்தி யுறுதிப்படுவதற்கு முன்பே அல்பபுத்தியுள்ளவர்களும் மதியீனர்களும், பிர்ம்ஹஞான நேர்வழியை விட்டு விலகுகிறார்கள். தன்னிடமுள்ள சுவல்ப சக்தியால் வயிற்றுவலி முதலிய பிணிகளைத் தீர்க்கிறோமென்பதைக் கொண்டு உயர்வான பிர்ம்ஹ ஞானத்தையே பெட்டிவிட்டதாக எண்ணுகிறார்கள். அற்புதங்களைச் செய்தும், மனோவலியால் பிணிகளைத்தவிர்த்தும், வருவாய்க்குக் காரணமாக இச்சக்திகளை யேற்படுத்திக் கொள்வதும் பிர்ம்ஹ ஞானத்தை யடையப் பெரிய இடையூறென்று ராஜயோகம் முறையிடுகிறது. அந்த ராஜயோகத்தின் முக்கியமான கருத்து யாதெனின் அதை யப்பியசிப்பவர்கள் மனத்தை இதரவழிகளிற் செல்லாது ஒரு நிலை நிறுத்தித் தியானஞ் செய்ய மார்க்கங்களையும் உபாயங்களையுங் கற்பித்து ஜீவாத்மா பரமாத்வாவுடன் கலந்து அகண்ட ஸச்சிதானந்தத்தை யனுபவிக்கும் உயர்ந்த பதவியை யடையச் செய்வதேயாகும்.

நான்காவது ஞானயோகம். இது ஐயந்திரிபிலா அறிவாலும் பகுத்தறிவாலும் உண்டாக்கிய மார்க்கம். நுண்ணறிவும் பகுத்தறிவு முள்ளவர்களுக்கே யேற்பட்ட வழி. வேதாந்த விஷயம் எவ்வளவு விஸ்தாரமான தென்பதை நாம் இப்பொழுது ஒருவாறு சிறிது அறியக்கூடும். பிர்ம்ஹ வித்தைக்குத் தகுதியான ஆதாரமிவையென் எடுத்துரைக்கின்றது. சரீரம்போன பிறகும் ஆத்மா நித்யமென்பதையும், அதனது நிலையின்னதென்பதையும், எவ்வித ஆத்மா நம்முடன் கலக்குமென்பதையும், அதன் பிறகு அது எவ்வாறு ஆகின்றதென்பதையும், பற்றகலா ஆத்மா கர்மவசப்பட்டுத் திரும்பத் திரும்ப எவ்வாறு பூமியில் மானிட ஜன்மமெடுத்துப் பிறக்கின்றதென்பதையும் அது நமக்கு உரைக்கின்றது. அது ஆத்மதத்துவத்தை விளக்கு

கின்றது. ஸ்விடன்பர்க் பிறப்பதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னமேயே இவ்விஷயம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

உலகில் ஆங்காங்குள்ள பெரிய மதாசாரியர்கள் சொல்லியுள்ள விஷயங்களை யேற்றுக்கொண்டு அவரவர்களை ஈச்வராம்ச அவதார புருஷர்கள் என மதிப்பதுடன் உலக நன்மையின்பொருட்டு இனிமேலும் அவதார புருஷர்கள் வரவிருக்கிறார்கள் என்பதையும் நினைக்க அது இடந்தருகின்றது.

வேதாந்தமானது நீதி சாஸ்திரத்தின் பிரதம கொள்கையையும் எடுத்து விளக்குகின்றது. நாம் ஏன் அறவோராயிருத்தல் வேண்டும்; ஏதோ ஒருவன் இதைச் சொன்னான், அதைச்சொன்னான் என்பதற்காக வன்று; இன்ன நூலில் இன்ன அத்தியாயத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறது என்பதற்காகவன்று. யாவும் ஒன்றேயன்றி இரண்டல்ல என்ற நியாயம் பற்றியே. பிறர்க்குத் தீங்கிழைப்பின் உனக்கே தீங்கிழைத்துக் கொண்டவனாவாய். நீ தீயவனாயின் உனக்கே கேடுவிளைத்துக் கொள்வதோடு பிறர்க்கும் கேடு விளைப்பாய். பொருள்வேற்றுமை மாத்திரமேயன்றி நாமும் அயலோரும் உண்மையிலொன்றேயாதலின் அவ்வொற்றுமைபற்றியேதான் நாம் நம்போலவே பிறரையும் நேசிக்கவேண்டும் என்னும் உத்கிருஷ்டமான உண்மையை நன்குணர்த்துகின்றது.

வேதாந்தம், ஸகல மதங்களும் ஒன்றுக்கொன்று சற்றும் விரோதமின்றி ஒருமுகப்பட்டிருக்க வேண்டுமென்பதையும் காட்டுகின்றது. இவ்வேதாந்த ஆட்சியெங்கெங்குளதோ அங்குள்ளயாவரும் மதஸம்பந்தமான கொடிய வாதனைகளை வேரறுத்விட்டு மதக்குரோத மற்று ஸர்வ ஸம்மதமாய் ஒற்றுமை கொண்டாடுவார்கள்.

வேதாந்தத்திற்கு ஜாதி பேதமு மில்லை. அவன் இன்ன வகுப்பைச் சேர்ந்தவ னென்பது மில்லை அவன் இன்ன பெயரினை னென்பதுமில்லை. அவன் கிறிஸ்தவனு மல்ல; மகமதியனுமல்ல; பௌத்தனுமல்ல; ஜைனனும் அல்ல; ஹிந்துவுமல்ல. ஆனல் இவ்வெல்லாக் கொள்கைகளிலேயும் சேர்ந்தவன். அவன் கிறிஸ்தவன் கோயிலுக்கும் மகமதியர் பள்ளிவாசலுக்கும், இந்துக்கள் தேவாலயத்திற்குந் தாராளமாய்ப் போவான். அவன் பெயரில்லா, உருவில்லா, ஈறில்லாச் சகலமதக் கொள்கைகளையும் தன்னுள்ளடக்கிய ஸர்வ ஸம்மதமான மதத்தைச் சார்ந்தவன். இந்த ஸர்வ ஸம்மதமான மதத்தை யூன்றி யூன்றிப் பார்க்கில் "எந்தமதத்திற்கும் வேதாந்த மிடங் கொடுக்கிறது. உண்மையில் அது எல்லா மதத்தையுந் தழுவி யுள்ளது" என்று மாக்ஸ் முல்லர் சொல்லியதுபோல் சொல்லாம லிருக்க முடியாது.

"எவரெவர் எந்த எந்த வழிபற்றி வரினும், என்னையே வந்தடைகின்றார்கள். இடையில் பலவாறு தடுமாறினும் நித்திய ஸத்தாகிய என்னையே முடிவில் அவ்வழியே வந்தடைகிறார்கள்." என்று எல்லா ஸாராம்சமும் திரட்டியுருட்டியுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவானது ஸ்ரீகீதாவாக்கிய உபதேசம் ஸமஸ்தத்திற்கும் அடிப்படியாதலின் அவ்வாக்கியத்தின் கருத்து வேறு எவ்வாறு இருக்க முடியும்?

ம. ஜகதீச ஐயர்.

ஹேமந்தகுமாரி.

நாடக பாத்திரங்கள்.

1. மோஹனராமன்:—ஒருதனவான்.
2. மானவிக்கிரமன்:—சட்டைவெட்டுபவன்.
3. ஜனகன்:—மோஹனராமனுடைய சேவகன்.
4. ஹரன்:— ஷ ஷ
5. மதனகோபாலன்:—கதாநாயகன். ஹேமந்தகுமாரியின் காதலன்.
6. தேவநாதன்:—ஒருநாட்டுவாசி.
7. ஹேமந்தகுமாரி:—மோஹனராமன் மகள். கதாநாயகி.
8. காமவதனி:—மானவிக்கிரமன் மனைவி.

அங்கம் 1.

முதலாவது களம்.

இடம்.—ஒரு காடு. காலம்:—காலை.

பாத்திரங்கள்:—மானவிக்கிரமன், காமவதனி.

மானவிக்கிரமன்.—நான் அப்படிச் செய்யமாட்டேன். என் கட்டளைப்படி நீ நடக்கவேண்டியவளே. ஸ்திரீகளுக்கு சுவாதந்தரியமென்பதே கிடையாது.

காமவதனி.—நான் சொல்வதைத்தான் நீ கேட்கவேண்டும். உன்னுடைய கோபத்திற்கெல்லாம் நான் பாத்திரையல்லேன். புருஷர்களெல்லாம் பெண்களின் வார்த்தைப் டி நடக்க வேண்டும்.

மான.—உன்னைப்போன்ற பெண்கள்நாயக மிருக்கிறதினுல்தான் பெரியோர்கள் துறவறமேமேன்மையுடையது என்றுசொல்லு

கிருர்கள். அதனுற்ருன் கம்பரும் "தூமகேதுபுவிக்கெனத் தோன்றிய, வாமமேகலைமங்கையர்" என்று சொன்னுர்.

காம.—ஆ! ஆ!! கம்பரும் வாசித்திருக்கிருர். ஆகையால் கட்டை வெட்டுந் தொழிலை மேற்கொண்டிருக்கிருர்.*

மான.—நான் படித்தவன் என்பதற்கு என்ன சந்தேகம். என் தொழிலைப் போன்றமேன்மையானது என்ன இருக்கின்றது. திருக்குறள் எழுதிய வள்ளுவர் நெய்தற்ருெழில் செய்யவில்லையா துஷ்டே? இந்த ஐம்பத்தாறு தேசத்திற்குள்ளும் என்னைப்போன்ற நியாயம் பேச வல்ல ஒருகட்டைவெட்டியைக் காட்டு பார்க்கலாம்.

காம.—ஓ! நீர் வாயசைத்தவரா? ஆம். உண்மைதான். எனக்கும் உணவில்லாமல் எல்லாவற்றையும் சாப்பிட்டுவிடுகிறீர்.

மான.—பொய்யன்றி மெய்யென்பதே உன் வாயில் வருகிறதில்லை. எல்லாவற்றையுமா சாப்பிடுகிறேன். ஏதேனுங் குடிக்கிறதில்லையா?

காம.—ஆம். நீர் சொல்வது உண்மைதான். குடித்துவிட்டு எனக்கும படுக்க இடங்கொடாமல் புரளுகிறீர்.

மான.—அதுவும் உன் நன்மைக்காகத்தானே அப்படிச் செய்கிறேன்.

காம.—அதனுல் எனக்கென்னநன்மை?

மான.—"முன்னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாதல்"† கற்புடையோர் செய்கை. ஆகையால் படுக்க யான் உனக்கு இடங்கொடுப்பதில்லை.

காம.—சம்பந்தமில்லாத வார்த்தைகளைச் சொல்லுகிருய். குடியர்கள் தாம் அப்படி வார்த்தையாடுவார்கள்.

மான.—நானு குடியன். சாக்கிரதையாக வார்த்தையைச் சொல். பிறகு உண்மையான குடியர் செய்யும் செயலுக்கு உட்பட வேண்டிவரும். என் கை ஊருகின்றது.

காம.—இன்னும் இரண்டு சுமை விறகு வெட்டிவந்தால் கை ஊரல் நீங்கிவிடும்.

மான.—இல்லாவிட்டால் உன்னை இப்படி அடித்தால் நீங்கிவிடுகிறது (அடிக்கிருன்)

---

*கம்பு—கட்டை. †குற்ருலத்தலபுராணம்.

காம.—ஐயோ! கொலை நடக்கிறது. கொலை நடக்கிறது.

(தாரகேசன் ஓடிவருதல்)

தாரகேசன்.—என்ன? என்ன? ஸ்திரீயையா அடிப்பார்கள்; மூடத்தனம்.

காம.—என்னை அடித்தால் உமக்கென்ன? நீயேன் இங்கு வந்தாய்?

தார.—அப்படியே நன்றாய் அடிக்கட்டும். ஐயா! உம்முடைய மனைவியை நன்றாய் அடியும்.

மான.—இதையெல்லாம் உம்மை யார் கேட்டார்கள்? வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போம்.

தார.—இந்தக் கம்பை எடுத்து வேண்டுமானால் அடியும். எனக்கென்ன? யான் போகிறேன்.

மான.—நீ அடிக்கச் சொன்னால் அடிப்பேனா. என் மனைவியை இஷ்டப்பட்டபோது அடிக்கிறேன்.

தார.—இனி எப்பொழுதும் புருஷனும் பெண்ஜாதியும் சண்டையிடும்போது தடுக்கமாட்டேன். அப்படி யான் பிரயத்தனப் பட்டால் யானே அடிபடுவேன். சந்தேகமில்லை. (போதல்)

மான.—கண்ணே! காமவதனி! நாம் இருவரும் பிரியமாக இருக்கலாம் வா.

காம.—என்னை இப்படி அடித்த பிறகா?

மான.—விளையாட்டிற்காகவல்லவா அடித்தேன்.

காம.—இனிமேல் விளையாட்டிற்காக உம்மையே அடித்துக்கொள்ளும்.

மான.—கண்மணி! நீயும் நானும் ஒன்றல்லவா. உன்னை அடித்தால் என் உடலின் ஒரு பாகத்தை அடித்ததற்குச்சமானமாம். ஆகையால் கோபியாதே. ஒரு முத்தங்கொடு.

காம.—அப்படியானால் இனிமேல் உம்முடைய உடலின் மற்றைய பாகத்தையே அடித்துக்கொள்ளும்.

மான.—கோபித்துக்கொள்ளாதே. உன்னை அடித்ததற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். என்னை மன்னிக்கவேண்டும்.

காம.—இப்பொழுது மன்னிக்கிறேன். ஆனால் சீக்கிரத்தில் உன்னைத் தகுந்தபடி தண்டிக்கிறேன்.

மான.—சுந்தரி! அப்படியெல்லாம் நினையாதே. ஸ்திரீபுமான்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவது சகஜமே; அவ்விதம் சச்

சாவினால் பிரியம் அதிகரிக்கும் "ஊடுதல் காமத்திற் கின்பம்" என்று நூல்கள் சொல்லியிருக்கின்றன. வீடு போய் நீ சேரு வதற்குள் இரண்டு சுமை கட்டை வெட்டி விற்று வருகிறேன்.

(போதல்.)

காம.—எவ்விதத்திலும் பழிக்குப்பழி வாங்காமலிரேன். என் மனம் கொதிக்கின்றது. என்னத்திற்கு ஒரு புருஷனை மணந்து கொள்கிறது? இன்பத்தை அனுபவிக்கலாம் என்ற எண்ணத் தினாலன்றோ? தாய் தந்தையர் தேடிக் கல்யாணம் செய்விப் பனவெல்லாம் இம்மாதிரி தான் முடிகின்றன.

(ஹரன், ஜனகன் வருதல்).

ஹரன்.—நம்மைப் போன்ற மூடர்களை ஊமை வைத்தியனை * அழைத்துவா அனுப்பினார்கள்.

ஜனகன்.—அவர்கள் மீது தப்பிதம் சொல்வதில் என்ன பிரயோஜ னம். வைத்தியர் பெயரை மறந்த உன் ஞாபக சக்தியை என்ன சொல்வது? என் வரையிலும் அவனை உலக முழுதும் தேடியேனும் அழைத்துப் போகாமல் திரும்பிப்போகேன். அப்படி அழைத்துப்போகாமலிருந்தால் நம்முடைய கை கால் களை எஜமானன் முறித்துப்போடுவான்.

ஹரன்.—எஜமானன் எழுதிக்கொடுத்த கடிதத்தைத் தொலைப் பேனா? என்ன துர்ப்பாக்கியம். அதை நினைத்தால் என்னையும் ஊமையாக்குகிறது.

ஜன.—ஊமையை நீக்கும் வைத்தியரை அழைத்துவாச் சென்றவர் கள் ஊமையானால் என்ன செய்கிறது? ஐயோ நான் போகி றேன். உன்னுடன் வரமாட்டேன்.

காம.—பழிக்குப்பழி வாங்கவேண்டும். என்ன யுக்தி செய்வேன்?

ஹரன்.—அம்மா! எங்கே..... வைத்தியர் ...... (ஜனகனைப் பார்த்து) அவர் பெயரென்ன?......வசிக்கிறார்.

காம.—வைத்தியரா? எவர்?

ஹரன்.—வைத்தியர்? ஆம் வைத்தியர். அவர் பெயரென்ன?

காம.—ஓ! இந்தத்துஷ்டன் என்னைப்பரிகாசம் செய்கிறான். சரி நான். தெரிந்துகொண்டேன்.

---

* ஊமை வைத்தியன் = ஊமைகளைப் பேசுவிக்கும் வைத்தியன் என்ற பொருளில் உபயோகிக்கிறான்.

ஹரன்.—அம்மா! ஊமைத் தனத்தை நீக்கும் சக்தியுடைய வைத்தியன் அருகில் எங்கேனும் வசிக்கிறானா?

காம.—அப்படியா? உங்களுக்கு அத்தகைய வைத்தியன் வேண்டியதில்லையென்று தோன்றுகிறது.

ஜன.—தாயே! உம்மைப் பரிகசிக்கிறோம் என்று நினையாதீர்கள். எங்களுடைய எஜமானர் தம் புத்திரியின் ஊமைத் தனத்தை நீக்கும் பொருட்டு இவ்விடம்வசிக்கும் வைத்தியனை அழைத்து வரும்படி அனுப்பினார். அந்த வைத்தியனை அழைத்துப்போகாமல் திரும்பினோமானால் எங்கள்உயிர் நிலையாது. அந்த வைத்தியர் இருப்பிடத்தையும் பெயரையும் மறந்துவிட்டோம். தயவுசெய்து நீங்கள் உபகாரஞ் செய்யவேண்டும்.

காம.—அருகாமையில் ஒரு வைத்தியர் இருக்கிறார். ஆனால் தம் தொழிலைச் செய்கிறதில்லை. ஆயிரம் மனிதர் இறக்கும் சமயத்திலிருக்கின்றார்கள் என்றாலும் ஒரு அடி எடுத்துவைக்க மாட்டார்.

ஹரன்.—அவர் இருப்பிடம் சொன்னால் எந்த விதத்திலும் அழைத்துப் போகிறோம்.

ஜன.—எங்கள் முதுகின்மீதேனும் தூக்கிப்போட்டுக்கொண்டுசெல்கிறோம். தயவுசெய்து இருப்பிடத்தைச் சொல்லுங்கள்.

காம.—(தனக்குள்) இதுதான் சமயம். பழிக்குப்பழி செய்ய நல்ல சமயம் வாய்த்தது. (இருவரையும் பார்த்து) அவனை எப்படியாகிலும் அழைத்துப்போனால் உங்கள் எஜமானியின் வியாதியை நீக்கிவிடுவான். ஊமைத்தனத்தை நீக்குவதிற் கைதேர்ந்தவைத்தியன் இவனன்றி வேறு எவருமில்லை.

ஹரன்.—இவர் வசிக்கும் இடத்தை மாத்திரம் சொல்லுங்கள். இதற்கும் மேலான உபகாரம் எவர் செய்யப்போகிறார்கள்?

காம.—அவன் வீட்டைவிட்டு வெளியிற் போகவே மாட்டான். ஆனாலும் இவ்விடத்திலேயே காத்திருந்தால் அவனைச் சந்திக்கலாம். கட்டைவெட்டுந்தொழிலை இப்பொழுது மேற்கொண்டிருக்கிறான்.

ஜன.—வைத்தியரா கட்டை வெட்டுகிறார்!

ஹரன்.—ஒரு கால் பச்சிலை தேடிக்கொண்டு இங்கு உலாவுவார் போலும்.

காம.—அவன் ஒருபைத்தியக்காரனைப் போல மாறு வேஷம் போட்டுக்கொண்டு திரிகிறான்; தன்னை வைத்தியன் என்று சொல்லமாட்டார்கள் என்று நினைந்து. அவன் மிகவும் பயங் காளி.

ஜன.—அத்தகைய பைத்தியக்காரரிடந்தான் விசேஷமிருக்கும்.

ஹரன்.—அவரைத்தான் எப்படியும் அழைத்துப்போகவேண்டும்.

காம.—அவனை அடித்தாலும் வைத்தியந்தெரியுமென்று ஒப்புக் கொள்ளமாட்டான். அவனை நன்றாய் அடித்து அழைத்துப் போகவேண்டும். நாங்கள் அவசியமுள்ளபோது அப்படித் தான் செய்வது வழக்கம்.

ஜன.—இதுவும் பைத்தியமா?

காம.—பெரியோர்களிடந்தான் இத்தகைய துர்ப்புத்தி இருக்கும்.

ஹரன்.—கைவாசியுள்ளவர்தானா?

காம.—கண்கட்டி வித்தைகளெல்லாம் செய்வான். ஆறு மாதத்தி ற்கு முன் ஒரு ஸ்திரீயை வைத்தியர்களெல்லாம் கைவிட்டார் கள்; அப்பொழுதே இறந்திருப்பாள். சிலர் இந்த வைத்தி யனை இழைத்துப்போனார்கள். அவளைப் பார்த்ததும் மூன்று துளி மருந்து கொடுத்தான். உடனே அவள் படுக்கையினின் றும் எழுந்து உட்கார்ந்து நடக்கப் பிரயத்தனப்பட்டாள்.

ஜன.—அவ்வளவு கைதேர்ந்தவரா இவர்?

ஹரன்.—இவர் தெய்வமே.

காம.—இருபது நாளைக்கு முன்னர்த்தான் ஒரு வீட்டினுச்சியிலிரு ந்து பன்னிரண்டு வயதுச்சிறுவன் விழுந்து காலை ஒடித்துக் கொண்டான். நம்முடைய வைத்தியரை அழைத்துப்போனார் கள். ஏதோ பச்சிலையைத் தடவினார். கால் ஒன்று கூடி விட்டது.

ஜன.—மிகவும் ஆச்சரியமாகத் தோன்றுகிறது.

ஹரன்.—அவரிடத்திலிருந்து ஒரு சுமை பச்சிலை வாங்கிக்கொள்ள வேண்டும்.

காம.—அவர் திறமையை என்னவென்று சொல்லுவேன்.

ஹரன்.—அதைப்பற்றிநமக்கென்ன?ஊமைத்தனத்தை நீக்குவாரா?

காம.—நம்முடைய ஜோஸியர் வெங்கடாசாரியரின் குழந்தை பிறவி ஊமையாகவிருந்தது. நம்முடைய வைத்தியர் அந்தக்

குழந்தையின் வாயில் இரண்டு துளி மருந்துவிட்டார். ஒரு மாத காலத்திற்குள் நன்றாய்ப் பேச ஆரம்பித்தது.

ஜன.—இவரைத் தான் எஜமானர் அழைத்துவர நம்மை அனுப்பியிருக்கவேண்டும்.

காம.—கூப்பிடுந் தூரத்தில் கட்டை வெட்டிக்கொண்டிருப்பார் இதோ சப்தம் கேட்கிறது. சப்தம் கேட்கும் வழியேபோய்த் தேடியடையுங்கள். நன்றாய் அடித்தால் தான் வைத்தியன் என்று ஒப்புக்கொள்ளுவார். நான் போகின்றேன். (போதல்)

ஹரன்.—எவ்விதத்திலும் அழைத்துப்போகவேண்டும்.

ஜன.—குற்றமிருடனேனும் அழைத்துப்போகிறேன்.

ஹரன்.—நம்முடைய பாக்கியமே பாக்கியம். இந்த அம்மையால் உயிர் தப்பினோம். வைத்தியரை அழைத்துப் போகாமலிருந்தால் எஜமானன் நம்மைக் கொன்றிருப்பான்.

ஜன.—எல்லாம் தெய்வசங்கல்பம். சீக்கிரம் போகலாம்.

(இருவரும் போதல்).

அங்கம் 1.

இரண்டாவது களம்.

இடம்:—அதே காட்டின் வேறொரு பாகம்.

காலம்:—பகல்.

பாத்திரங்கள்:—மானவிக்கிரமன், ஹரன், ஜனகன்.

மான.—வெயிலின் உக்கிரமம் மிகவும் அதிகமாகவிருக்கிறது. சகிக்க முடியவில்லை (திரும்பிப்பார்த்து) நீங்கள் யார்? என் இங்கு நிற்கிறீர்கள்?

ஜன.—உங்கள் ஊழியக்காரர் வந்தனம் செய்கிறோம்.

மான.—உங்கள் 'ஊழியக்காரன்'.

ஜன.—உங்களைக் கண்டதனால் மிகவும் சந்தோஷமடைந்தோம்.

மான.—சரி இனி நீங்கள் போகலாம்.

ஹரன்.—உங்களால் ஓர் உபகாரத்தையடைய நினைந்து தேடி வந்தோம்.

மான.—என்னால் ஆகக்கூடிய காரியத்தைச் செய்ய யாதொரு தடையுமில்லை.

ஜன.—எவ்வளவு அன்புடன் பாராட்டுகிறீர்கள். உங்கள் பெருந் தன்மையை என்னவென்பேன்.

ஹரன்.—வெயில் அதிகமாகிறது. முதலில் இந்தக் குடை நிழலின் கண் வாருங்கள்.

மான.—(தனக்குள்) இவர்கள் உடையினுல் ஊழியர்களைப்போல் தோன்றுகின்றது. இவர் தன்மையால் நல்ல குலத்தினர் போலக் காண்கிறது.

ஜன.—ஐயா! தங்களைத் தேடிவந்திருக்கிறோமென்று ஆச்சரியப்பட வேண்டாம். தங்களைப் போன்ற பெரியோர்களை உலகமுழுதும் தேடிவருமல்லவா.

மான.—உண்மைதான். என் தொழிலின் மேன்மை தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும். என்னைப்போன்றபடித்த கட்டை வெட்டி இவ்வுலகத்திலேயே கிடைக்கமாட்டான்.

ஹரன்.—அப்படியில்லை. கட்டைவெட்டியென்று சொல்லாதீர்கள். இந்த மரத்தின் வேரினை ஒருநொடியில் நாங்களிருவரும் பிளந்து தருகிறோம்.

மான.—அதெல்லாம் வேண்டாம். என்னை விட இந்த ஊரிலேயே எவரும் நயமாகக் கட்டை கொடுக்கமாட்டார்கள். இம்மாதிரியான கட்டை நூறு அரை ரூபாய்க்குத் தருகிறேன்.

ஜன.—அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.

மான.—இனி ஒரு காசுகூடக்குறையமாட்டேன். இஷ்டமிருந்தால் வாங்கிக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்கள் வேலையைப் பாருங்கள்.

ஹரன்.—தங்களை இன்னாரென்று எங்களுக்கு நன்றாய்த் தெரியும். எங்களிடம் மறைக்கவேண்டாம்.

மான.—என்னை இன்னானென்று தெரிந்தா விலை கேட்கிறீர்கள்? கரூர் விலைதான் சொல்கிறேன். இனி ஒரு காசும் குறைக்க மாட்டேன்.

ஜன.—இந்த வீண் வார்த்தையை விட்டுவிடுங்கள். தங்களைப் போன்ற வித்துவான் இந்தத் தொழிலை மேற்கொள்ளலாமா? தங்கள் வைத்தியத்திறமையை உலகோர்க்குப் பயன்படுத்தாமலிருக்கலாமா?

மான.—என்ன மூடத்தனமான வார்த்தைகளைச் சொல்லுகிறாய்.

ஹரன்.—ஐயா! தயவு செய்து எங்களிடம் மறைக்க வேண்டாம்.

ஜன.—எங்களை மறைக்கமுடியாது. நீங்கள் இன்னுரென்று தெரிவோம்.

மான.—என்னைத் தெரியுமாவது, ஒன்ருவது; ஆனுல் என்னை என்னவென்று நினைக்கிறீர்கள்?

ஜன.—தங்களை ஒரு சிறந்த வைத்தியரென்று தெரியும்.

மான.—நானு வைத்தியன்? என்னையா வைத்தியனென்கிறீர்கள்?

ஹரன்.—பிறகு நாங்கள் செய்யவேண்டியதை யாரம்பிக்கவேண்டியதுதான். மனவருத்தமாயிருக்கிறது.

ஜன.—என்ன செய்கிறது, செய்யவேண்டியதை யாரம்பிக்கவேண்டியதுதான். உண்மையாக நீங்கள் வைத்தியரல்லவா?

மான.—இல்லை.

ஹரன்.—உண்மையாகவா?

மான.—இல்லை யென்று தான் சொல்லுகிறேனே.

ஹரன்.—செய்வதைச் செய்யத்தான் வேண்டும். (இருவரும் மானவிக்கிரமனை அடிக்கிருர்கள்.)

மான.—ஐயோ! ஐயோ!! என்னுல் சகிக்கமுடிய வில்லையே. என்னை எவனென்று வேண்டுமானுலும் நினைத்துக்கொள்ளுங்கள்.

ஜன.—என் இவ்விதம் செய்யும்படி வேண்டுகிறீர்கள்?

ஹரன்.—உங்களை இப்படிச் செய்வது கஷ்டமாயிருக்கிறது.

ஜன.—எங்களுக்கே மிகவும் வருத்தமாகவிருக்கிறது.

மான.—என்னை அடித்தால் உங்களுக்கு வலியாயிருக்கிறதா? எனக்கல்லவா மிகவும் தொந்தரவாயிருக்கிறது. ஐயா! என்னை வைத்தியனுக்குவதால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்? சொல்லுங்கள்.

ஜன.—மறுபடியும் வைத்தியனல்லவென்ருசொல்லுகிறீர்கள்?

மான.—அதற்கென்ன தடையிருக்கிறது?

ஹரன்.—ஆனுல் நீர் வைத்தியரல்ல?

மான.—வைத்தியனுனுல் வைவச்வத பட்டினம் போகிறேன். (இருவரும் மறுபடியும் அடிக்கிருர்கள்.)

ஐயோ! ஐயோ!! என்னை வைத்தியனென்ருவது வைத்துக்கொள்ளுங்கள். தன்வந்தரியே யென்ருவது நினைத்துக்கொள்ளுங்கள். அடிப்பதை நிறுத்துங்கள்.

ஜன.—தங்கள் ஞாபகம் திரும்பியதற்கு நாங்கள் சந்தோஷமடைகிறோம். நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்.

மான.—ஒரு கால் எனக்குத் தெரியாமலே நான் வைத்தியனாகத் தோன்றுகிறேனோ? உண்மையாகச்சொல்லுங்கள்; நான் வைத்தியன் தானா?

ஜன.—அதற்கென்ன தடை யிருக்கின்றது. நீங்கள் வைத்தியர் சிகாமணி என்பதற்குச் சந்தேகமில்லை.

மான.—சரி. உண்மை தான்.

ஹரன்.—எவ்வித வியாதிகளையும் பறக்கடிக்கும் பிரசித்தி பெற்றவர் பதுங்கிப் பண்டிதரின் * அவதாரமே.

ஜன.—ஆறு மணி நேரத்திற்கு முன் இறந்த ஒரு பெண்ணை உலாவச்செய்த பண்டிதர் நீரல்லவா?

ஹரன்.—காலை ஒடித்துக்கொண்ட குழந்தையை நடக்கச்செய்தவர் நீரல்லவா?

ஜன.—ஜோஷியரின் மகளைப் பேசவைத்தவர் நீரல்லவா?

ஹரன்.—எங்கள் எஜமானர் மிகவும் தயாள குணமுள்ளவர். உமக்கு வேண்டியதை முழுவதும் கொடுப்பார். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கேளுங்கள்.

மான.—எதை வேண்டுமானாலும் கொடுப்பாரா?

ஜன.—அதைப்பற்றிச் சிறிதேனும் சந்தேகப்படவேண்டாம்.

மான.—அப்படியானால் சந்தேகமில்லாமல் நான் சிறந்த வைத்தியனே. எனக்கு ஞாபகம் வருகிறது. என்ன வியாதியை இப்பொழுது நான் சுகப்படுத்தவேண்டும்?

ஜன.—எங்கள் எஜமானி பேசுந்தன்மையை இழந்திருக்கிறாள்.

மான.—அப்படியானால் சரி. நியாயவாதி பணமின்றி வெளியே போகமாட்டான் போல வைத்தியரின் உடையின்றி நான் உங்களுடன் வரமாட்டேன். ஆசையால் வழியில் உடைகளை மாற்றிக்கொண்டு உங்களுடன் செல்கிறேன். போகலாம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

---

* இவரைக் கண்டதும் வியாதிகள் பதுங்கும், ஒளியும் என்றும், வியாதிகளைக் கண்டால் இவ ஒளிந்துகொள்வாரென்றும் பொருள்படும்.

அங்கம் 2.

முதலாவது களம்.

இடம்:—ஒரு வீடு. காலம்:—மாலே.

பாத்திரங்கள்:—மோஹனராமன், ஜனகன்.

மோஹனராமன்.—வைத்தியரெங்கே? எங்கே காணவில்லேயே.

ஜன.—வெகுதூரம் நடந்து வந்த சிரமத்தால் இளைப்பாறுகிறார். அவசரப்படவேண்டாம். தங்கள் பெண் இறந்துவிட்டாலும் உயிர் உண்டாக்குவார். சந்தேகப்படவேண்டாம்.

மோஹ.—அவ்வளவு பெரிய மனிதர், சிறந்த வைத்தியர், பைத்தியம் பிடித்தவராக இருப்பது ஆச்சரியமாகவிருக்கிறது.

ஜன.—இரண்டு மூன்று அடி முதுகில் விழுந்தது, தன் ஞாபகம் வந்துவிடுகிறது. இதோ வைத்தியரும் வருகிறார்.

(மானவிக்கிரமனும் ஹரனும் வருகிறார்கள்.)

ஹர.—ஐயா! இதோ வைத்தியர் வந்திருக்கிறார்.

மான.—ஐயா! வந்தனம்.

மோஹ.—உங்கள் வரவு நல்வரவு ஆகுக. வைத்தியரே வாருங்கள்.

மான.—வைத்தியரே! உங்களைக் கண்டதும் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

மோஹ.—என்ன? நீர் வைத்தியரல்லவா?

மான.—நான் வைத்தியனல்லேன். நீர் வைத்தியரென்று தெரியும்.

மோஹ.—பழைய ஞாபகம் வரவில்லேபோலும். (அடிக்கிறான்.)

மான.—நீங்களும் வைத்தியரென்று நினைத்தால் நினைத்துக்கொள்ளுங்கள். நாமிருவரும் வைத்தியர்கள். (அடிக்கிறான்.)

மோஹ.—ஏ! மூடர்களே! யாரை இங்கு அழைத்து வந்தீர்கள்?

ஜன.—நான் அப்பொழுதே சொல்லவில்லேயா? இவர் புத்தி சிறிது மாறுதலாகவிருக்கிறது. இங்கு அழைத்துவர நாங்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டோம்.

மோஹ.—நாம் இப்படிச் சண்டையிடவேண்டாம். வந்த காரியத்தைச் சிறிது கவனிக்கவேண்டும். ஐயா! பண்டிதரே! என் புத்திரி தொந்தரைப்படுகிறாள்.

மான.—மிகவும் சந்தோஷம். எல்லோரும் அவ்வித வியாதியால் தொந்தரையடைந்தால் நான் அடிக்கடி வரப்போக நேரிடும்.

மோஹ.—தங்கள் நல்லெண்ணத்திற்காகச் சந்தோஷப்படுகிறேன்.

மான.—உண்மையாக மனமாரச் சொல்லுகிறேன்.

மோஹ.—நானும் மனமாரச் சொல்லுகிறேன்.

மான.—சரிதான். தங்கள் குமாரத்தியின் பெயரென்ன?

மோஹ.—ஹேமந்தகுமாரி என்று பெயர்.

மான.—உண்மையாக அவள் பெயர் ஹேமந்தகுமாரியா?

மோஹ.—ஆம்.

மான.—அவள் பெயர் மேகினி என்று இருந்தால் நலம். வியாதிக்காரியின் பெயர் நன்ருய் இருக்கவேண்டும். ஆனல் சீதை கமலை, என்றிருந்தால் ஒருவகை வியாதியும் நெருங்கியிராது; நானும் உங்களை நெருங்கியிருக்கமாட்டேன்.

(ஹேமந்தகுமாரி வருதல்.)

மோஹ.—ஐயா! என் மகள் இதோ வருகிருள்.

மான.—அவளா வியாதி யுடையவள்? முகத்தைப் பார்த்தால் யாதொரு வியாதியுமுடையவளல்லள் போலத் தோற்றுகின்றது.

(ஹேமாந்தகுமாரி சிரித்தல்.)

மோஹ.—வைத்தியரே! என் மகளைச் சிரிக்கச் செய்கிறீர்கள். உம்முடைய திறமை மிகவும் வெளியாகிறது.

மான.—நல்லது. வியாதி என்னைக் கண்டதும் ஒளிந்துகொள்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.—நல்லது குழந்தாய்! உனக்கு உடம்பு என்ன?

ஹேமந்தகுமாரி.—ஹே-ஹி-ஹோ.

மான.—என்ன சொல்கிருய்?

ஹேமந்த.—ஹே-ஹி-ஹோ.

மான—என்ன? என்ன?

ஹேமந்த.—ஹே-ஹி-ஹோ.

மான.—இவள் சொல்வது ஒன்றுந்தெரியவில்லை. பிசாசபாஷையா பேசுகிருள்?

மோஹ.—அது தான் வியாதி. இந்த வியாதியால் தான் அவள் கலியாணமும் நிறுத்தப்பட்டது.

மான.—கலியாணத்தை என் நிறுத்தவேண்டும்? அது நடக்கிறது தானே.

மோஹ.—அவள் வியாதி நீங்குகிறவரையில் எவரும் மணக்கிறதில்லையாம்.

மான.—இது என்ன மூடத்தனம். ஊமையான மனைவியையடைய இஷ்டமில்லாதவனும் இருக்கிறானா? என்னுடைய மனைவி ஊமையானால் நான் சந்தோஷப்படுவேன். இவள் வியாதியைக் குணமாக்கப் பிரியமில்லை. இப்படி யிருப்பதால் உங்களுக்கு என்ன கஷ்டம்?

மோஹ.—ஆம் எங்களுக்கு வருத்தமாகத்தா னிருக்கிறது.

மான.—இதனால் அவள் துயரமடைகிறாளா?

மோஹ.—மிகவும் வருந்துகிறாள்.

மான.—குழந்தாய்! உன் கையைக்கொண்டுவா (கையைப் பிடித்துப் பார்த்து) நாடியும் ஊமையாகத்தானிருக்கிறது.

மோஹ.—அவள் வியாதியை நன்றாய்த்தெளிந்து சொன்னீர்கள்.

மான.—ஐயா! எங்களைப்போன்ற வைத்தியர்கள் வியாதிகளை ஒரு க்ஷணத்தில் அறிந்து கொள்ளுவார்கள். அவள் ஊமையாக இருக்கிறாள். அதைத்தவிர்த்து வேறு வியாதி இல்லை. ஆகையால் நீங்கள் பயப்படவேண்டாம்.

மோஹ.—வைத்தியரே! நீர் சொல்வது சரிதான். அவளுக்கு ஊமைத்தனம் எப்படி வந்தது? அதைத்தான் சொல்லவேண்டும்.

மான.—ஊமைத்தனத்தின் காரணமா தெரியவேண்டும். அதன் காரணம் அறிவது மிகவும் சுலபமே. பேசுந்திறமையை இழந்ததனால் ஊமையாய் விட்டாள். அவ்வளவுதான்.

மோஹ.—வியாதியின் தன்மையை யல்லவா சொல்லுகிறீர். அதன் காரணத்தை யல்லவா தெரியவிரும்புகிறேன்.

(ஹான், ஜனகன் பிரவேசித்தல்.)

மான.—'அவசரப்படேல்'. நம்முடைய இடதுபக்கத்தில் ஈரல் இருக்கிறது. வலதுபக்கத்தி லிருக்கிறது இரத்தப் பை. ஈரலிலிருந்து இரத்தப்பைக்கு ஒருவகைக் காற்று பரவுகிறது. மேலும் காற்றுப்பை மூளையுடன் சம்பந்தப்படுவதனால் ஒரு வகைக் காற்று உண்டாகிறது. இவ் விரண்டுவகைக் காற்றும் வழியில் ஒன்று சேருகிறது. இந்தக் காற்று கலப்பதால் ஊமைத்தனம் உண்டாகிறது. உம்முடைய பெண்ணுடைய வியாதியின் காரணத்தைத் தெரிவித்தேன்.

ஹான்.—ஆ! ஆ! எவ்வளவு புத்திசாலித்தனமாய்க் காரணத்தைத்

தெரிவித்தார். இது வரையிலும் நுரைப்பை வலது பக்கத்திலும் இரத்தப்பை இடதுபக்கத்திலும் இருந்ததாக நினைத்திருந்தேன். அது பிழையென்று இவரால் தெளிந்து கொண்டேன்.

மான.— நீ சொல்வதெல்லாம் முன்னர் உண்மையாக விருந்தன. இப்பொழுது இடம் மாறி விட்டன. தற்காலத்திய உயிர் நூற் புலவர்கள் கண்டுபிடித்தார்கள்.

மோஹ.—ஒன்றுந் தெரியாதவன் அவன். ஏதோ வாய்க்கு வந்தபடி குளறுகிறான். நீர் கவனிக்கவேண்டாம். இப்பொழுது என் பெண்ணுக்கு என்ன மருந்து கொடுக்கலாம்?

மான.—உம்முடைய பெண்ணை நல்ல மிருதுவான மெத்தையிற் படுக்கச் செய்யுங்கள். பிறகு ஒரு செம்பு தண்ணீரில் சர்க்கரையைக் கரையவைத்து எலிமிச்சம்பழ இரசம் சேர்த்துக் குடிக்கச் செய்யுங்கள். அரைமணி நேரத்திற்குப் பிறகு சாத்துக்குடி கிச்சலிப்பழத்தில் ஆறு சாப்பிடச் செய்யுங்கள். எல்லாம் சரியாய் விடும். பேச ஆரம்பிப்பாள்.

ஜன.—ஜன்னி கொண்டு பேச ஆரம்பிப்பாள்.

மான.—என்ன அப்படிச்சொல்லுகிறாய். வைத்தியவாகடத்திற் சொல்லியிருப்பதைச் சொல்லுகிறேன். நம்பினால் நம்புங்கள். எனக்கு வியாதியஸ்தரை நெடுநாள் வைத்திருக்கப் பிரியமில்லை. சீக்கிரத்தில் ஒழித்துவிட ஏற்பாடு செய்வேன்.

மோஹ.—வைத்தியரே ! என்ன மருந்து கொடுத்தால்தான் எங்களுக்கு என்ன? வியாதி ஒழியவேண்டியது தான். (வெற்றிலை பாக்குடன் ரூ. 20 வைத்து) இதைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மான.—(ஏற்றுக்கொண்டு) மிகவும் சந்தோஷம். சாயந்திரம் மறுபடியும் வருகிறேன். உங்களுக்கு நல்ல மருந்துகொண்டு வந்து தருகிறேன்.

மோஹ.—இது வரையிலும் யான் வியாதியால் தொந்தரையடைந்ததில்லை. ஆகையால் இனியும் வராமல் பாதுகாத்துக்கொள்ளுகிறேன். என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்.

மான.—இவ்விடம் இனி வியாதியஸ்தர் கிடைக்காமற்போனால் என்னை அவர்கள் தேடுவதன்முன் நான் அவர்களைத் தேடியடைகிறேன். நான் போகின்றேன். (போதல்)

மோஹ.—இவர் நல்ல அனுபவமுள்ள வைத்தியர் என்பதற்குத் தடையேயில்லை. நம்முடைய உயிர்களை அவரிடம் ஒப்புவிக்க லாம். பயப்படவேண்டியதில்லை.

ஹரன்.—நான் ஒப்புவிக்க மாட்டேன். எனக்கு மக்கள் மனைவி இருக்கிறார்கள்.

ஜன.—எமனிடம் ஒப்புவித்தாலும் ஒப்புவிக்கலாம். இந்தவைத்திய ரிடம் ஒப்புவிக்கமாட்டேன். என் தாயார் வைவாள்.

மோஹ.—மூடர்களே! அவர் திறமையை நீங்களறியீர்கள். என் பெண் சவுக்கியமாய் விடுவாள். சந்தேகமேயில்லை.

(யாவரும் போதல்.)

அங்கம் 2.

இரண்டாவது களம்.

இடம்:—ஒரு தேரு. காலம்:—மாலை.

பாத்திரம்:—மதனகோபாலன்.

மதனகோபாலன்.—ஏ! ஹேமந்தகுமரி! நீ என்னால் அடையுந்தய ரத்தைத் தெரிந்துகொண்டேன். யான்படுந் துன்பத்தி னளவை யாலோசித்து உன்னுடைய கஷ்டத்தை யுணர்கின் றேன். உன் தந்தையின் கட்டளையுடன் செல்வமின்மையும் எனக்கு இடையூறாக விருக்கின்றன. ஏ! காதல்வல்லி! உன்னை விட்டுப் பிரிந்து யான் எவ்வாறு வாழ்வேன். உன் துன்ப த்தை வாய்விட்டுரைக்க முடியாமல் ஊமையாயினாய். என் செய்வாய்? யானோ ஒன்றுந்தோன்றாமல் இங்குமங்கும் உலாவு கின்றேன். ஒரு கால் யான் செல்வவந்தனல்லவென்று நிரா கரித்துவிட்டாயோ? ஆம். (பரிதேல்.)

"செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்."

இதுவே உலகவியற்கை. பொன்னின் வல்லமையே வல் லமை! கவுரவமும் அழகும் பொன்னிற்குப் பின்னிடைகின் றன. அறிவும் தைரியமும் செல்வமுடையோனிடம் அவசிய மாக விருக்கவேண்டியதில்லை. ஏ! செல்வமே! உன்னுடைய துணையின்றி அன்பும் பயன்படுகிறதில்லை; பறந்துவிடுகிறது.

(மானவிக்கிரமன் பிரவேசித்தல்.)

மானவிக்கிரமன்.—இருபது ரூபாய் நம் புதிய தொழிலுக்கு நல்ல ஆரம்பம். அதிகமாக ஆயாசப்படவேண்டியதில்லை.

மதன.—ஐயா! வைத்தியரே! நில்லும். உம்மைக் காணவேண்டும் என்று வெகு நேரமாய் வெளியே காத்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு உதவி செய்யவேண்டும்.

மான.—என்ன விசேஷம்? வியாதியஸ்தர் எவராயினும் இருக்கிறாரா? இதோ வருகிறேன்; எங்கே கையைக்கொடும். (நாடியைப் பார்த்து) சரிதான். நாடி சரியாயில்லை. வெகு நாழிகையாய்த் தூங்கவில்லையா?

மதன.—ஐயா! வைத்தியரே! எனக்கு வியாதி ஒன்றுமில்லை.

மான.—என்ன சொல்கிறீர்? நீர் வியாதியால் வருந்துவது எனக்கல்லவா தெரியும்; உமக்கு நன்றாய்த் தெரிவதற்கிடமில்லை.

மதன.—எனக்கு ஒருவகை வியாதியு மில்லை. அப்படி ஏதேனுமிருப்பின் உம்முடைய வியாதியஸ்தரின் மீது காதல்கொண்டிருக்கிறேன். அந்த வியாதிதான் என்னைத் தொந்தரை செய்கிறது. என்னை அவளிடம் அழைத்துச் சென்றீரானால் இருவர் நோயும் நீங்கிவிடும். சந்தேகமேயில்லை.

மான.—எது ஒன்றுந் தெரியவில்லைபோலும். என்னைக் கூட்டிக் கொடுப்பவன் என்று நினைத்தீரா? ஜாக்கிரதை. வைத்தியனா கூட்டிக் கொடுக்குங் கும்பகோணத்தான்?

மதன.—சப்தம் செய்யாதேயும். நான் சொல்லியது பிழை. மன்னிக்கவேண்டும்.

மான.—நான் சப்தம் செய்யத்தான் செய்வேன். அவ்வளவு கொழுப்பா பிடித்திருக்கிறது; வைத்தியரையா கூட்டிக்கொடுக்கச் சொல்கிறாய்?

மதன.—ஐயா! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும்.

மான.—ஏ! துஷ்டப்பயலே! அற்பப்பயலே! என்ன காலம் கெட்டுவிட்டது (மதனகோபாலன் ஒரு பணப்பையைக் கொடுக்கிறான்.) ஐயா! உம்மைச் சொல்லவில்லை. சிலர் இந்த உலகில் இருக்கிறார்கள். அவர்கள் பிறரை இழிவாய் நினைக்கிறார்கள். அவர்களைக் கண்டதும் எனக்குக் கோபம் உண்டாகிறது.

மதன.—நான் தீய எண்ணத்துடன் ஒன்றுஞ் சொல்லவில்லை. எனக்கு உபகாரம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன்.

மான.—சரிதான் தப்பிதமாக நினைக்கவில்லை. எப்படி உமக்கு உபகாரம் செய்வேன்? அதைச்சொல்லும்.

மதன.—நீர் சௌக்கியப்படுத்தவேண்டிய வியாதி உண்மையாக அந்தப் பெண்ணிடமில்லை. ஊமையெனப் பாசாங்கு செய்கிறாள். வழக்கப் பிரகாரம் வைத்தியர்கள் தங்களுக்குத் தோன்றியபடி சொன்னார்கள். ஒருவர் இரத்தப்பையினின்று உற்பத்தியாயிற்று என்றார். மற்றொருவர் ஈரலினின்று உண்டாயிற்று என்றார். ஆனால் உண்மையாக அவள் காதல் நோயால் வருந்துகிறாள். பிரியப்படாத புருஷனை மணக்கும்படி அவள் தந்தை வற்புறுத்துவதனால் இவ்விதப் பாசாங்கை மேற்கொண்டாள்.

மான.—ஆனால் என் சீஷனாக வேஷந் தரித்துக்கொண்டு என் பின் வந்தால் எல்லாம் சரியாய்விடும்.

மதன.—அவள் தந்தை என்னை இன்னானென்று தெரிந்து கொள்ள மாட்டான். ஆகையால் சிறிதேனும் சந்தேகமின்றி மாறு வேஷந்தரித்துக் கொண்டு தம்மைப் பின்றொடர்கின்றேன்.

மான.—ஆனால் இவ்விடத்திலேயே சிறிதநேரம் தங்கியிருக்கிறேன். போய் மாறு வேஷந்தரித்துவருவீர். (மதனகோபாலன் போதல்.) இது வரையிலும் எல்லாம் சரியாகவே நடந்து கொண்டு வருகிறது. என் ஆயுள் வரைக்கும் வைத்தியராகவே காலத்தைக்கழிக்கிறேன். தற்காலத்தில் வருவாய் அதிகமுள்ள தொழில் அதுவாக விருப்பதனால்.

(ஜனகனும் தேவநாதனும் பிரவேசித்தல்.)

ஜனகன்.—ஐயா! ஒரு வியாதியஸ்தனை அழைத்து வந்திருக்கிறேன்.

தேவநாதன்.—பண்டிதரே! என் மனைவி இந்த ஆறுமாதகாலமாய் வியாதியால் வருந்துகிறாள். ஏழை நான் மிகவும் தொந்தரைப் படுகிறேன். சுகப்படுத்தவேண்டும்.

மான.—அவளுக்கு என்ன வியாதி?

தேவ.—ஒரு வைத்தியர் வாயு என்கிறார். மற்றொருவர் பித்தம் என்கிறார். வேறொருவர் மலேசுரம் என்கிறார். நீங்கள் என்னவென்று சொல்வீர்களோ?

மான.—தேகஸ்திதி என்னவா யிருக்கிறது?

தேவ.—ஐயா! தாகம் தாகம் என்று அலைகிருள். அவள் கால்கள் தூண்கள்போலப் பெருத்திருக்கின்றன. சுரமும் அடிக்கடி வருகிறது.

மான.—நீ சொல்வது சரியாய்த் தெரியவில்லையே.

ஜன.—ஐயா! இவர்தம் மனைவி வியாதியால் வருந்துகிருள். தங்களிடம் மருந்து வாங்கிக்கொள்ள ரூபாய் பதினைந்து கொண்டு வந்திருக்கிருர். பெற்றுக்கொண்டு தயவு செய்ய வேண்டும். (ரூபாயைக் கொடுக்கிருன்.)

மான.—(பணத்தைப் பெற்றுக்கொண்டு) சரி. இந்தக் கிருதத்தைப் பெற்றுக்கொண்டு போ, கொடுத்தவுடன் சுகமாய் விடும்.

தேவ.—நெய்யையா?

மான.—அதைப்பற்றி உமக்கென்ன? வியாதி சுகப்படவேண்டியது தான். போய் அந்த மருந்தைக் கொடும். காலத்தை வீணுக்கிக் கொண்டு இவ்விடம் நிற்காதேயும்.

தேவ.—வந்தனம், போய் வருகிறேன். (ஜனகனும் தேவநாதனும் போதல்)

மான.—போங்கள். சீக்கிரம் புதைத்து விடுங்கள். மறுபடியும் எழுந்து வராமலிருக்கும்படி அடக்கஞ் செய்யுங்கள்.

(காமவதனி பிரவேசித்தல்)

காம.—விளையாட்டு வினையாக முடியும்போலிருக்கிறது. என் கணவன் என்னை அடித்தான். பழிக்குப்பழி வாங்கநினைத்து இரண்டு சேவகர்களை விட்டு அடிக்கச்செய்தேன். அவர்கள் அவன்றன் உயிரையே கொண்டு சென்றனரோ என்னவோ? என் செய்வேன்? மனத்துயர் அதிகரிக்கின்றதே.

மான.—யாருடைய குரல்? என் மனைவியின் குரல் என்பதற்குச் சந்தேகமேயில்லை. அதுவும் வைத்தியர் மனைவிதான். ஆனல் அந்தப் பயல்கள் சிறிது முரட்டுத்தனமாய் அடித்தார்கள். அவ்வளவுதான். என்ருலும் லாபம் செய்தார்கள். மாலைக்குள் ரூபாய் ஐம்பத்தைந்து சம்பாதித்துவிட்டேன். என்னை என் இந்தச் சனியன் தொடருகின்றது. இவளுக்கு ஒரு மாத்திரை கொடுத்தேனுல் வைகுண்டயாத்திரை செய்யவைப்பேன். துஷ்டை உட்கொள்ளமாட்டாள்.——கண்ணே! அருகில் வா. கையைப் பிடித்துப் பார்க்கிறேன்.

காம.—என் நாதுவை நீர் என்னத்திற்குப் பார்க்கவேண்டும்?

மான.—நீ என் வியாதியஸ்தர் கூட்டத்தி லொருத்தியாகலான் ஏதேனும் மாத்திரை கொடுக்கலாம் என்று தாதுவைப் பார்க்க நினைத்தேன்.

காம.—எப்பொழுதாவது என் தாதுவைப் பார்க்க வேண்டுமானால் உம்முடைய காதைப் பிடித்திழுக்கவேண்டியவள் யான்.

மான.—எப்படியாவது இந்த மாத்திரையை யுட்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் எனக்குச் சேரவேண்டிய ரூபாயைக் கொடுத்து விடவேண்டிது.

காம.—நானு ரூபாய் கொடுக்கவேண்டும்? (இரண்டு விசை முத்தங்கொள்ளுகிறாள்) ரூபாய்கள் போதுமா?

மான.—இது ரைசங்கமான இடம். சிறிது தூரத்தில் ஒரு குடிசையிருக்கிறது. அங்கு நாமிருவரும் போகலாம். (பணத்தைக் கொடுக்கிறான்)

காம. —(பணத்தை வாங்கிக்கொண்டு) என்ன? என் கற்பை அழிக்கவா நினைத்தீர்? ஜாக்கிரதை.

மான.—உட்பட இஷ்டமில்லாமலிருந்தால் என் பணத்தைக் கொடு.

காம.—என் கற்பினறிகுறியாக அதை வைத்துக்கொள்கிறேன்.

மான.—என் கண்ணே! உன் கற்பையழிக்க முயன்றேன். உன் மேன்மையான குணத்தையுணர்ந்தேன். இதோ உன் பிரியமுள்ள மானவிக்கிரமன். (இருவரும் அணைதல்.)

காம.—கண்மணி! மிகவும் சந்தோஷம்.

மான.—உன் கற்பின் மேன்மையளவு என் சந்தோஷம். இந்த வைத்தியவேஷந் தரித்துக்கொண்டு இவ்வளவு ரூபாய் சம்பாதித்தேன். சீக்கிரத்தில் லக்ஷப்பிரபு ஆய்விடுவேன்.

காம.—நீங்கள் எவ்வளவு ரூபாய் சம்பாதித்தென்ன பிரயோஜனம்? நாளைக்கு வரும் பணத்தில் ஐந்து ரூபாய் எனக்கே கொடுக்க வேண்டும்.

மான.—என்னத்திற்கு?

மான.—சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய ஸ்ரீ வாணீ விலாஸினீ வரவழைக்கப் போகிறேன்.

மான.—அப்படியே செய். நாளை நூறுரூபாய் வரும். அவசியம் உனக்கு வேண்டிய ரூபாய்கள் தருகிறேன். அந்தப் பத்திரிகை

இல்லாத வீடு பாழ் மனை என்பது என் கருத்து.

காம.—நீர் எப்படி சம்பாதிக்கின்றீர் என்பதை யுணர்ந்தீரா?

மான.—வைத்தியர்வேஷந் தரித்துக்கொண்டு.

காம.—என்னை இன்று காலையில் அடியாமலிருந்தால் இவ்வளவு அதிர்ஷ்டம் வந்திராது.

மான.—எப்படி?

காம.—என்னை அடித்ததால் உம்மை அடிக்கச் செய்தேன். அந்தச் சூழ்ச்சியால் வைத்தியராயினீர். பணம் நிரம்பக் கிடைக்கின்றது.

மான.—ஆனால் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இரு. ஏதோ சப்தம் கேட்கிறது.

(பதங்கிப் பண்டிதர் வருதல்.)

பதுங்கிப்பண்டிதர்.—ஐயா! நீர்தாமோ இந்த ஊரில் ஊமைத்தனத்தை நீக்கும் பொருட்டு வந்திருக்கும் வைத்தியர்?

மான.—ஆம், அவர்தாம் நான்.

பது.—தங்களைப் பார்க்கவந்திருக்கிறேன்.

மான.—கையைக் கொண்டுவாரும். தாதுவைப் பார்க்கிறேன்.

பது.—என் தாதுவைப் பார்க்கவேண்டாம். நானும் ஒரு வைத்தியன். என் பார்வையில் இருக்கும் ஒரு வியாதியஸ்தனைப் பேச வைக்கவேண்டும்.

மான.—நான் அவனைப் பேசவைக்கிறேன்.

பது.—அப்படிச் செய்தால் தங்கள் திறமை இன்னும் பிரகாசிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மான.—மிகவும் சந்தோஷம். அதோ இருக்கிறாளே அந்தப் பெண், பைத்தியம் பிடித்தவள், யாரைக்கண்டாலும் தன் புருஷன் என்று மயங்குகிறாள். நீர் உம்முடைய வீட்டில் இவளை அழைத்துப் போனால்.———

பது.—பிரியத்துடன் அழைத்துச் செல்லுகிறேன்.

மான.—இவளை அழைத்துப் போனவுடன் அவள் உடலில் ஒரு காயம் செய்து ஒருபடி இரத்தம் வெளியிடவேண்டும். பிறகு அவள் மயிரை நீக்கவேண்டும். பிற்பாடு ஒரு கம்பினால் தினம் இருவிசை அடிக்கவேண்டும். நான் அவளுக்கு உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன். நான் சொல்லுகிறபடி செய்

வீரா மாட்டீரா?

காம.—பிரியநாயகா! அப்படி நீர் எம்மைப் பார்ப்பதன்முன் உம்மை நான் அவ்விதம் பார்ப்பேன்.

பது.—இது என்ன பைத்தியம். இது வரையிலும் இம்மாதிரியான பெண்ணைப் பார்த்ததில்லை.

(பண்டிதரும் காமவதனியும் போதல்.)

(மதனகோபாலன் பிரவேசித்தல்.)

மான.—ஆ! ஆ!! வேஷம் மிகவும் சரியாய் அமைந்திருக்கிறது.

மதன.—தங்கள் சிஷ்யன் என்று சொல்லிக்கொள்ளலாமோ?

மான.—நான் எவ்வளவு வைத்தியனோ அவ்வளவு என் சிஷ்யன். வியாதியால் வருந்துபவளிடம் அழைத்துப்போகிறேன்.

மதன.—எப்படியானாலும் என் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டும். அவ்வளவுதான் நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

மான.—சரி. என்பின் வா. வைத்தியர்தாம் முன்னர்ப் போக வேண்டும். சிஷ்யர்கள் தொடரவேண்டும்.

(இருவரும் போதல்.)

அங்கம் 2.

மூன்றாவது களம்.

இடம்:—மோஹனராமன் வீடு. காலம்:—காலை.

பாத்திரம்:—மோஹனராமன்.

மோஹனராமன்:—என்ன? பொழுது விடிந்து இவ்வளவு நேரமாயும் வைத்தியர் வரக்காணவில்லை? ஒரு கால் மோசஞ்செய்துவிட்டாரா? ஒருவேளை நம் புத்திரியின் வியாதியை நீக்க முடியாதென்று நின்றுவிட்டாரோ? ஒன்றுந் தெரியவில்லை. மறுபடியும் ஜனகனையும் ஹரனையும் அனுப்பத்தான் வேண்டும்— (மானவிக்கிரமன் சிஷ்யனுடன் பிரவேசித்தல்.) ஓ! இதோ வருகிறார். வைத்தியரே! வாருங்கள். இருங்கள்.

மான.—சரி. உம்முடைய பெண் என்ன ஸ்திதியிலிருக்கிறாள்?

மோஹன.—நீங்கள் கொடுத்த மருந்தையுட்கொண்டபிறகு வியாதி அதிகமாய்விட்டதாகத் தோன்றுகிறது.

மான.—அதிகமாகித்தான் குறையும். மருந்து வேலை செய்கிறது என்று தோற்றுகின்றது.

மோஹ.—தங்களுடன் கூட வந்திருப்பவர் யார்?

மான.—அவர் என் சிஷன். நேற்று யான் உனக்குச் சொல்லிக் கொடுத்த பாடலை வியாதிக்காரியிடம் சொல்லு.

மோஹ.—பாடலையா மருந்தாகக் கொடுக்கப்போகிறீர்?

மான.—எதைச் செய்தால்தான் உமக்கு என்ன? உம்முடைய பெண் பேசவேண்டியது. பாடலின் மேன்மை உமக்கு எப்படித் தெரியப்போகிறது? பாடல்கள் எவ்வளவு தீமை புரியுமோ அவ்வளவு நன்மையையும் செய்யும். பட்டணத்துபிள்ளையார்,

"முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையி
லன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே."

என்று சொன்னவுடன் தாயைத் தீ தகனம் செய்துவிடவில்லையா?

(சிஷன் மெதுவாக ஹேமந்தகுமாரியுடன் வார்த்தையாடல்.)

மான.—இப்பொழுது வைத்தியர்களுக்குள் ஒருவகை வாதம்நடந்து கொண்டிருக்கிறது. அதாவது ஸ்திரீகள் புருஷரினும் மருந்தினால் சுலபமாகச் சுகப்படுவார்களா என்பதுதான். சிலர் ஸ்திரீகள் சுலபமாகச் சுகப்படுத்தப்படுவார்கள் என்றும் சிலர் புருஷர்கள் சீக்கிரமாகச் சுகப்படுத்தப்படுவார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நான் அத்தகைய வித்தியாசம் பாராட்டுவதில்லை. இருவரும் சுலபமாகச் சுகமடைவார்கள் என்று நம்புகிறேன்.

ஹேமந்த.—என் மனத்தை ஒருகாலும் மாற்றமாட்டேன்.

மோஹ.—என் மகள் பேசுகிறாள்! பேசுகிறாள்!! வைத்தியரே உம்முடைய திறமையே திறமை. நான் என்ன வெகுமதி உமக்குக் கொடுக்கப்போகிறேன்.

மான.—இந்தப் பெண்ணின் வியாதியைச்சுகப்படுத்த மிகுந்தசிரமம் எடுத்துக்கொண்டேன்! ஆப். ஆப்.

(அரங்கின் ஒரு பக்கத்தினின்று மற்றைய பக்கத்திற்குப் போய் உலாவுகிறான்.)

ஹேமந்த.—ஐயா! யான் பேசுந்திறமையையடைந்தேன். ஆனால் என் பிரிய நாயகனான மதனகோபாலனைத்தான் மணந்துகொள்ளப்போகிறேன். எவரும் என்னைத் தடைசெய்யக்கூடாது.

மோஹ.—ஊமைத்தன்மை நீங்கிப் பைத்தியம் பிடித்துவிட்டது.

என்னசெய்வேன்?

ஹேமந்த.—நான் தீர்மானித்த விஷயத்தை ஒருவரும் கவனிக்கக் கூடாது.

மோஹ.—என்ன?

ஹேமந்த.—ஆச்சரியமான விஷய மொன்றுமில்லை. உலகத்திலுள்ள தந்தை எவரும் என் இஷ்டத்திற்கு மாறாக நடக்கச்சொன்னால் கவனிக்கமாட்டேன்.

மோஹ.—நான் தீர்மானித்துவிட்டேன்.

ஹேமந்த.—உம்முடைய தீர்மானத்தினால் பிரயோஜனமில்லை. என் பிரிய நாயகனை மணந்தால் உயிருடனிருப்பேன். இல்லையாயின் உயிரை விட்டுவிடுவேன். என்னைச் சிறையிடுங்கள், அடியுங்கள், காயப்படுத்துங்கள், இஷ்டப் பிரகாரம் தொந்தரை செய்யுங்கள். எமதருமனை மணந்தாலும் மணப்பேன். நீர் சொல்லுங் கணவனை மணக்கமாட்டேன்.

மான.—ஐயா! வாயாடுவது போதுமா? உம்முடைய பெண் ஊமையாக விருப்பதே நலம் என்று சொன்னேனே. அப்பொழுது கேட்டீரா? இப்பொழுது வருத்தப்படுவதில் பிரயோஜன மென்ன?

மோஹ.—வைத்தியரே! எனக்குப் புத்தியில்லாமல் தம்மைக் கொண்டு வைத்தியஞ் செய்தேன். இப்பொழுது ஊமையாகச் செய்தீராயின் மிகவும் நன்றியறிவுள்ளவனாவேன்.

மான.—அது என்னால் செய்யமுடியாது. வேண்டுமானால் உம்மைச் செவிடனாக்குவேன்.

மோஹ.—அப்படிச் செய்யவேண்டாம். அவள் பைத்தியத்தைச் சுகப்படுத்தும். அவ்வளவுதான் வேண்டும்.

மான.—அப்படியே செய்கிறேன். யாரடா? நீ அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு தனியான இடத்துக்குப் போய் நான் முதலில் உன்னிடம் கொடுத்த மருந்தைக் கொடு.

சீஷன்.—அப்படியே செய்கிறேன்.

(சீஷனும் ஹேமந்தகுமாரியும் வெளியே போதல்.)

மான.—ஐயா! பாரும். சீக்கிரத்தில் உம்முடைய பெண் சந்தோஷக் களையுடன் திரும்புகிறாள்.

மோஹ.—அவ்விதம் சந்தோஷமடைவதற்குத்தானே உம்மை நாடி

யது. உம்முடைய மேன்மை எவ்வாறு என்பதைத் தம் சீஷன் திறமையால் உணர்வேன்.

(ஹரன் அவசரமாகப் பிரவேசித்தல்.)

ஹரன்.—ஐயா! தங்கள்......

மோஹ.—என்ன விசேஷம்? சொல் சீக்கிரம்.

ஹரன்.—தங்கள் புத்திரியை......

மோஹ.—என்ன நேரிட்டது? இறந்துவிட்டனளா? இந்த வைத்தியரைக் காவலில் வைத்துவிடுகிறேன். ஏதோ சூது செய்துவிட்டான் பாவி!

ஹரன்.—தங்கள் பெண் மதனகோபாலனை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டாள். இனி அகப்படுவது கஷ்டம்.

மோஹ.—ஐயோ! என் குலமே கெட்டுவிட்டதே. என் செய்வேன், எங்கு அழைத்துப் போகச்சொன்னாய்? அடே பாதகா!

மான.—ஏன் வருத்தப்படுகிறீர்? அவள் வியாதி யொழிந்தது.

மோஹ.—வியாதியஸ்தியையல்லவா ஒழித்துவிட்டாய். பாதகா! என்ன செய்தாயடா (நெருங்கிப் புடைக்க எத்தனித்தல்.)

மான.—ஐயோ! என்னைக் கொல்லவேண்டாம். உண்மையைச் சொல்லுகிறேன். உண்மையைச் சொல்லுகிறேன்.

(காமவதனி அவசரமாப்ப் பிரவேசித்தல்).

காம.—பிரிபசாதா! தம்மைக் கொல்லவா போகிறார்கள்?

மான.—ஆம். பாரடி என் கண்ணே! என் செய்வேன்?

காம.—வேண்டிய கட்டையையாவது வெட்டி வைத்திருக்கிறாயா? அதுவாவது செய்திருந்தாயானால் ஒருவித சந்தோஷமடைவேன்.

மான.—என் முன் நில்லாதே. போ. என் மனம் முறிந்துவிடும்.

காம.—நான் இறக்குந்தருணத்தில் தனியேவிட்டுச் செல்லேன். என்னை என்ன செய்தாலும் அப்புறம் போகமாட்டேன். உம்முடைய உயிர் நீங்கும்வரைக்கும் இவ்விடமேயே இருப்பேன்.

(ஹேமந்தகுமாரியும் மதனகோபாலனும் பிரவேசித்தல்.)

ஹேம.—தந்தையே! என் மணவாளனுடன் இதோ வந்தேன். அந்த வைத்தியரைத் தொந்தரை செய்யவேண்டாம். அவர் எனக்குப் பேருபகாரி.

மதனகோபாலன். தந்தையே! ஆம். என் மனைவியின் தந்தையே! தம்முடைய வீட்டிற்கே யான் வரலாகாது என்று கட்டளை

யிட்டீரே! இதோ தம் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்ள நாங்களிருவரும் ஸ்திரீபுமான்களாக வந்து அடிபணிகிறோம். என் சிற்றப்பனிறந்ததால் யான் மிகுந்த செல்வ வந்தனாக ஆய்விட்டேன். ஆகையால் யான் ஏழையென்று வருத்தப்படவேண்டாம்.

மான.—என் புத்திரியிடம் இத்தகைய உண்மையான காதலையுடையவனாகையால் மிகுந்த சந்தோஷத்துடன் அவளை உனக்கு அளிக்கின்றேன். சுகமாக நீங்களிருவரும் வாழக்கடவீராக.

மதன.—எங்களுக்குப் பேருபகாரம் செய்தவராகிய வைத்தியருக்கு என்ன கைம்மாறு அளிக்கப் போகிறேன்?

மான.—என்னை உண்மையான வைத்தியனாக்கினால் அதுவே போதுமான வெகுமதி. யான் விரும்புவது அவ்வளவுதான்.

மதன.—நான் எப்பொழுது தங்கள் சீஷனோ அப்பொழுதே நீங்கள் வைத்தியரே. யாதொரு சந்தேகமுமில்லை.

காம.—ஓ! ஓ! நல்ல வைத்தியர். ஸ்திரிபுமான்களைக் கூட்டிவைக்கும் வைத்தியர். இவருக்கு ஏற்ற தொழில். ஆனால் அந்தக் குணம் தன்னிடமில்லை. எட்டுச் சுரைக்காய் போலும்.

மோஹ.—ஐயா! நீர் உண்மையான வைத்தியரா என்ன? சொல்லும். தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மான.—நான் வைத்தியனென்பதில் என்ன உமக்குச் சந்தேகம்? தங்கள் புத்திரியின் வியாதியை ஒழித்த பிறகுமா சந்தேகம்? ஆனால் காமவதனி! உன்னைச் சாக்கிரதையாய்க் கவனித்து வருவேன். என்னை இறக்கும்படி காண விரும்பினாயல்லவா?

காம.—வியாதியை நீக்கியவர் நீரா? உம்முடைய சீஷனல்லவா? வைத்தியரா அவள் வியாதியை நீக்குபவர்? (பாடுதல்.)

சீத மார்மதி செய்ய முகத்தினர்
காதல் நோயினிற் கருத்த ழிந்திடின்
நீதி லோஷதந் தெரிந்த ளிப்பினு
மேது நன்மையை யியற்றி டாதென.
மங்கை நின்மண வாளன் றன்னுடன்
பொங்க மாமகிழ் புவியில் வாழவே
யெங்கு மேசிறை யிறைவன் றாளிணை
யெங்கள் மனத்தினின் றென்று மகன்றிடா.

பின்னுரை.

மானவிக்கிரமன்.—ஸ்திரீகளே! உங்கள் நோய்க்கு மருந்து கொடுக்க வல்லவரும் உலகினிலுளரோ! காமநோய்க்கு மருந்து முண்டாங்கொலோ? தந்தையர்காள்! உங்களது பெண்களை வீணில் வருத்தாதீர்கள். அவர்கள் விரும்பும் நாயகரையே அடைவியுங்கள். அப்படிச் செய்தீர்களாயின் உங்கள் குலத்திற்கு ஈனம் வாராது. மேலும் பெண்களும் உங்களிடம் மரியாதை பாராட்டுவார்கள். தாங்களிச்சைப்படாத நாயகரை யடைவிப்பதால்தான் அனேகமாய்க் கேடுகள் நேரிடுகின்றன. ஸ்திரீகள் கற்பிழப்பது இந்த விஷயத்தைத் தாய் தந்தையர்கள் கவனியாமலிருப்பதனாற்றான் என்பதிற் சந்தேகமில்லை. ஏ! பெண்களே! ஹேமந்தகுமாரியைப்போல், தந்தை மூடனா யிருப்பினும் நம் கற்பினை யிழக்காமல் கருதிய நாயகனையே அடையுங்கள். அப்படிச் செய்வீர்களாயின் என்னைப்போன்றவர் சகாயமுஞ் செய்யவருவார்கள். (போதல்.)

சருக்கை இராமசாமி ஐயங்கார், பி. ஏ.

அவுரி.

1.—இது ஒரு சாயப்பயிர். பசுந்தாள் அல்லது தழை எருவுக்கும் பயிர்செய்யப்படுகிறது. இது சுண்ணும்புத் தீனி.

2.—கொளிஞ்சி முதலிய அனேகவித அவுரிகள் நமதுநாட்டில் வனமாயிருக்கின்றன. இவைகளிலிருந்தும் அவுரியிலிருந்து சாயம் எடுப்பதுபோல் ஒருவிதசாயம் எடுக்கலாம்.

3.—இது சாதாரணமாகப்புன்செய்ப்பயிராகச் சாகுபடி செய்யப்பட்டாலும் அனேக இடங்களில் கிணற்று இறைவையில் சாகுபடிசெய்யப்படுகின்றது. நன்செய்யில் அதிகமாகச் சாகுபடி செய்யப்படுவதில்லை. இது கரிசல் முதலிய எல்லா நிலங்களிலும் வளரும். எந்தப் பூமியில் சுக்கான் சம்பந்தம் ஜாஸ்தி இருக்கிறதோ, அந்தப் பூமியில் தான் நன்றாய் வளரும்.

4.—செப்டெம்பர் அக்டோபரில் 2, 3 தடவை உழுது டிசம்பர்வரை தரிசாகப் போட்டுவிடவேண்டியது. விதை தெளிப்பதற்கு முன்னால் பூமியை மறுபடியும் ஒரு தடவை உழுது புல்பூண்டுகளையெல்லாம் களைந்துவிட்டு விதை சிறிதாகையால் அதிக ஆழத்தில்போய் முளைகிளம்பாமல் கெட்டுப்போவதைத் தடுக்கும்பொருட்டு, உருளையால் பரம்படிப்பது நல்லது. இல்லாவிடில் உழுத பூமியைக் கடப்பை கர்நூலில் செய்வதுபோல குண்டகை என்னும் கருவியால் மண்ணை இறுகச்செய்வது நல்லது.

5.—மணல்சாரியாயிருந்தால் ஏகர் 1-க்கு சுமார்

20-வண்டி வண்டல் பொருக்கடிப்பது திறம்; சுண்ணாம்பு நீறு½வண்டியும் சாம்பல் 1-வண்டியும் கலந்து அடிக்கலாம். தோட்டக்காலில் சுமார் 10-15 வண்டி சாம்பல் குப்பை எருவாவது அடிப்பார்கள்.

6.—நவம்பர் டிசம்பர் மாதங்கள் விதை தெளிக்கத் தகுந்த காலம். சாதாரணமாய் டிசம்பர் மாதத்தில்தான் அவுரி விதை தெளிக்கப்படுகிறது. தோட்டக்காலில் ஜூலை ஆகஸ்ட்டிலும் தெளிக்கிறார்கள். ஏகர்-1க்கு சுமார் 10-15 பவுண்டு விதை செல்லும். அதாவது 3 பட்டணம் படி முதல் 5 பட்டணம்படிவரையில் விதை செல்லுகிறதாம். விதைகளை ½ அங்குலஆழத்துக்குமேல் தெளிக்கக் கூடாது. விதைகளை கோர்ருவால் (விதைதெளி கருவி) வரிசை வரிசையாய்த் தெளிக்கவேண்டும். தழை, எருவுக்காகப் பயிரிடும் பட்சத்தில் ஏகர் 1-க்கு 6-7 பட்டணம் படி விதை கைத்தெளியால் விதைக்கலாம்.

7.—விதைத்து 15-நாளைக்கெல்லாம் முட்படலைக் கட்டியிழுத்தாவது அல்லது மேட்லகுண்டகையென்னும் கருவியைக்கொண்டு வேலைசெய்தால் முளை நன்றாய் வெளியே வரும். விதைத்து ஒருமாதத்துக்கெல்லாம் கொத்திக்களைபிடுங்கவேண்டும். எப்போது களைகள் தொந்திரவு பண்ணுகின்றனவோ அப்போதெல்லாம் களையைப் பிடுங்கிவிட வேண்டும். இல்லாவிடில் பயிரை ஓங்கவிடாது. தோட்டப்பயிரில் 6-7 தரம் ஜலம் இறைக்கும்படி நேரிடும்.

8.—இது 6-மாதத்துப்பயிர். நமது இராஜதானியில் அக்டோபர், ஜனவரி, பிப்பிரவரி, ஏப்பிறல் இம்மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றது. விதைத்து சுமார் 2 மாதத்துக்கெல்லாம் 1 அறுப்பும் 4மாதத்துக்குப் பிந்தி ஒரு அறுப்பும் 6-மாதத்துக்குப்பிந்தி ஒரு அறுப்பும் ஆனபிறகு விதைக்காகவும் விட்டுவிடுகிறார்கள். இப

படி 10ஸ்ரீ வரையில் ஒரு சமயம் பயிர் பூமியிலிருக்கலாம். ஒரு அறுப்பானவுடன் இலைகளைக்காயவைத்துக் கோணிப்பையில் கட்டிவைத்துவிடுகிறார்கள் ஒரு அறுப்புக்குப் பின் 2-ம்தரம் தளிர்க்கப் பூமியைக் கோர்ருவினால் கீறியும் அல்லது வேறுவிதமாய் உழுதும் அல்லது வேறுவிதமான உழவு செய்நேர்த்தியும் செய்கிறார்கள். ஏகர் 1-க்கு, சுமார் 12,000 பவுண்டு தழைகள் கிடைக்கும்; அதாவது சுமார் ரூ 30 பெறும்படியான தழைகிடைக்கும்.

9.—ஏகர் 1-க்குச்சாகுபடி செலவு சுமார் ரூ 15; மொத்த வருமானம் ரூ-30; செலவுபோக மிகுதியான தழையில் வருமானம் ரூ 15.

10.—அவுரித்தழை நெல்முதலிய தானியப்பயிர்களுக்கு முதல்தர உரம்; இது பூமியை உரப்படுத்துகிற பயிரில் ஒன்றாதலால் அறுவடைக்குப்பின் கீழ்வேரே, பின் வரும் தானியப்பயிருக்கு நல்ல உரமாகிறது. அவுரிச்சாணமும் நெல்பயிருக்கு நல்ல உரம்; ஒருவண்டி அவுரிச்சாணம் ரூ 3. விலை.

11.—பச்சைத் தழையிலிருந்தும் காய்ந்த தழையிலிருந்தும் 24 மணி சாவகாசம் தண்ணீரில் ஊறப்போட்ட பிற்பாடு, நீலச்சாயம் காய்ச்சலாம். முதலில் ஒரு தொட்டியில் ஊறவைத்து இன்னும் ஒரு தொட்டியில் துடுப்புக்களால் நீலச்சாய சலத்தைக் கலக்கினால் அடியில் சாயம் சேருய்ப்படிந்துவிடும். இந்தச்சாயச்சேற்றை எடுத்துத் துணியில் ஒற்றிச் சதுரம் சதுரமாய் வெட்டி நிழலில் காயவைத்து விலைக்கு விற்பனை செய்கிறார்கள். 1-ஏகர் தழையிலிருந்து 2 மணங்கு சாயம் கிடைக்கும். 1-மணங்கு சாயம் சுமார் ரூ 45. விலைபெறும். ஜர்மனி தேசத்துச் சாயப்போட்டியால் இப்போது அவ்வளவுவிலை போகாது.

அ. சேதுராமய்யர்.

W. C. பானர்ஜி.

உமேச சந்திர பானர்ஜி கல்கத்தாவுக் கடுத்த கிட்டபூர் என்னும் ஊரில் 1844-ம்௵ டிசம்பர்௴ 29௳ பிறந்தனர். இவர் பாட்டனராகிய பீதாம்பர பானர்ஜி ஓர் உத்தம பிராமண குலத்தைச் சார்ந்தவர். இவருக்குப் பல புத்திரர்களுண்டு. அவர்களில் பாபுகிரீச சந்திரபானர்ஜி என்பவர் ஜேஷ்ட குமாரர். இவர் கல்கத்தா ஹைகோர்ட்டில் ஒரு பிரசித்திபெற்ற நியாயவாதி. இவருக்கு நான்கு குமாரர்களுண்டு. அவர்களில் இரண்டாவது புத்திரர் நம் டப்ளியூ. ஸி. பானர்ஜி.

பானர்ஜி இளமைப் பருவத்தில் கல்கத்தாவிலுள்ள ஓரியன்டல் ஸெமினரி என்ற பாடசாலையிலும் பின் அவ்வூர் ஹிந்து ஹைஸ்கூலிலும் கல்வி பயின்றவர். 1861ம்௵ இவர் அப்பாடசாலையின் உயர்ந்தவகுப்பில் வாசித்தும் பிரவேச பரீக்ஷைக்குப் போகவில்லை. இவரது கலாசாலைக் கல்வி இவ்வளவோடு நின்றதாயினும் கல்வியபிவிருத்தி

யைக் கைவிடாமல் தாமே பயின்று வந்தனர். இவர் 1861-ம் வருஷம் நவம்பர் மாதம் டௌனிங் என்ற ஓர் அட்டர்னியினிடம் குமாஸ்தா வேலையில் அமர்ந்தனர். ஆறுமாதத்திற்குப் பிறகு வேறொரு வக்கீலிடம் வேலைக்கு அமர்ந்தனர். வக்கீலுக்கு வேண்டிய சிறந்த அம்சங்கள் இவருக்குப் பிறப்பிலேயே இயற்கையாய் அமைந்திருந்தன. மேற்கூறியபடி சிறந்த வக்கீல்களிடம் வேலை பழகினதும் அவ்வியற்கை யறிவை மிகவும் அபிவிருத்தியடையச் செய்தது. இவ்விருவகை யறிவும் இவருக்குப் பிற் காலத்தில் பேருதவியாயிற்று.

இந்நாட்களில்தான் இவர் தற்காலம் பிரசித்திபெற்று விளங்குகிற பங்காளி பத்திரிகையைப் பிரசுரிக்கத்தொடங்கினர். இதுகாறும் இவ்வருமையான விஷயம் பலருக்குச் சிதம்பர ரகசியமாகவே இருந்துவந்தது.

இவ்விதம் நடந்து வரும் சமயத்தில் நம் பானர்ஜிக்கு ஒரு நல்ல காலம் வாய்த்தது. பிரேம்சண்ட் ரேசண்ட் என்ற பார்ஸி பிரபு ஒருவர் பரோபகார சிந்தையுடையவராய் இந்தியவாலிபர்கள் இங்கிலாந்துக்குப்போய் வாசிக்கும் வண்ணம் அவர்களுக்குத் தூண்டுதலாகச் சில உபகாரச் சம்பளம் ஏற்பாடு செய்தனர். நம் பானர்ஜிக்கும் அவற்றில் ஒன்று கிடைக்க நேர்ந்தது. அதனைப் பெற்றுக்கொண்டு 1864-ம் ஹு அக்டோபர் மாதம் அவர் இங்கிலாந்து சென்றனர். அங்கே மிக்க ஊக்கத்துடன் சட்டப் பரீக்ஷைக்குப் படித்தது மன்றி ஆங்கில பாஷையையும் பிரயாசைப்பட்டுக் கசடறக் கற்றுவந்தனர். மூன்று வருஷங்களுக்குப் பின்னர் மிடில் டெம்பில் என்ற சபையைச் சார்ந்த பாரிஸ்டராகச் சன்னது பெற்றுச் சில நாட்களுக்கெல்லாம் தம் ஜனன பூமி வந்து சேர்ந்தனர்.

இவர் வருமுன்னரே இவரது தந்தை காலஞ்சென்றனர். இவருக்குப் பிதிரார்ஜித சொத்தாகக் கிடைத்ததெல்

லாங்கூடி மாதம் இருநூறு ரூபா வாடகை கிடைக்கும் படியான சில வீடுகள் மட்டுமே.

1868-ம் வருஷத்தில் இவர் கல்கத்தா ஹைகோர்டில் பாரிஸ்டர் வேலை பார்க்கத் தொடங்கினர். பிரசித்திபெற்ற வக்கீலாயிருந்த இவரது தந்தை இறந்துபோன போதிலும் இத்தொழிலில் இவருக்கு உதவிசெய்யக் கூடியவர்கள் சிலர் இருந்தார்கள். இவரது தந்தைக்கு வேலைகொடுத்து வந்த வியாபார சங்கத்தில் இவருடைய சிறிய தகப்பனுர்க்குச் சம்பந்தம் இருந்தபடியால் அச்சங்கத்தார் இவருக்குக் கை கொடுத்தனர். அதனுல் முதல் மாதமே இவருக்கு 1,800 ரூ வரும்படி கிடைத்தது. அச்சமயம் அவ்விடம் சுதேச பாரிஸ்டர்கள் அபூர்வம். மனேமோகன் கோஸ் என்ற பிரசித்தபெற்ற பாரிஸ்டர் மட்டும் வேலை பார்த்துவந்தனராயினும் வெளியூர்களிலேயே அவருக்கு வேலை அதிகம் இருந்தது. ஆகையால் நம் பானர்ஜியே அவ்வேலையில் ஏகசக்கிராதிபத்தியம் செய்யத் தொடங்கினர். மகாராஜ கமால் கிருஷ்ண பகதூர் என்ற மிக்க செல்வாக்குள்ள ஒரு பிரபுவும் நம் பானர்ஜிக்குத் தக்க உதவிபுரிந்து வந்தனர். காலத்திஞற் செய்த நன்றி ஞாலத்தினும் மாணப்பெரிதாகையால் அந்நன்றியை நம் பானர்ஜி சாகுமளவும் பாராட்டி வந்தனர். இது நிற்க. மிஸ்டர் பிட்கேன்னடி என்ற ஓர் ஐரோப்பிய பாரிஸ்டரும் இவருக்குக் கை கொடுத்து, விசாரணை நடத்துங்காலத்தில் இவரைத் தம் கூடவே வைத்துக்கொண்டு பழக்கி வந்தனர். ஆரம்பத்தில் இவ்வித உதவிகள் இவருக்கு மிகவும் அநுகூலமாகவே இருந்தன. இஃது ஒன்றுமட்டும் போதுமா? இவரது கம்பீரமான தோற்றமும் கணீரென்ற தொனியும் பேச்சுத்தாட்டியும், சட்டத்தில் ஆழ்ந்த அறிவும் தெளிந்த கூரிய புத்தியும், பதற்றமில்லாத அமர்

ந்த சுபாவமும் இவருக்குப் பேருதவியைப் புரிந்தன. இவர் ஒரு விருந்துக்குப்போன சமயத்தில் மனமொத்த மித்திரர்களுடன் அளவளாவிக்கொண்டிருக்கையில் தமக்கு மாதம் ஒன்றுக்குப் பதினையிர ரூபா வருவாய் கிடைத்தாற் போதுமென்றனராம். இவர் எண்ணின எண்ணம் சில வருஷங்களுக்கெல்லாம் கைகூடினது மன்றி இவர் எதிர்பாராத பெருந்தொகையும் மாதந்தோறும் இவருக்குக்கிடைக்கத் தொடங்கிற்று. இவர் மாதவருவாய் நமது வைஸிராய் சம்பளத்துக்கும் மேற்பட்டது. இவரைப்போல் பணம் சம்பாதித்த லாயர் இவ்விந்தியாவிற் கிடையாதென்று துணிந்து கூறலாம். ஸிவிலோ, கிரிமினலோ எந்த முக்கிய வழக்கிலும் இவர் ஒரு பக்கத்துக்கு ஆஜராவது நிச்சயம்.

முதல் முதல் இவர் வக்கீல் வேலையில் பிரசித்தம் அடைந்த விதத்தை இவர் நண்பருள் ஒருவர் கண்கூடாக் கண்டு கூறியிருக்கின்றனர். அஃதாவது:—கிருஷ்ணகர் ஜில்லாவைச் சார்ந்த மெகர்பூர் என்ற இடத்தில் மாக்டானல் என்ற ஓர் ஐரோப்பிய ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் இருந்தனர். (இவரே பின்னர் ஸர். மாக்டானல் என்று பிரசித்திபெற்று விளங்கியவர்.) அவர் ஓர் எளிய ஸ்திரீயை மானபங்கப்படுத்தினதாக அவர் மேல் ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு விசாரணையில் ஜூரர்கள் ஒன்றுகூடி அவ்வுத்தியோகஸ்தரை விடுதலை செய்து விட்டனர். அவ்விஷயம் இவ்வளவோடே நிற்கவில்லை. கவரன்மெண்டார் அவ்வுத்தியோகஸ்தரைத் தம் நல் நடத்தையை ஸ்தாபிக்கும் பொருட்டு அந்த ஸ்திரீயைப் பொய் வழக்குக் கொண்டுவந்ததற்காகக் குற்றஞ் சாட்ட ஆக்ஞாபித்தனர். கிருஷ்ணகரில் விசாரணை நடந்தது. நம் பானர்ஜி அந்த ஸ்திரீக்காக வக்காலத்துப் பெற்று

விசாரணை நடத்தத் தொடங்கினர். கல்கத்தாவிலிருந்து புதிதாய் வந்த இந்தச் சிறு சுதேசபாரிஸ்டர் பேசுந்திறமையைக் கேட்டுக் களிக்கும் வண்ணம் கலாசாலை மாணாக்கர்களுக்கு விடுமுறை கொடுக்கப்பட்டது. மாணவர் அனைவரும் வேடிக்கை பார்க்கச் சென்றனர். விசாரணையும் விமரிசையாய் நடந்தது. அச்சமயம் அவ்வூர் நியாயாதிபதியாயிருந்த மிஸ்டர் தாம்ஸன் என்பவர் ஒரு மதியூகி. அவரே ஸர் பட்டம் பெற்றுப் பின் பிரசித்தி பெற்றனர். நம் பானர்ஜி சிறிதும் மனந்தளராமல் தாம் எடுத்துக் கொண்ட விஷயத்தை இனிது முடிக்கத் தம்மால் கூடிய முயற்சியுடன் உழைத்து நியாயாதிபதிக்கு உண்மைகளை விளக்கிக் காட்டினர். பெருந்தேரை முட்டுக் கட்டை கொடுத்துத் திருப்பும் விதம் நியாயாதிபதி மனத்தை இவரது வாத சாமர்த்தியம் திருப்பிவிட்டது. வழக்கின் சாராம்சத்தை நியாயாதிபதி ஜூரிகளுக்கு எடுத்துரைக்குங்கால் குற்றவாளிக்கு அநுகூலமாகவே எடுத்துரைத்தனர். ஜூரிகளும் ஒரேமனமுடன் குற்றவாளியை விடுதலை செய்ய அபிப்பிராயங் கொடுக்க நியாயாதிபதியும் விடுதலை செய்தனர். உடனே நம் பானர்ஜி தொப்பென்று கீழே குதித்து மிகவும் உற்சாகத்தோடு அந்த ஸ்திரீ நின்றுகொண்டிருந்த இடத்துக்குச் சென்று அம்மாதின் கரத்தைப் பற்றிக் கூட்டினின்றும் வெளியே இழுத்து "நங்காய்! உன்னை விடுதலை செய்தாய் விட்டது, நீ போகலாம்" என்று தமக்கிருந்த சந்தோஷத்தை வெளிப்படுத்தவே நியாயாதிபதியும் புன்சிரிப்புடன் இவ்வேடிக்கையைக் கண்ணுற்று மகிழ்ந்தனர். அங்கு நின்றவர் அனைவரும் நம் பானர்ஜியின் சாமர்த்தியத்தைக் கொண்டாடிக் குதூகலித்து ஆரவாரஞ் செய்தனர்.

இது முதல் இவரது பெயர் எங்கும் பிரசித்தி பெற்

றதுமன்றி இவரது வருவாயும் அதிகரிக்கத் தொடங்கிற்று. பல கௌரவங்கள் இவரை நாடி வந்தன. நம் காருண்ய வைஸ்ராயாகிய ரிப்பன் பிரபு 1878-ம் ௵ நம் பானர்ஜிக்கு ஹைகோர்ட்டு நியாயாதிபதி வேலை கொடுத்தும் அவர் அவ்வுன்னத ஸ்தானத்தை மறுத்தனர். இவ்வண்ணம் மும்முறை கொடுக்கப்பட்டும் ஒருவரின் கீழ்க் கட்டுப்பட்டு நடப்பதற்கு அவர் சிறிதும் சம்மதியாதவராகையால் மும்முறையும் அவ்வுன்னத ஸ்தானத்தை வேண்டாமென்று மறுத்துவிட்டனர். இதற்கு இரண்டு வருஷங்களுக்கெல்லாம் இவர் கல்கத்தா ஸர்வகலாசாலை மெம்பராக நியமனம் பெற்றனர். ஐந்தாறு வருஷங்களுக்குப் பின்னர் இவர் சட்டப்பரீக்ஷா சபையின் அக்கிராசனாதிபதியானார். 1883-ம் ௵ முதல் நான்கு வருஷகாலம் இவர் இந்தியா கவரன்மெண்டாருக்குச் சட்ட சம்பந்தமான ஆலோசனை சொல்லிவரும்படியான உன்னத பதவியை யடைந்து அப்பதவியை எவரும் மதிக்கும் வண்ணம் வகித்துப் புகழ்பெற்றனர். இவை நிற்க.

சட்டநிரூபண சபையில் இல்பர்ட்பில் ஆலோசனைக்கு வந்தபொழுது ஐரோப்பிய ஜாதியார் அனைவரும் ஒருங்கு சேர்ந்து அதனை அங்கிகரிக்கக் கூடாதென்று ஒரு பெருங் கூக்குரல் போட்டகாலத்தில் நம் பானர்ஜி இராஜாங்க விஷயமாய் முதல்முதல் தம் புத்தியைச் செலுத்தத் தொடங்கினர். காங்கிரஸ் மகா சபைக்குத் தந்தையென்று சொல்லும்படியான ஏ. ஓ. ஹியூம் என்ற ஐரோப்பிய பிரபு நம் தேச க்ஷேம விஷயமாய் ஒரு சபை ஏற்படுத்திக் கவரன்மெண்டாருக்குத் தேச விஷயங்களைக் கறந்தபால் கறந்த விதமாகவே எடுத்துக்காட்டிச் சரிவரக் கவனிக்கச் செய்யவேண்டுமென்று நம் பானர்ஜியினிடம் பிரஸ்தாபித்த காலத்தில் இவர் மனம் முழுமை

யும் அவ்விஷயத்தில் கவிந்தது. அதுமுதல் ஹியூம் என்ற மகானுக்கு இவர் ஓர் ஊன்றுகோல்போல் உதவினர். அவரது வேண்டுகோளுக் கிசைந்தே இவர் 1885-ம் வூ பம்பாயில் முதல் முதல் கூடிய காங்கிரஸ் மகா சபைக்குச் சபாநாயகராக வீற்றிருந்தனர். 1892-ம் ஆண்டில் அலகபாத்தில் கூடிய 8-வது காங்கிரஸுக்கும் இவரே அக்கிராசனாதிபதியாயிருந்து காரியங்களைச் சீரும் சிறப்புமாய் நடத்திப் புகழ்பெற்றனர். இவரது பேச்சு எவரும் மதிக்கத்தக்கதாகவும் அர்த்த புஷ்டியுள்ளதாகவும் ஸ்வந்த யோசனையுள்ளதாகவும் இருந்தபடியால் இவர் பேசுங்கால் எவரும் கவனித்துக் கேட்பார்கள். அந்நாள் முதல் இவர் காங்கிரஸ் மகா சபைக்கு ஓர் ஆணிவேராக இருந்து வந்தனர். சிற்சில சமயங்களில் அம்மகா சபைக்கு நேரில் வந்து செய்வதைக் காட்டிலும் அதிக வேலையை அந்தரங்கத்தில் செய்துமுடிப்பார். அதன் அபிவிருத்தி விஷயத்தில் ஏராளமாகத் தம் கைப்பொருளைச் செலவுசெய்து அம் மகாசபையின் காரியங்களைக் காப்பாற்றி யிருக்கின்றனர். ஆர்ப்பாடம் செய்யாமல் அந்தரங்கத்தில் ஆர அமர உழைத்து வேலைசெய்வதில் இவருக்குப் பிரியம் அதிகம். பேச்சுப்பேசுவதினும் இம்மாதிரி செய்வதில் அதிக நன்மையுண்டாகும் என்பது இவரது முக்கிய கொள்கை. ஆகையால் இவரது யோசனைக்கு என்றுமே மதிப்புண்டு. இவரை எவரும் ஒருகாலத்திலும் வெறுத்ததுமில்லை. இளமைப்பருவத்தில் இவருக்குச் சொற்ப முரட்டுக் குணமிருந்ததாயினும் வரவர அது மாறி அமிர்தகுணமாயிற்று. இவரது சாந்தமும், கம்பீர நடையும் எவர் மனத்தையும் கவர்ந்தன. பெரியபட்டங்கள் பெற வேண்டுமென்ற ஆசை இவருக்குச் சிறிதும் கிடையாது. அதனால் அவைகளை அவர் சிறிதும் நாடிச் சென்றதில்லை.

அந்தஸ்திலும் வித்தையிலும் யாதொரு பட்டமும் பெறு மலே இவர் மகான்களால் மதிக்கப்பட்டுவந்தமையால் பட்டங்களால் இவருக்கு யாதொரு கௌரவமும் அதிகப் படாவிடினும் இவரையடைந்து பட்டங்கள் கௌரவப் பட்டிருக்கலாம்.

இவர் ஐரோப்பிய நடையுடைபாவனைகளைக் கைப் பற்றி நடந்துவந்தனராயினும் ஆரிய மதக்கொள்கை களிடத்தும் பிராமணகுல தர்மங்களிடத்தும் இவருக்கு மதிப்பு அதிகம். ஆகையால் சிற்சில சமயம் தம்முடைய மாறுதலான வாழ்க்கையைக் குறித்துத் துக்கித்துப் பேசியு மிருக்கின்றனர். மேலும் தம் பந்துக்களைத் தம் குல தர்மத்தின் ஆசரணைப்படியே நடக்கும் வண்ணம் அவர் களுக்கு வற்புறுத்திப் புத்தி புகட்டியும் வந்தனராம். வெளிக்கு ஐரோப்பியரைப்போல் தோன்றினராயினும் அந்தரங்கத்தில் ஆரிய நடையையே அனுசரித்து வந்த னர். ஆகையால் இவரது வாழ்வு ஒரு புதிர்போல் காண ப்படும். இவ்வுத்தமர் தம் மதக்கிரந்தங்களில் மிகவும் பக்தியுடையவர். பற்பல கிரந்தங்களைப் பாராமல் ஒப்பு வித்து அடிக்கடி மனமகிழ்வார் என்றால் இவரது பாஷா பிமானத்துக்கும் மதாபிமானத்துக்கும் வேறு சாக்ஷி வேண்டுமோ?

எல்லாப் பாக்கியம்போல் இவருக்கு இல்லற வாழ் வின் பாக்கியமும் பரிபூரணமாகக் கிடைத்தது. இவரு க்கு வாய்த்த இல்லாள் மகாகுணவதி. அருந்ததி அனைய கற்பினள். இவரது புத்திரவாத்ஸல்யமும் சகோதர வாஞ்சையும் எவரும் கண்டு வியந்து அனுஷ்டிக்கத் தக்க வையாயிருக்கும். இவரது மாதிருபக்திக்கு இணை ஒன் றும் சொல்ல முடியாது. தாம் ஐரோப்பிய நடையைப் பின் பற்றியிருந்தும் தம் தாய் ஆரிய தருமத்தையே அனுசரி

த்து நடத்தும் வண்ணம் அவ்வம்மைக்குப் பூஜை விரதம் முதலியவைகளுக்குவேண்டிய சாதனங்களைத் தேடிக் கொடுத்து மனமகிழ்ச்சி யடைவார். தாய் மனம் சிறிதும் கோணுமல் அவளது மனோபீஷ்டப்படி நடப்பதில் கண்ணுங்கருத்துமாயிருப்பார். தாம் தாயினின்று பிரிந்து தம் ஆசாரத்தின்படி தக்க மாடமாளிகையில் வசிப்பவராயினும் தினந்தோறும் தாய்வீட்டை நாடிச் சென்று அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து அப்புண்யவதியின் ஆசிர்வாதத்தைப் பெற்றுப்போவது வழக்கம். இம்மகாபுருஷருடைய இவ்வுத்தமகுணத்தை எல்லோரும் பின்பற்றிப் பெருமையடைவது நலம்.

இவர் அடிக்கடி தம் தேக சௌக்கியத்துக்காகவும் நமது தேச நன்மை யபிவிருத்திக்காகவும் இங்கிலாந்து சென்று சிறிது நாள் வாழ்வது வழக்கம். சொந்தக் கிருகமும் அவ்விடத்திலேயே வாங்கியிருந்தனர். அங்கு வாழ்ந்துவரும் நாட்களில் பார்லிமெண்டு மகா சபையில் புகுந்து தேச க்ஷேமத்துக்குப் பாடுபடவேண்டுமென்ற நோக்கம் கொண்டு அச்சபையின் அங்கத்தினர் ஆகும் வண்ணம் இருமுறை முயர்சித்தனர். அவர் நினைத்தபடி நிறைவேற இல்லை. பிற்காலத்தில் வியாதிமாத்திரம் இவரைப் பீடியாமலிருந்தால் எஸ்ஸெக்ஸ் மாகாணத்தின் ஒரு பாகத்துக்குப் பிரதிநிதியாக வந்திருப்பாரென்பது திண்ணம்.

"உறுதி பயப்ப கடையோகா வேனும்
இறுவரை காறு முயல்ப"

என்ற ஆன்றோர் வாக்கைக்கைக்கொண்டு நடப்பவர்.

இந்தியாவிலிருந்தால் ஓயாமல் வழக்குகளை நடத்த வேண்டி வருகிறதென்பதைக் கருதி இந்தியாவைவிட்டுத் தேக சௌக்கியத்தின் பொருட்டு இங்கிலாந்துக்குப்

போனுர். அங்கும் இவரை ஜனங்கள் விட்டபாடில்லை. இவரது அபார ஸாமர்த்தியத்தையும் ஒவ்வொரு விஷயத்திலுமிவர்க்குள்ள ஊக்கத்தையும் நன்கறிந்த நமது தேசத்தவர்கள் இங்கிருந்து பிரிவீகவுன்ஸிலுக்குப் போகும் ஒவ்வொரு வழக்கிலும் ஏதாவது ஒரு கக்ஷியை நடத்தும்படி இவரை நிர்ப்பந்தித்தார்கள். இதனுல் இந்தியாவிற போலவே இங்கிலாந்திலும், இவருக்கு வேலைத்தொந்தரை மிகவும் அதிகமாகவேயிருந்தது. அதுமுதல் இங்கிலாந்தில் இருக்குங்கால் அங்கே கல்விபயிலச் செல்லும் இந்தியவாலிபருக்கெல்லாம் பேருதவியாயிருந்து அவர்களைக் கண்காணித்து வருவார். காங்கிரஸ் மகாசபை விஷயமாய் ஆங்கிலேயருக்கு அடிக்கடி நல்லறிவு புகட்டி நம் தேச க்ஷேமலாபத்தை அபிவிருத்தி செய்து வருவார். மிஸ்டர் பிராட்லாவையும் அது விஷயமாய்க் கவனம் செலுத்தி ஊக்கத்துடன் உழைக்கும்படி செய்தவரும் இவரே.

இவ்வண்ணம் எல்லாவிதத்திலும் தம் தேசத்தின் நிமித்தம் தம் உடல் பொருள் ஆவியைத் தத்தம்பண்ணி வாழ்ந்த இம்மகான் இரண்டு வருஷங்களாக நோய்வாய்ப்பட்டு நொந்து இங்கிலாந்தில் கிராய்டன் என்ற இடத்தில் நாளது மாதம் 21-தேதி தம் கிருகத்தில் 62-ம்பிராயத்தில் பரலோகப் பிராப்தியாயினர். இவருக்கு மூன்று புத்திரர்களும் நான்கு புத்திரிகளும் உண்டு. புத்திரர்களில் இருவர் தந்தையின் வழியைப் பின்பற்றி பாரிஸ்டராகக் கல்கத்தாவில் வாழ்ந்து வருகின்றனர்.

“சொல்வலன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.”

எஸ். சாமிநாதையர்.

THE GRAMOPHONE.

கிராமோபோன்.

பேசும் பாடும் யந்திரங்கள் பல மாதிரி உண்டு, ஆனால் "கிராமோபோன்" என்னும் பேர்கொண்ட ஒரு யந்திரமட்டுமே—மற்றவைகளைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தது மட்டுமல்லாமல்; தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் சமஸ்கிருதம் முதலிய அநேக இனிமையான இராகங்களுள்ள பலகைகள்,

தென் இந்தியாவிலுள்ள பேர்போன பாகவதர்களாலும், தாசிகளாலும்பாடப்பட்டு, அடியிற்கண்ட மேல்விலாசத்திற்கு வந்திருக்கிறது.

கிராமோபோன் யந்திரம், பாவரும் வாங்கிபாடக் கேட்டு சந்தோஷமடையக்கூடியதாய், பல விலைகளிலும் இவ்விடத்தில் அகப்படும்.

No. 5 கிராமோபோன் புதியமாதிரி ரூபா 89—4—0

☞ காட்லாக்குகளுக்கும், விவரங்களுக்கும் அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜே. எச். பார்க்கர்,

199. மௌண்டுரோட்,

மதராஸ்.

கிராமொபோன்.

பாட்டுப்பலகைகள்,

அநேகம் உண்டு. எல்லாவற்றையும்
இங்கே சொல்லமுடியாது.

அவற்றில் சிலது:—

சேலம் கோதாவரி.

அருமருந்தோரு
இது நான்வர யின்னும்
வஞ்சியுன் மேல்
அறியானை—தேவாரம்
எப்போதுலையும்

சேலம் பாப்பா.

கண்மணியே என்சாமி
இதைவிட இன்னும்

காஞ்சிபுரம் தனக்கோடி

மோகப்பகட்டுக்காரி
இன்னமுதுகனிபாகு
கற்கண்டு

சேலம் அம்மாக்கண்ணு

என்னடிமெத்த
அப்பனே பழனியப்பனே

விகடகவி.

ரெயில்வண்டி
பட்டணத்துஜட்காவண்டி
க்ஷாரன் சண்டை

இன்னும் அநேகம். கேட்லாக்குகளுக்கு அடியிற் கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜெ: எச். பார்க்கர்,

199 மௌண்ட் ரோட்,

மதராஸ்.

கிறிஸ்துபோன்ற ஒழுக்க முறை நூல்.

புத்தகம் II.

1-வது அதிகாரம்.

அந்தர் முகப்படுகிற முறையிலெச்சரிக்கை.

சிந்தையினுள்ளே ஈசனைத்தேடுதல்.

"சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்" மாணிக்கவாசகர்.

"சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீசனை
மிக்க மலத்தை விடு."
—ஔவை.

"கடவுள் உன்னிடம் உள்ளார்." இது தேவ வாக்கு. துன்பத்திற்கு இடமாகிற இப் பிரபஞ்சவாழ்வைவிட்டு உன் முழுமனத்தைக் கடவுளை நோக்கித் திருப்பு. அதனால் உபசாந்தம் பெறுவாய். வெளிவிஷயங்களைத் துச்சமென நினைக்கப் பழகு. உள்ளே நோக்கிக் காலங்கழி. அதனால் கடவுள் உன் உடல் இடங்கொள்வார். சாந்தமும், ஆனந்தமும் அதாவது பரிசுத்த ஆவியில் கலப்பதால் நேரும் ஆநந்தமும் உனக்குச் சித்திக்கும். இது தீயவருக்கு வெகுதூரம்; கிட்டாது. கிறிஸ்து உன் உள்ளே யுறைவர். ஆறுதலைப் பயக்கும் தரிசனத்தைக்கொடுப்பர். அவர் தங்குதற்குற்ற இடத்தை உன் உள்ளே ஆயத்தஞ் செய்வாயாகில், அவர் மகிமையும் அவர் அழகும் உன் உள்ளே பிரகாசிக்கும். அந்தர்முகப்பட்டு நடைபெறுதல் அவருக்குப் பிரியமாம். அப்படி ஒழுகுகிறவனை அவர் அடிக்கடி அணுகுவர். அதனால் இனிய வார்த்தை, சுகமான ஆறுதல், உயர்வான சாந்தம், அற்புதமான நட்பு இவை லபிக்கும்.

பக்தனே! உன் நாயகன் அருள்பற்றி வருகைக்கு உன் ஹிருதயத்தை ஆயத்தம் பண்ணு. அவர் அங்கே தங்குவார். அவர் அடியில் வருமாறு அருள்வாக்கு அளித்திருக்கின்றார்.—"ஒருவன் என்னிடம் பக்தி பாராட்டுவானாகில், அவன் என் வாக்கை ஞாபகம் கொணர்க; நாம் அவனிடம் வருவோம்; அவன் உடலிடம் கொள்வோம்."

ஆகையால், கிறிஸ்துவையே சிந்திப்பாய். வேறு ஒன்றுக்கும் இடங்கொடாதே. அவர் உன்னிடம் தங்கவே நீ பாக்கியவானாகிறாய். அவர் உனக்குப் போதும். உனக்கு வேண்டுவனவெல்லாம் அளிப்பார். உன் காரியங்களெல்லாம் தம்முடையதாக நடத்துவர். இனி மனிதர்களை நம்பவேண்டாம். மனிதரோ உறுதிப்பாடு அற்றவர். நிலையற்றவர். விரைவில் நம்மைக் கைவிடுவர். கிறிஸ்துவோ என்றால் ஊழிகாலம் வரை நம்மைக்கைவிடார். கடைமுறைகாலம் வரை நமக்கு உதவுவர். அற்பனும், மரணதர்மத்துக்கு உள்ளானவனுமுள்ள மனிதன், எவ்வளவு உபயோகமாக இருப்பினும், எவ்வளவு அன்புபாராட்டினும் அவனை நம்ப ஒண்ணாது. அடிக்கடி மனிதன் நமக்கு இடையூறு புரியினும் நமக்கு விரோதஞ் செய்திடினும் அவனைப் பற்றிக் கெட்ட எண்ணம் எண்ணற்க. ["மறந்தும் பிறன் கேடு சூழற்க" என்பது குறள்.] மனிதர் இன்று நம்மோடு உறவாக இருப்பர். நாளை நம்மெதிரியோடு உறவாவர்: காற்றுப்போல நிலையற்றவர்.

2

அதனால், கடவுள் ஒருவரையே நம்பு. அவரே—உன் பயத்துக்கும் உன் அன்புக்கும் இலக்ஷியமாகட்டும். உனக்காக, அவர் உலகத்தாருக்குச் சமாதானஞ் சொல்லுவர். உனக்கு அனுகூலத்தைச் செய்திடுவர். அதை நன்றாகச் செய்வார். உலகத்தில் நிலையான உறைவிடங் கிடையாது. எங்கே போனாலுஞ்சரி, அங்கெல்லாம் நீ வழிப்போக்கனாகவே யிருக்கிறாய். சிந்தையின் உள்ளே கிறிஸ்துவுடன் அமையப் பெற்றாலன்றி வேறு எங்கும் ஆனந்த மடையமாட்டாய். அப்படியிருக்கையில், நீ ஏன் வெளிப்பட நோக்குகிறாய்? உன் உறைவிடம் மோக்ஷமாம். உலகவிஷயங்க ளெல்லாம்—சென்று கொண்டிருக்கும்—நில்லாத வீண் தோற்றமே அவைகளும் செல்லச் செல்ல, நீயும் அவைகளுடனே செல்லுவாய்

அவைகளில் உன் மனம் பற்றுமல் கவனமாய் இரு. இன்றேல் அவைகளின் வலைக்குள் சிக்கிக்கொண்டு மருளுவாய். உன் எண்ணங்களெல்லாம், உயர்வான பூமியிலிருக்கின்ற இறைவனை நாடுக! உன் பிரார்த்தனைகளெல்லாம் எப்போதும் கிறிஸ்துவை நோக்கி நேராகச் சொல்லுக!

மேலான மோக்ஷ ஸம்பந்தமானவைகளைப் பற்றிய பாவனைகள், உன் மனம் சிந்திக்க இயலாதாகில் கிறிஸ்துவானவர் உலகில் எவ்விதம் வருந்தினர் என்பதையாவது உன் மனம் நினைக்கட்டும். அவர் அடைந்த புண்களையும், சிலுவை ஆணிகளின் தழும்புகளையும் நீ விரைந்து விரைந்து சிந்திப்பாயாகில், உலகத்தில் உனக்குச் சங்கடங்கள் நேரும்போது நீ ஆறுதலடைவாய். உலக நிந்தனையை நினைக்கமாட்டாய். பழிச்சொல்லை மனம் நோவாமல் பொறுப்பாய். அவரை யுலகத்தார் நிந்தித்தபோதும், அவர்மேல் வீண் பழிகளைச் சுமத்தினபோதும், அவர் சிநேகிதர்களும் அவரை நன்கு அறிந்தவரும் அவரைக் கைவிட்டு விலகிக்கொண்டார்கள். கிறிஸ்து இவ்விதம் சங்கடத்துக்கும் நிந்தைக்கும் உள்ளாயிருக்க நீ உலக இடும்பைகளுக்கு வியசனப்படத் துணிய நியாய முண்டா? கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசப் பகைவர்க ளிருந்தார்கள்; உனக்கு எல்லாரும் நண்பர்களாகவும் உதவி புரிகின்றவர்களாகவும் இருக்க விரும்புவது நியாயமா? உனக்குத் துன்பங்கள் நிகழாமல் உனக்குப் பொறுமையின் மகுடம் எப்படி யேற்படும்? கஷ்டங்களால் நீ வருந்தாமல் கிறிஸ்துவின் நட்பு எப்படிக் கிடைக்கும்? ["நிறையுடைமை நீங்காமை வேண்டின்—பொறையுடைமை போற்றி யொழுகப் படும்."—குறள்] கிறிஸ்துவுடன் அரசாளவேண்டின் அவர்போற் பொறுமையாய் இரு. அவருக்காகச் சகிப்புள்ளவனாக இரு. ஒருமுறையாகிலும் அவர் உள்ளம் பூரணமாகப் புகுந்து அதன்கண் பெருகிவரும் அன்புரசத்தின் ருசிகண்டிருப்பாயாகில் உன் சொந்த யோகக்ஷேமத்தைப்பற்றி நீ சிறிதுங் கருதாய். மேலும், அவமானங்கள் வந்திடினும் மனக்களிப்பாய் இருப்பாய். ஏனென்றால், கிறிஸ்துவின் மேலுள்ள பக்தி தன்னைப்பற்றிய நிந்தனைகளைச் சகிக்கச் செய்கின்றது.

ஏசுவை அன்புடன் வழிபடுகிற சத்தியநாமி, உள்ளபடி, அந்தர்முகப் படுவான்; மிதமிஞ்சிய ஆசாபாசங்களினின்று விடுபடுவான்;

இறைவனைச் சுலபமாக உள்நோக்குவான்; தன்னுள்ளத்தில் தன்னை யுயிர்த்திடுவான்; ஈசனைத் தன்னுள் அனுபவிப்பான்; சாந்தம் பெறுவான்.

மற்ற ஜனங்கள் சொல்லுகிறபடி அன்றியும், மற்ற ஜனங்கள் மதிக்கிறபடி அன்றியும், ஆனால் உள்ளபடி உலக வாழ்க்கையை அனுபவத்தினு லறிகிறவன், உண்மையான ஞானியாவான். அந்த ஞானம் உண்டாகக் கடவுள் அருளால் உபதேசம் பெறுகிறான். மனிதனாலன்று. ["உள்ளூ ரிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேல்—கள்ளவிழ் சோலையாங் காட்டுளார்—காட்டுள்ளும்—உள்ள மறப் பெறு கல்லாரேல் நாட்டுள்ளும்—நண்ணி நடுவூ ருளார்."—அறநெறிச்சாரம்.] பகிர் உலகத்தை யற்பமெனக்கருதி யொழுகுகிறவன் தியானஞ் செய்கிறதற்குக் குறித்த இடம் வேண்டான்; குறித்த காலம் வேண்டான்; அவன் மனம் உலக விஷயங்களிற் சென்று சிதறாமலிருக்கின்றதால் நினைத்த இடத்திலும் நினைத்த காலத்திலும் தன் மனத்தை யொடுக்கி நேர்மையாக இருக்கச் செய்திடுவான்; தவம்புரிவான். எந்த வேலையும் அவன் ஒழுக்கமுறைக்குத் தடையின்றாம். அவன் தவம் எந்த வேலையனாலும் காக்கவேண்டுவதின்றாம். எந்தக்கர்மங்கள் செய்யவேண்டினும் அவைகளுக்குத் தக்கவாறு தன்னை யமைத்துக் கொள்ளுகிறான். உள் நோக்கமும் மனநேர்மையும் உடையான், ஜனங்களின் கோணலான விபரீத வழிகளைப்பற்றிக் கொஞ்சமேனும் சலிக்கான்; கவலைப்படான். நம் மனச்சலனமும் மனக்கவலையும், நம்முடைய உலகப்பற்றின் அளவையதாகும்.

நீ நேர்மையாகவும் தூயனாகவும் இருப்பின், உன்எதிர்ப்பட்டதெல்லாம் நலமாகமுடியும்; உன் வழிக்கு நன்மை பயப்பதாகும். அநேக ஸம்பவங்கள் உன்னைத் துக்கத்திற் குள்ளாக்கி உன் மனச் சமாதானத்தைக் கெடுக்கிறதற்குக் காரணமாம். யாதெனின், மரண தர்மத்திற்குள்ளானவையை முற்றும் வெறுக்காததும் உலகப் பற்றை முற்றும் அறுக்காததுமாம். சிருஷ்டிப்பொருளில் அதிக ஆசைதான் நம் நெஞ்சைப் புண்ணாக்குகிறது. வெளிச் சுகங்களைத் தவிர். ["அவா இலார்க்கு இல்லாகுந் துன்பம் அஃதுண்டேல்—தவா அது மேன்மேல் வரும்."—குறள்.] உள்ளே பொங்கும் ஆனந்தத்தால் ஆரவாரிப்பாய். பலகால் தரிசனம் பெறுவாய்.

2-வது அதிகாரம்.

தாழ்மையான அடக்க முடைமை.

அவன் உற்ருன், இவன் மாற்ருன், என்பதில் வீண் சிந்தனை வேண்டாம். ஈசன் உன்னுடன் இருக்கிருரென நினைந்துகொள். என்ன செய்திடினும் சுத்த மனத்துடன்செய்தால் அவர் உன்னைக் காப்பார். ["மனத்துக்கண் மாசில னுதல் அனைத்தறன்—ஆகுல நீர பிற."—குறள்.] ஈசன் உதவியிருப்பின் உலகத்தார் பகை யென் செய்யும்? நீ மௌனஞ் சாதித்துத் துன்பத்தினல் வருந்துவா யாகில், நிச்சயமாய் இறைவன் உதவிபுரிவார். உன்னைத் துன்பத் தினின்று விடுவிக்குங் காலமும் அதன் முறையும், அவர் அறிவார். அவரிடம் உன்னை யொப்புவித்து விடு. உன்னைக் காப்பாற்றுத லும், உன்னை மோஹத்தினின்று விடுவித்தலும், அவர் கடன்.

நம்மைத் தாழ்மைப் படுத்துதல் அநேக சமயங்களில் நலமாம். அதனல் நம்முடைய குற்றங்களையும் குறைகளையும், பிறர் கண்டு, கண்டிக்க இயல்வதாகும். மேலும், தன் குற்றத்திற்காக ஒருவன் பணிவாஞகில் குற்றம் கண்டுபிடிக்கிறவர் சகிப்புடன் சமாதானம் பெறுவர். அவர் கோபமும் சாந்தமாகும்.

2

தாழ்மையுள்ளவனை இறைவன் காப்பாற்றுவர்; மோஹத்தினி ன்று விலக்குவர்.

தாழ்மையுள்ளவனே இறைவனுக்குப் பிரியன். அவர் ஆறுத லளிப்பார்.

தாழ்மையுள்ளவனுக்கே அவர் இரங்குவார்.

தாழ்மையுள்ளவனுக்கே அவர் அருள் ஏராளமாகக் கொடுப் பார். அவன் மனம் நொந்து வாடுங்காலத்தில் அவர் உற்சாகப் படுத்துவர்; உயர்த்துவர்.

தாழ்மை யுள்ளவனுக்கே தம் ரகசியங்களை யுபதேசிப்பார்; அன்புடனே தன்னுடன் சேர்த்துக்கொள்வர்;வா என்று கூப்பிடுவர்.

தாழ்மை யுடையவன் வெட்கத்திற்கு உள்ளாயினும் தன்னு ள்ளே சாந்தம் பெறுவான். ஏனெனில், உலகத்தை அவன் நம்பா மல், கடவுளை நம்புகிருன். உன்னைக் கீழானவனுக நினைக்கும் வரை உனக்கு ஞானமார்க்கத்தில் விருத்தியில்லையென நினை.

3-வது அதிகாரம்.

சாந்தம் பெற்றவன் நிலைமை.

முதலில் நீ சாந்தம் பெறு; பின்பு பிறரைச் சாந்தம் பெறச் செய்யலாம். அதிகம் கல்வி கற்றவனைவிடச் சாந்தம் பெற்றவனால் உலகத்திற்கு அதிக க்ஷேமம் உண்டு. சினம் கொண்டான் நல்லதைத் தீயதாக ஆக்குவான். தீமையை விரைவில் நம்புவான். சாந்தமுள்ளான், தீயதை நல்லதாக ஆக்குவான். சாந்தமுள்ளவன், பிறரை யவ நம்பிக்கை கொள்ளான். சமாதானம் பெறாத சஞ்சலப்படும் மனத்தை யுடையான் பெருகிய சந்தேகத்தால் தத்தளிப்பான். தானும் சாந்தம் பெறான்: பிறரையும் பெறவொட்டான். சொல்லக்கூடாதனவற்றைச் சொல்லுவான்; செய்யக்கூடாதனவற்றைச் செய்வான். தன் கர்மத்தை விடுவான்; பிறர் கர்மத்தைப் பற்றி வீண் சிந்தனை கொள்வான். ஆகையால், முதலிலுன்னைப் பற்றி பக்தி வைராக்கிய முள்ளவனாகவிரு. பிறகு அயலாருடையதைப்பற்றி நடுவுநிலைமையாகக் கவனிக்க இயலுவதாகும். உன் கருமங்களைப்பற்றிச் சமாதானங்கள் இலகுவாய் ஏற்படும். பிறர் கருமங்களைப்பற்றியோ அப்படி யன்றாம். அவைகளின் பார்வை வேறாம். சமாதானங்களை யொவ்வாய். உன்னைக் கடிந்து கொள்ளக்கடவாய். பிறர் குற்றத்தைப் பொறுத்து அவரை விடுவி. தீங்கு பிறருக்கு நினைக்க அது தனக்கே வரும் என்ற நீதியைக் கைக்கொள்ளு.

2

தர்மகுணபாவமும் பணிவுள்ள மனமும் உள்ளார் தன்மையை யோஜித்துப் பார். தம்மையே கடிந்து கொள்ளுவர். பிறரைக் கோபியார். பிறரை நிந்தியார். அச் சுபாவத்தினின்று நீ எவ்வளவு தூரம் விலகியிருக்கிறாய் என நினைத்துப் பார். நற்குணமுடையாருடனும், அன்புடையாருடனும் நேர்மையாக இருத்தல் ஒரு பெரிய காரியமன்று. அப்படி யிருத்தல் எல்லாருக்கும் பிரியமாம். தன்னுடைய நோக்கத்துடன் ஒத்து நிகழ்கின்றாருடனே ஒருவன் நேசத்துடன் நடைபெறுதல் சிரமமானதில்லை. மாறுபாடான முரட்டுச் சுபாவமுள்ள துஷ்டருடனே நேர்மையாக ஒழுகுதல் நற்குணத்தின் அழகாம். புகழத்தக்கதாம். தீரத்தன்மையுமாம் ["மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான்தன்—தகுதியால் வென்று

விடல்.''—குறள்.] சிலர் தம்முடனும் உலகத்தாருடனும் சாந்தமாகக் காலங் கடத்துகிறார்கள். சிலரோ தமக்கும் சாந்தமில்லை. பிறரையும் சாந்தமாக இருக்க வொட்டார். பிறருக்குந் துன்பம். தமக்கும் அதிக துன்பமாக இருக்கிறார்கள். சிலர் சாந்த சுபாவத்தை யடைந்து. பிறரையும் அவ்வண்ணம் சாந்தராகவும் செய்விக்கின்றார்கள். துக்கமான உலக வாழ்க்கையில், நாம், தணிந்து பொறுத்தலே நம்முடைய சாந்த முறையாம். கன்னெஞ்சராயிருத்தல் சரியன்றாம். [“பொறுத்த லிறப்பினை யென்று மதனை—மறத்த லதனினு நன்று.''—குறள்.] சகிப்புள்ளவனே உபசாந்தம் பெறுவான்; அவன் தன்னை ஜயித்த தீரன்; எல்லாரும் தொழும் கிறிஸ்துவின் பிரியனாவான். வீடுபெறப் பாத்தியஸ்தனுமாவான்.

(இன்னும் வரும்.)

ஆத்மநாதன்.

பூகம்பங்கள்.

பூகம்பங்களைப்பற்றி எழுதுவதற்கும் தெரிந்து கொள்வதற்கும் இதுதான் நல்ல சமயம். ஏனெனில், எங்கே பார்த்தாலும் பூகம்பங்களைப் பற்றியும் அவைகளாலுண்டாக்கப்பட்ட தீமைகளைப் பற்றியுமே ஒரே பேச்சா யிருந்துகொண்டிருக்கிறது. இந்தியாவில் வடக்கே ஸிம்லா (Simla) வினருகில் பூகம்பங்களுண்டாகிக் கொண்டிருப்பதை அடிக்கடி கேட்கிறோம். சில மாதங்களுக்கு முன் நமது இந்தியாவிலேயே காங்கிராவில் (Kangra Valley) உண்டான பூகம்பத்தையும் அதனாலுண்டான உயிர்ச் சேதத்தையும் மற்றைக் கெடுதிகளையும் பற்றித் திகைப்புடனும் மன வருத்தத்துடனும் கேட்கலானோம். மேலும் வட அமெரிக்காவில் சான் பிரான்ஸிஸ்கோ வென்னும் (San Francisco) நகரத்தில் சென்ற எப்பிரல் மாதம் 18-தேதி காலை சுமார் $5\frac{1}{4}$ மணிக்கு ஒரு பூகம்பம் உண்டாகி 3 நிமிஷத்தில் பட்டணம் முழுவதும் சின்னாபின்ன மானதாயும், அதற்குப் பிறகு நெருப்புப் பிடித்துக் கட்டடங்களும் சாமான்களும் 3-நாள் எரிந்ததாயும், ஏறக்குறைய 60,000,000 பவுன் பெறுமானமுள்ள

பொருட் சேதம் வந்ததாயும், கோடிக் கணக்காய் ஸ்திதியுள்ள தனவான்கள் ஒரே நிமிஷத்தில் ஏழ்மைத் தனத்தையடைந்தவர்க ளானார்க ளென்பதாயும், கொஞ்சம்நாள் வரையில் ஆஹாரமும் குடிப்பதற்குச் சுத்தமான ஜலமுமில்லாமல் அநேக குடிகள் வருத்தப்பட்டதாயும், பட்டணமுழுவதும் பூகம்பம் முடிந்தவுடன் பார்ப்பதற்கு மண்வெட்டியால் அலக்ஷியமாகப் பெயர்க்கப்பட்ட ஒரெறும்புப் புற்றுக்கொப்பானதாக ஆய்விட்டதென்பதாயும் நமது நேயர்கள் ஆச்சரியத்துடன் கேட்க, இப்பேர்ப்பட்ட ஒரு அதிர்ச்சியானது யாதுகாரணத்தினால் உண்டாகிறது, இதைப் பற்றி முற்றுமறிந்துகொள்வோமென நிரம்பவும் ஆவலாயிருப்பார்க ளென்பதற்கு யாதொரு சந்தேகமு மில்லை. ஆகையால் நமது நண்பர்களுக்கும் நமது இந்திய சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இவ்விஷயத்தைப்பற்றி நன்கு விளக்கும்படி கொஞ்சம் எடுத்துச்சொல்வோம்.

'பூகம்பம்'* என்னும் வடமொழிப் பதத்திற்கு 'பூமியதிர்ச்சி' யென்பதுதான் அருத்தம். அநேக காரணங்களால், நாம் வாசம் செய்யும் இப்பூமியானது ஆடிக்கொண்டேயிருக்கின்றது. ஆனாலு மிந்த அசைவானது நமது புலன்களுக்குப் பிரத்தியக்ஷமாக அடிக்கடி தோன்றுவதில்லை. நன்று யசையும்போது மாத்திரமே நமக்குத் தெரியவருகிறது.

ஆகிலும் அப்படித் தெரிவதிலும் வித்தியாசமுண்டு. சிலவேளை இராக்காலங்களில் பூகம்பமுண்டாகி ஒரு நிமிஷகாலமிருக்கிறது. அப்பொழுது வீட்டிலுள்ள பாத்திரங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுச் சப்தமுண்டுபண்ணுவதுண்டு. அதை எலிகள் ஏதோ பாத்திரங்களை உருட்டுகின்றனவென்றெண்ணி நாம் நமது நித்திரையில் கவனிக்

*பூ = பூமி; கம்பம் = அதிர்ச்சி, அசைவு.

கிறதில்லை. இரவில் சம்பவிக்கும் மிகச் சாதாரணமான பூகம்பங்கள் இப்படியே நமது புலன்களுக்கெட்டாமல் போய்விடுகின்றன. ஆனால் சிலவேளைகளி லைசைவு நன்றாய்த் தெரியவும் வருகிறது. இக்குணங்களோடு கூடிய பூகம்பங்கள்தாம் நிரம்பவும் சாதாரணமானவை; மேலும் எங்கும் நேரிடக்கூடியன. ஆகிலும், சில பூகம்பங்கள் மிகவும் உக்கிரமாகவே யுண்டாகி மிகுதியான உயிர்ச் சேதமும் பொருள் நஷ்டமும் விளைவிக்கின்றன. இக் கொடுமையைப்பற்றி இன்னும் நன்றாயறிந்துகொள்வோம்.

பூகம்பமானது பெரும்பாலும் பூமியினடியிலேயே உண்டாகிறது. சிற்சில வேளைகளில் சமுத்திரத்தினடியிலுண்டாகிப் பூமியின் மீதும் அதன் குணங்களை யுண்டாக்குவதுமுண்டு. சாதாரணமாக அநேக பூகம்பங்கள் பூமிக்குள் நாலைந்து மைலாழத்தில் உண்டாகும். 1872-ம் வருஷத்தில் மத்திய ஐரோப்பாவில் (Central Europe) உண்டான பூகம்பமானது பூமிக்குள் சுமார் $9\frac{1}{2}$ மயிலாழத்திலிருந்து உண்டானதென்று கணக்கிடப்பட்டது. இப்பொழுது அநேக கணநங்களால் பூகம்பங்கள் பூமியில் சுமார் 30 மைல் ஆழத்திற்கூட உண்டாகக் கூடுமென்று பற்பல ஐரோப்பிய ஸ்தாவரஜங்கம சாஸ்திரிகளால் (Naturalists) மதிக்கப்பட்டிருக்கின்றன.

பூகம்பத்தினாலுண்டான அதிர்ச்சியானது சிலவேளைகளில் லம்பனம் அதாவது மேல்கீழ் (vertical) அதிர்ச்சியாகவும், சிலபோது அடிவானத்துக்கு நேரானது அதாவது பக்க சலனமுள்ள (horizontal) அதிர்ச்சியாகவும் சில சமயங்களில் அலைபோன்ற (undulatory) அதிர்ச்சியாகவும் நம்மால் பற்பல காலங்களில் உணரப்படுகிறது. 1837-ம் வருஷத்தில் தென் அமெரிக்காவில் சிலி (Chili) யென்னும் தேசத்தில் உண்டான பூகம்பத்தால் பூமியில்

30 அடி ஆழம்பறித்து நடப்பட்டு நாலு பக்கத்திலும் இருப்புக் கம்பிகளால் அசையாமல் நிறுத்தப்பட்ட ஓர் கொடிமரமானது பூமியினின்று வேருடன் பிடுங்கி ஆகாயத்தில் வெகுதூரத்திற்கு எறியப்பட்டது. இன்னும் ரயோபாம்பா (Riobamba) வென்னுமிடத்தில் பூகம்பத்தினால் மலையடிவாரத்திலிருந்த மனிதர்கள் 300 அடி உயரமுள்ள ஓர் குன்றின் மீது எளிதாகவே ஏற்றப்பட்டார்களென்று நமக்குத் தெரிந்திருக்கின்றது. 1783-ம் வருஷத்தில் கலாபிரியாவில் (Calabria) உண்டான பூகப்பத்தால் மரங்கள் யாவும் உச்சிக்கிளைகளால் பூமியைத் தொட்டுப் பூமியதிர்ச்சியுள்ள மட்டும் பக்கத்துக்குப் பக்கம் ஆடிக் கொண்டிருந்தன வென்பதற்குப் பிரமாணங்களிருக்கின்றன. சாதாரணமாக ஓர் தடாகத்தில் ஒரு சிறிய கல்லை எறிந்தால் எப்படி அதிலிருக்கும் ஜலமானது வட்டம் போன்ற சிறு அலைகளாகக் கல் விழுந்த இடத்தில் ஆரம்பித்துப் பெரிது பெரிதாகப் பரவுகிறதோ, மேலும் பரவப் பரவ எப்படி அவ்வலைகள் உருவமில்லாமல் மெலிந்து போகின்றனவோ அதே வண்ணம் பூகம்பமானது பூமியில் கொஞ்சமாழத்திலுண்டாகி அலைபோன்ற வட்டங்களாகப் பரவப் பூமியின்மீ திருக்கும் நமக்குத் தெரியவருகிறது.

இனி எவ்வளவு வேகத்துடன் இப்பூகம்ப அதிர்ச்சியானது வேவ்வேறிடங்களுக்குப் பரவுகிறது என்பதை எடுத்துச் சொல்வோம். பெரும்பாலும் இந்த வேகமானது பூமியிலுள்ள பாறைகளின் மாறுதலாலும், அதிர்ச்சியின் உக்கிரத்தின் (intensity) தராதரத்தினாலும், தூரத்தினாலும் மாறுபாட்டை யடைகின்றது. 1880-வருஷத்தில் திருவாங்கூரில் (Travancore) உண்டான பூகம்பம் 1-விநாடிக்கு 656 அடி வீதம் பரவிற்று. 1881-ம் வருஷத்தில் ஜபானில் டோகியோ (Tokio) வென்னும் பட்

டணத்திலுண்டான அதிர்ச்சியானது 1-வினாடிக்கு 4,000 அடிமுதல் 9,000 அடிவரையில் வேகமாகப் பரவினதாக மில் (Milne) என்னும் துரை கண்டுபிடித்திருக்கிறார்.

ஒரு பூகம்பமானது எவ்வளவு நேரம் இருக்குமென்பதைக் கணக்கிடமுடியாது. சில அதிர்ச்சிகள் 1-வினாடி கூட நிற்பதில்லை. சில வேளைகளில் இரண்டு மூன்று நிமிஷம் முதற்கொண்டு அநேக மாதங்கள்கூட அநேக அதிர்ச்சிகளாக ஒன்றையொன்று தொடர்ந்துகொண்டே நிற்கும். இந்தியாவில் 1897-ம் வருஷத்தில் ஆஸாம் (Assam) மாகாணத்திலுண்டான பூகம்பமானது அநேக வருஷங்களுக்குப் பல பூகம்பங்களால் தொடரப்பட்டுக் கொண்டே வந்தது. ஆனால் ஐரோப்பாவில் போர்ட்யுகல் (Portugal) தேசத்தில் லிஸ்பன் (Lisbon) நகரமானது ஐந்தே நிமிஷத்தில் அழிக்கப்பட்டது. அமெரிக்காவில் காரகாஸ் (Caracas) என்னும் பட்டணம் 10,000 ஜனங்களுடன் $\frac{1}{2}$ நிமிஷத்தில் நிர்மூலமாக்கப்பட்டது.

இப்பொழுது பூகம்பங்களா லுண்டாகும் தீமைகளைப்பற்றிச் சுருக்கமாய் விவகரிப்போம். உயரமான மலைகளினின்று பெரும் பாறைகளைத் தள்ளிவிடுவதுண்டு. அவைகள் அப்படி உருண்டு வருங்கால் அநேக விருக்ஷங்களை ஸமூலமாய்ப் பெயர்த்து நாசம் பண்ணிக்கொண்டு வரும். பர்வதங்களின் பக்கங்களும் தாழ்வரைகளும் நழுவிப்புரண்டு வருவதையும் கேட்டிருக்கிறோம். அப்படி பூமியினது ஓர் சிறிய பாகம் புரண்டு வருந்தருணத்தில் அநேக கிராமங்களும் குடிகளும் அழிவதுண்டு. நதிகளின் குறுக்கே சென்று அவைகளின் போக்கைத்தடுத்து மிகச் சேதத்தை விளைவிக்கும். சிற்சில சமயங்களில் பூகம்பத்தால் வெடிமருந்து வைத்துடைக்கப்பட்ட கல் ஸ்தம்பங்கள் போலவே பெரும்பாறைகள் பிளந்து சிதறும்.

மேலும் பூமியின்கண் வெடிப்புக்கள் தோன்றிச் சுமார் 1-மைல் நீளமும் 200 அடிக்குமேலாழமுமுள்ளனவாயுமிருக்கக் கண்டிருக்கிறோம். இவ்விதப் பிளப்புக்களில் மரங்கள் விழுவதுண்டு. மேலும் மனிதர்களும் ஆடு மாடுகளும் விழுந்து மாண்டதைக் கேட்டிருக்கிறோம். இந்தியாவில் ஓரிடத்தில் இந்தமாதிரி பூமியின் பிளப்பானது (fissures) சுமார் 100 மைல் தூரம் வரையில் தொடர்ந்து போவதை டாக்டர் ஓல்டம் (Dr. Oldham) என்னும் துரை கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். இவ்விதப் பிளப்புக்கள் ஜபான் தேசத்தில் (Japan) வெகு சாதாரணமே. சிற்சில விடங்களில் பூகம்பத்தால் பூமியில் வட்டமாகக் குழிகள் (cavities) தோன்றியவற்றின் வழியாய் நீரும் நீராவியும் வெளிப்படுதலுமுண்டு. இதுமாத்திரமன்று. ஓடைகளும் நதிகளும் கலங்கிப் போய்விடும். சில வேளைகளில் நதிகள் வழக்கமாயோடும் வழியைவிட்டு மாறும். ஏரிகளிலுள்ள ஜலம் அதிர்ச்சியின்போது அநேக மணிகள் வரையில் ஏறி யேறிக் குறைவதையும் கண்டிருக்கிறார்கள். சமுத்திரத்தினடியிலுண்டான பூகம்பமானது மிக்க துன்பத்தை விளைவிக்கும். அலைகள் சில சமயங்களில் 200 அடி உயரத்துக்குமேல் கிளம்பிக்கரையின் மேல் வீழ்ந்து முன்னிற்கும் யாவற்றையு மழித்துக், கடற்கரை யோரமுள்ள பட்டணங்களைச் சின்னபின்னமாக்கும். 1755-ம் வருஷத்தில் ஸமுத்திர அலைகளால் லிஸ்பன் (Lisbon) நகரமழிந்ததற்குக் காரணம் பூகம்பமே. இத்துடன்கூடப் பூகம்பங்கள் மற்றுஞ் சில தீமைகளையும் உண்டுபண்ணும். சில இடங்களில் இவ்வதிர்ச்சியால் ஸ்திரமாகவே பூமி உயர்ந்ததற்குப், வேறு பிரதேசங்களில் ஸ்திரமாகவே தாழ்ந்து போனதற்கும் பிரமாணங்க ளெடுத்துரைக்கக் கூடும். தென் அமெரிக்காவில் சிலியில் (Chili) கடற்கரையோரமா

னது வெகு தூரத்திற்கு 1822-ம் வருஷத்திலுண்டான அதிர்ச்சியால் 4 அடி உயரம் உயர்ந்ததாகவும், இந்தியாவில் 1762-ம் வருஷத்திலுண்டான பூகம்பத்தால் சிட்டகாங்கில் (Chittagong) கடலோரமாக 60 சதுரமைலுக்குப் பூமி மூழ்கிப்போனதாகவும், இவ்விதமாகவே கச் (Cutch) என்னும் தேசத்தினருகில் ரன் (Runn) என்னும் பிரதேசமானது ஜலத்தினுட் சென்றதாகவும், இதற்கெல்லாம் பூகம்பமே காரணமென்பது திண்ணமென்பதாகவும் ஐரோப்பிய நிபுணர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இப்பேர்ப்பட்ட கொடுமையை யுண்டாக்கும் இந்தப் பூகம்பமானது அதியுக்கிரத்துடன் எங்குமுண்டாவதில்லை. சாதாரணமாய் எரிமலைகளினருகிலுள்ள பிரதேசங்களில்தான் பெரும்பாலும் தோன்றும். மேலும் அநேக பெரிய கண்டங்களில் சமுத்திரக் கரையோரமான பிரதேசங்களில் அதிகமாக ஸம்பவிக்கும். தென் அமெரிக்காவில் மேற்குக் கடற்கரை யோரத்திலுள்ள தேசங்களில் மிகவும் கடுமையான பூகம்பங்களுண்டாயிருக்கின்றன. பஸிபிக் மகா ஸமுத்திரத்தைச் (Pacific Ocean) சூழ்ந்திருக்கும் தேசங்களிலும் கடற்கரை யோரமுள்ள ஊர்களிலும் பூகம்பம் வெகு சாதாரணமாக உண்டாவதுண்டு. ஆனால் சமுத்திரத்தினருகிலுள்ள பிரதேசங்களிலேயும் பெரிய மலைகளின் சமீபத்திலேயே உண்டாவதையும் அறிந்திருக்கிறார்கள். ஆகிலும் முன்சொல்லிய விடங்களைத்தவிர வேறு இடங்களிலுண்டாகமாட்டாது என்று உறுதியாய்ச்சொல்வது மெத்தக் கடினம்.

பூகம்பங்களைப்பற்றி இவ்வளவு சொல்லியும் அவைகளெப்படி யுண்டாகின்றனவென்பதை நன்கு விளக்காவிடில் நமது நேயர்களுக்கு ஸமாதானமாகாததலால் அது விஷயமாய்ச் சுருக்கமாய் விசாரிப்போம். பூகம்பங்களும் அவைகளாலுண்டாகும் தீங்குகளும் லோகத்தில் பாபம்

அதிகரிப்பதால்தான் உண்டாகின்றன வென்று நமது சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. கர்கமஹரிஷியும் அவ் வண்ணமே யுரைத்திருக்கிறார். சாதாரணமாகப் பஞ்சம், கோடை கொள்ளை நோய் இந்த மூன்றும் ஒரே வருஷத்தில் சேர்ந்துவந்தால் இவ்வருஷமே பூகம்பமும் ஸம்பவிக்குமென்று இந்திய ஜனங்களுக்குள்ளே சாதாரணமாகச் சொல்வது வழக்கம். ஆனபோதிலும் ஐரோப்பியர்கள் ஸீஸ்மோகிராப் (Seismograph) மாக்னெடோகிராப் (Magnetograph), ஹோடோகிராப் (Hodograph), இன்னும் பற்பல யந்திரங்களாலும் பூகம்பங்களைப்பற்றி மிகுதியும் ஆராய்ந்தறிந் திருக்கிறார்கள். அநேகவிதமாகச் சோதனைகள் பண்ணிப் பூகம்பங்க ளெப்படி யுண்டாகின்றனவென்பதையும் நிரம்ப சூக்ஷ்மமாகவே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். எல்லாப் பூகம்பங்களுக்கும் ஒரே காரணம் எடுத்துரைப்பது தப்பிதம். சில ஆழத்தில் பூமியின் கீழிருக்கும் கிடங்குபோன்ற குழிகள் (under ground cavities) திடீரென்றுடைவதால் உண்டாகின்றன. இன்னும் சில பூகம்பங்கள் பூமியானது சிலவிடங்களில் உயர்ந்து வரும்போது (upheaval) அவ்விடங்களிலுள்ள பாறைகள் இறுகுவதாலும் இழுப்பதாலும் பலகைகள் போல் வளைந்து ஒடிவதாலும் உண்டாகின்றன. ஆனால் பெரும்பாலும் பூகம்பங்கள் எரிமலைகள் உக்கிரமாகவிருக்கும்போது அவைகளுடன் கூடவே யுண்டாகும். சமுத்திரக் கரையோரமாயிருக்கும் பிரதேசங்களில் மிகுதியாய்த் தோன்றுமென்று முன்னமே சொல்லி யிருக்கிறோம். சமுத்திரஜலம் பூமியடியில் ஆழத்திலிருக்கும் பிளப்புக்களின் வழியாய் உட்சென்று உருகுகிற நிலைமையிலிருக்கும் கற்குழம்பின்மேல் சம்பந்தப்பட்டால் நீராவியாக மாறும். அப்படித் திடீரென்று மாறிப்பரவி வெளியே தப்பித்துக் கொள்ள முயற்சி செய்யும்போது பூமியில் அதிர்ச்சியை

யுண்டுபண்ணும். இதுவே பூகம்பமெனப்படும். மேலும் எரிமலைகளிலுண்டாகும் அநேக விதமான வாயுக்களும் நீராவியும் ஒன்றுசேர்ந்து வெடிப்பதாலும் அதிர்ச்சியை யுண்டாக்கக்கூடும். பூகம்பத்திற்கு இன்னும் அநேக காரணங்கள் சொல்லுவதுமுண்டு. ஆனால் பூகம்பங்களைப் பற்றிய விஷயங்களில் நிரம்பவும் பாண்டித்தியத்தை யடைந்திருக்கிற மில் (Professor Milne) என்பவர் அவை களை ஒப்புக்கொள்வதில்லை. முற்கூறிய இரண்டு மூன்று காரணங்களையே காரணங்களாகச் சொல்ல ஐரோப்பிய வித்வான்கள் சம்மதித்திருக்கிறார்கள்.

காரணங்களை யறிந்தபின்பு நமது ஞாபகத்தில் வைக் கக்கூடிய சில பூகம்பங்களைக் குறிப்போம். 1755-ம் வருஷத்தில் நவம்பர் மாதத்திலுண்டான பூகம்பத்தால் லிஸ்பன் (Lisbon) நகரம் அழிந்து அதில் 35,000 பேர்கள் மாண்டார்கள். இப்பூகம்பம் லண்டன் (London) நகரம் வரையில் பரவிற்று. அதிக உக்கிரமாக 20 வருஷங்களுக்குள்ளாகவே பூகம்பங்கள் ஜபான், இந்தியா, ஆசியா மைனர் (Asia Minor), தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, இன்னும் அநேகவிடங்களிலுண்டானதுண்டு. இவ் வருஷத்தில் ஸான்பிரான்ஸிஸ்கோவை (SanFransisco), சேதப்படுத்திய பூகம்பத்தைப்பற்றி முன்னேயே ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறோம். 1897-வருஷத்தில் எல்லாப் பூகம்பங்களைக்காட்டிலும் மிகப் பெரிதாகவும் உக்கிரமானதாகவும் மதிக்கப்பட்ட ஓர் பூகம்பம் வட இந்தியாவில் ஆஸாம் (Assam) என்னும் மாகாணத்தில் உண்டாயிற்று. இது ஜூன்மாதம் 12ம்தேதி சாயங்காலம் சுமார் $5\frac{1}{4}$ மணிக்கு உண்டாகி $2\frac{1}{2}$ நிமிஷத்திற்குள் 150,000 சதுர மைல் களிலுள்ள ஊர்களை இருந்த விடம் தெரியாமலழித்துவிட்டது. 10 நிமிஷத்திற்குள்ளாகவே இவ்வதிர்ச்சியானது

$17\frac{1}{2}$ லக்ஷம் சதுர மைல்களடங்கிய தூரத்திற்குப்பரவிற்று. ஆஸாமில் (Assam) உண்டான இவ்வதிர்ச்சியானது ஐரோப்பா கண்டத்தில் ரோம் (Rome), பாட்ஸ்டம் (Potsdam), எடின்பரோ (Edinburgh), கோபன்ஹேகன் (Copenhagen), பாரிஸ் (Paris) நகரங்கள் வரையில் எட்டினது. இந்தியாவில் பம்பாய், ஆக்ரா, தெற்கே பங்களூர் வரையிலும் பரவிற்று. பங்களூரில்திவானவர்கள் (Dewan) ராஜ்ய விஷயமாய் இன்னும் சில மந்திரிகளோடு அப்பொழுது ஆலோசித்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த உள்ளின் கதவுகள் முன்னும் பின்னுமாக அசைந்ததாகவும், யாரோ உற்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்று சந்தேகித்துத் திவானவர்கள் கதவை நோக்கிச்சென்று திறந்து பார்த்து ஒருவனையும் காணாததுகண்டு பூகம்பத்தாலிருக்கலா மென்றறிந்ததாகவும் தெரியவந்திருக்கிறது. இந்தப் பூகம்பமானது 1-நிமிஷத்திற்கு 120 மைல் வீதம் பரவினதாகவும், சுமார் பூமியில் 5-மைலாழத்திற்குள்ளாகவே உண்டானதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இப்பெரிய பூகம்பத்தால் வெகு துன்பங்களுண்டாயின. கல்கத்தாவில் (Calcutta) அநேக மாதா கோவில்களும், கிடங்குகளும், வீடுகளும், கல்லறைகளும் இடிந்து விழுந்தன. கச்சேரிகளும் கடைவீதிகளும் இடிந்தன. ஷில்லாங்கில் (Shillong) கவர்னர் பங்களாவும், ரங்கபூரில் (Rungpur) கலெக்டர் வீடும் கீழே விழுந்தன. ரங்கபூர் ஜட்ஜி பங்களாவில் பூமியில் ஓர் பெரிய பிளப்பு உண்டாயிற்று. ஆஸாமில் (Assam) அநேகவிடங்களில் பூமி வெடித்துப் பிளப்புக்களினின்று மண்ணும் ஜலமும் வெளிக்கு வந்தன. ரயில்வே தண்டவாளங்கள் அநேகவிடங்களில் வளைந்துபோயின. நதிகள் குளங்களாய்விட்டன. காடுகளில் விருக்ஷங்களெல்லாம் முறிந்

தன. நதிகளிலும் தடாகங்களிலுமுள்ள மீன்களும் இதர ஜந்துக்களும் லக்ஷக்கணக்காய் மாண்டுபோகக் காணப் பட்டன. பருத்த ஸ்தம்பங்களும் ஸ்தூபிகளும் சிதறிக் கீழே வீழ்ந்துபோயின. கங்கை இன்னும் சில நதிக ளின் கரைகள் வெகு தூரம் இடிந்து குண்டுபோட்டாற் போல் பல நாள் வரையில் சப்தங்க ளுண்டுபண்ணின. (Barisal guns). ஹிமாலயத்தினின்று தாழ்வரைகள் நழுவி வெகுதூரம் சென்றன. பூமியில் அநேக இடங்க ளில் மேலிருந்த பாகங்கள் கீழே போனதாகவும், கீழே யிருந்த பாகங்கள் மேலே சென்றதாகவும் காணப்பட் டன. தந்திக்கம்பிகள் அநேக ஊர்களில் அறுந்து போயின. இப்பூகம்பத்தால் இந்தியாவுக்கு உண்டான சேதம் கணக்கிலகப்படவில்லே. அது போதாதென்று இப்பொழுது காங்கிராவிலும் (Kangra Valley) ஸிம்லாவி (Simla), னருகிலும் பூகம்பங்களுண்டாகிக் கொண்டிருக் கின்றன. நமது இந்தியாவுக்குத்தான் எவ்வளவு வித மாகக் கஷ்டங்கள் நேரிடுகின்றன!

ஆனாலும் பூகம்பங்களால் நாம் சில விஷயங்கள் அறி ந்துகொள்ளக்கூடும். உயர்ந்த வீடுகள், மணிக்கூண்டுகள், விளக்குக்கூண்டுகள் கட்டுவதில் மிகவுந் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அனேகமுண்டு. பூமியின் பாறை களின் தராதரங்களால் பூமி அதிர்ச்சியானது வேறு பாட்டை யடையுமென்று முன்னமேயெடுத்துக் காண் பித்திருக்கிறோம். மண்ணின் (sand & clay) மீது கட்டி யிருக்கிற கட்டடங்களைக்காட்டிலும் பூமியில் பாறையின் மீது (solid rock) கட்டியிருக்கும் கட்டடங்கள் பூகம்பங் களால் அழிவற்றனவாயிருக்கின்றன வென்பதை ஜமைகா (Jamaica) விலுண்டான பூகம்பத்தினால் அறிந்துகொண் டிருக்கிறோம். முற்கூறிய ஆஸாம் (Assam) பூகம்பத்தால்

செங்கல்லால் அடக்கமாய்க் கட்டிய வீடுகள் துரைமார்களின் விசாலமான பங்களாவைக்காட்டிலும் அதிர்ச்சியைத் தாங்குகின்றனவென்றும், ஒரே வரிசையாய்ச் சேர்த்து அடுத்தடுத்துக் கட்டியிருக்கிற வீடுகள் தனித்தனியாயிருக்கிற வீடுகளைப்போல் பூகம்பத்தில் சேதமாவதில்லை என்றும் விசதமாக விளங்கியிருக்கிறது. மேலும் இப்பொழுது நடந்த ஸான் பிரான்ஸிஸ்கோ (San Francisco) பூகம்பத்தாலும், சென்ற ஆஸாம் (Assam) பூகம்பத்தாலும் இரும்பு உத்திரங்கள் மரவுத்திரங்களைக்காட்டிலும் பூகம்ப காலத்தில் ஸ்திரமாக இருப்பதாகவும் வீடுகளில் மரத்தாலும் செங்கல்லாலும், பாறுங்கற்களாலும் கட்டின பாகங்கள் விழுந்தபோது இரும்பினால் கட்டப்பட்ட பாகங்கள் அப்படியே நின்றதாகவும் நன்றாய்த் தெரியவருகிறது. இவ்விதமான சில விஷயங்களை நாம் வீடுகட்ட நேரிட்டால் பிரயோஜனப் படுத்திக்கொள்ளலாம்.

ஆகிலும் வீடுகட்டிக் கொண்டிருந்தபோதிலும் பூகம்ப காலங்களில் உயிருக்குக் கொஞ்சம்கூடப் பயமில்லாமலிருக்கவேண்டுமானால் என்ன பண்ணவேண்டுமென்று அறிய நமது நண்பர்கள் விரும்புவார்கள். அதற்குச் சரியான உபாயம் உடனே வீட்டைவிட்டு விலகியிருப்பதேயாம். ஆனால் நமது ஜோதிஷர்கள் அடிக்கடி பூகம்பம் வருவதாக 6 மாதத்திற்கு முன்னேயே எழுதித் தேதியையும் குறிப்பிட்டுக் கிராமங்களில் பாமர ஜனங்களை இரவில் நிசிகாலத்தில் பயத்துடன் வீட்டைவிட்டு வெளிப்படுத்துகிறார்கள். அவ்வேளைகளில் பூகம்பங்களுக்கஞ்சாத நெஞ்சர்களாகிய திருடர்கள் இதுதான் சமயமென்று யோசித்துக் கொள்ளையிடுவதுண்டு. சென்ற வருஷத்தில் சில கிராமங்களில் இரவில் 2 மணி சுமாருக்கு ஜனங்க

ளெல்லாம் பூகம்பத்தால் வீடுகள் விழப்போகின்றனவென்றெண்ணி மிகுந்த ஆரவாரத்துடன் தம்தம் குழந்தைகளையும், பசுக்களையும் ஆபரணங்களையும் எடுத்து வீதியில் வந்து 4 மணிவரையில் சாத்து ஒன்றுமில்லாமல் வீட்டுக்குள் சென்றதை நாம் நேரில் கண்டிருக்கிறோம். ஆனதுபற்றியே நமது ஜோதிஷர்கள் எவ்வளவு விஷயங்கள் கற்றறிந்தபோதிலும் அவர்கள் கையிலகப்படாத பூகம்ப விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே முன்னறிவிக்க வேண்டும். எப்படியிருந்தபோதிலும் பூகம்பகாலத்தில் உடனே வீட்டைவிட்டு வெளியே செல்வதே நன்மையாகும்.

நமது தேசத்துச் சிறுவர்களும் சிறுமிகளும் பூகம்பங்களைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளவேண்டுமென்றும், நன்று யறிந்தபின்னர்ச் சமயத்தில் கற்றதை உபயோகிக்க வேண்டுமென்றும் ஆவலுடன் இதை எழுதினோமாகையால் இதை எல்லோரும் கவனமாய்ப் படித்தறிந்துகொண்டால் நமக்கு நிரப்பவும் திருப்திகரமாயிருக்குமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ.

வி. ராமசந்திர அய்யர். எம் .ஏ.

விகட ஸஞ்சீவினி.

3. அபாத்திரதானம்.

பிரதேசம்-இராஜவீதி.

[வெங்கடாவதானி பிரவேசிக்கிறான்.]

வெங்க:—(தனக்குள்) சாப்பாடு தேடவேண்டிய அவசியமில்லாமல் வாதி இரண்டு கறியோடு சமைக்கிறானல்லவா? சாக்ஷி சொல்வதற்காக வாங்கிக்கொண்ட நாலு ரூபாயில் ஒரு சல்லிக்காசும் செலவு செய்யமாட்டேன். இராத்திரிப்போன முண்டை வேளைக்குக் கால்ரூபாய்க்குக் குறைந்து வாங்கிக் கொள்ளமாட்டாள். அவளிடத்தில் ஏதேனும் சங்கடங்கள் இருக்கின்றனவோ என்னவோ என்று பயமாயிருக்கிறது; இருந்தாலும் பாதகமில்லை. அதமம் இன்றிராத்திரிக்கு வேண்டிய நாலணாவாவது இவ்வேளை இவ்வூரில் சம்பாதிக்கவேண்டும். இன்று சாக்ஷியமாய்விட்டால் நாளை சாயங்காலம் எங்களூரில் குசாலாயிருப்பேன். அதோவருகிற பையனை இவ்வீடு யாருடையதோ கேட்கிறேன்.

[ஒருபையன் பிரவேசிக்கிறான்.]

வெங்க:—அப்பா ! இவ்வீடு யாருடையது?

பையன்:—கோர்ட் நாஸர் இராமதாஸ் பந்துலுவுடையது.

வெங்க:—அவர் வீட்டுப் பெயரென்ன?

பையன்:—' வாட்ரேவு வாரு.'

வெங்க:—அவர் தகப்பனார் பேரென்ன?

பையன்:—பீமராஜப்பர்போலிருக்கிறது. நான் கடைக்குப் போகவேண்டும். (என்று போய்விடுகிறான்.)

வெங்க:—(உள்ளேபோய்) ஐயா இராமதாஸ் பந்துலவர்களே! நான் படித்த பிராமணன். தங்கள் தரிசன நிமித்தம் வந்தேன்.

இராம:—(உள்ளேயிருந்து வந்து) உமக்கு எந்த ஊர் ஐயா?

வெங்க:—எனக்கு மேற்கே கிருஷ்ணாதீரம். நான் ஜடாந்தம் வேதம் அத்தியயனம் செய்திருக்கிறேன். என் தகப்பனார் சயனம் (யாகம்) செய்திருக்கிறார்.

இராம:—நீர் இந்த கிராமத்துக்கு எதற்கு வந்தீர்?

வெங்க:—காசி யாத்திரைக்குப்போக வேண்டுமென்று புறப்பட்டு வந்துகொண்டிருக்கிற மத்தியில், ஏலூர் கழிந்தபிறகு, திருடர்கள் அடித்து என்னிடமிருந்த நல்ல செம்பையும், நான்கு

வஸ்திரங்களையும், பத்து ரூபாய் ரொக்கத்தையும் பறித்துக் கொண்டு போய்விட்டார்கள். நான் இப்பொழுது கட்டிக் கொண்ட வஸ்திரத்தோடு இந்தக் கிராமம் வந்தேன்; கையிற் செம்பில்லை; ஐயா! தங்கள் கீர்த்தி ஜகப் பிரஸித்தமானது. தாங்கள் தானத்தில் கர்ணர்; தங்களைப் பார்த்தால் என் தரித்திரம் விமோசனமாகுமென்று, சந்திரனுக்காக சகோர பட்சிகள் தேடிக்கொண்டு வந்தாற்போல, நான் எங்கள் ஊரிலிருந்து புறப்பட்டது முதல், வழியெல்லாம் தங்களையே ஸ்மரித்துக்கொண்டு வந்தேன். தாங்கள் மிக உயர்ந்த பிராமணோத்தமர்.

இராம:—நீர் இப்பொழுது என்ன சொல்கிறீர்?

வேங்க:—செம்பு மாத்திரம் தாங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டும். காசி இராமேசுவரம் வரை இராமதாஸ் பந்துலு அவர்கள் செம்பு வாங்கிக் கொடுத்தாரென்று சொல்லிக்கொண்டு இருப்பேன். தங்கள் பேரும் சாசுவதமாயிருக்கும். ஐயா! தங்களுக்கு 'வாட்ரேவு' பீமராஜு பந்துலு அவர்கள் எப்படி?

இராம:—அவர் என் தகப்பனார்.

வேங்க:—அப்படிச் சொல்லுங்கள். பீமராஜய்யரவர்கள் என்றால் லோகப்பிரஸித்தி. இவ்வளவு தேசங்கள் திரிந்தேனென்றாலும் அவர்களை ஒத்த தாதாவை நான் வேறெங்கும் பார்த்ததில்லை. முதலிலிருந்து தங்கள் வம்சமே அப்படிப் பட்டது.

இராம:—எங்கள் தமையனார் உங்கள் ஜில்லாவில் தாசீல் செய்தார் உமக்கு அவரைத் தெரியுமா?

வேங்க:—எந்தத்தாலூகாவிலே?

இராம:—குடிவாடா தாலூகாவிலே.

வேங்க:—அவர் பேர்?

இராம:—வெங்கடாசலமையர்.

வேங்க:—ஓ ஹோ ஹோ! வாட்ரேவு வெங்கடாசலமையர் தங்கள் தமையனாரா? அவரைத் தெரியாமலா இருக்கும்! அவர் நிரதான்னப்பிரதாதர். எங்கள் ஜில்லா எல்லாம் அவர் பேர் பிரஸித்தி. அவருக்குப் படித்த பிராமணனென்று என்னிடத்தில் பரமபக்தி, அவர் கேவலம் ஈசுவராவதாரம்.

இராம:—அடே சேவகா! வீதியில் யாரோ கத்துகிறார்கள். பார்!

சேவ:—இரண்டு குருடர்கள், பிச்சை போடவேண்டுமென்று கூப்பாடு போடுகிறார்கள்.

இராம:—கழுதைக்குப் பிறந்தவர்களைச் சத்தம் போடாமல் அப்புறம் தள்ளு. இவ்வூர் குருடர்களாலும் நொண்டிகளாலும் நிறைந்துவிட்டது. உதயத்தில் எழுந்தால் பிச்சை பிச்சை என்று நிற்கவிடாமல் வருகிறார்கள்.

சேவ:—அவர்களில் ஒருவன் மிகக்கிழவன். போர்த்துக்கொள்ளுகிறதற்கு வஸ்திரம்கூட இல்லை. குளிரினால் விறைக்கிறான்.

இராம:—கிழவனுமில்லை, குழவனுமில்லை. அவர்களை வெளியே தள்ளி, இந்த ரூபாயை மாற்றி இந்தப் பிராமணனுக்குக் கால் ரூபாய் கொடுத்து விட்டுப் பாக்கி முக்கால் ரூபாயையுங் கொண்டுவா.

வேங்க:—இன்னொருவர் திரவியம் கலக்காமல் செம்புக்கு வேண்டியது தாங்களே தயை செய்யவேண்டும். ஒன்றேகால் ரூபாயானால் ஸரியாய்ப் போகும்.

இராம:—ஏதோ நமக்குத் தோன்றினதை நாம் கொடுத்தோம்; பாக்கி மற்றோரிடத்தில் யாசித்துக் கொள்ளும்.

வேங்க:—याञा मोघा वरमधिगुणे नाथ मे लब्धकामा என்று சொல்லியிருக்கிறார். இல்லையென்று சொன்னாலும் நான் தங்களைப் போலொத்த புண்ணிய புருஷர்களை யாசிப்பேனையன்றி லக்ஷம் வந்தாலும் நீசர்களை யாசிக்கமாட்டேன். தாங்களோ பெரிய தர்மாத்மா, தங்கள் சொத்து எனக்கு இவ்வளவுதான் பிராப்தமிருக்கிறது.

இராம:—இந்தப் பிராமணனுக்கு இன்னும் ஒரு இரண்டணாக் கூடக் கொடு.

சேவ:—சித்தம். (இருவரும் போகிறார்கள்.)

வேங்க:—[வீதியில்] இந்தக் காரைவீடு யாருடையது?

சேவ:—ஜோதிஷர்—பீமய்யருடையது.

வேங்:—அவருக்கு என்ன வேலை?

சேவ:—வேலையொன்றுமில்லை. சொத்துள்ளவர். சூதாடித் தினம் நாலு ரூபாய் சம்பாதிப்பார். மாதம் இருபது ரூபாய் கொடுத்துத் தேவடியாள் வைத்துக்கொண்டிருக்கிறார்.

வேங்க:—அந்த ரூபாயை இப்படிக் கொடு; பாக்கி பத்தணாவும் நான் கொடுக்கிறேன். [என்று இடுப்பிலிருந்த மூட்டையை எடுத்துச் சில்லறை கொடுத்து, ரூபாயை வாங்கிக்கொண்டு, சேவகனை அனுப்பி விடுகிறான்.]

வேங்க:—(உள்ளே போய்ச் சாவடியில் உட்கார்ந்திருந்த ஒரு கறுத்த மனிதனைப் பார்த்து.) தாங்கள்தானா பீமய்யரவர்கள்? தங்கள் தரிசனத்தால் கிருதார்த்தனானேன், இதுவரையும் தங்கள் கியாதியைக் கேட்டுக்கொண்டு வருவதேயல்லாமல் எப்பொழுதும் தரிசனம் மாத்திரம் செய்யவில்லை. இப்பொழுது தங்களைப் பார்த்தால், நான் கேட்டதற்கும் இப்பொழுது பார்த்ததற்கும் சரியாய்ப்போய் விட்டது. உலகத்தில் மகானுபாவர்கள் இருப்பார்கள்! தங்களைப் பார்க்கப்போனால் இவ்வளவு இருக்கிறீர்கள்; தங்கள் கீர்த்தியைப் பார்க்கப்போனால் மூன்று உலகங்களும் நிறைந்திருக்கிறதே, இதென்ன ஐயா!

பீம:—சாஸ்திரிகளே! உமக்கு எந்த ஊர் ஐயா!

வேங்க:—மேற்கே கிருஷ்ணா தீரம். காசியாத்திரைக்குப் போக வந்தேன். வழியிலே கள்ளர்கள் அடித்தார்கள். மகாராஜாவாகிய தாங்கள் ஒரு வஸ்திரம் தயை பண்ணுவீர்களென்று தங்கள் கீர்த்தியைக் கேட்டு வந்தேன். மாதம் இருநூறு ரூபாய் வாங்கும் உத்தியோகஸ்தர்கள்கூடக் கொடையில் தங்களில் ஆயிரத்திலொரு பங்குகூட இருக்கமாட்டார்கள்.

பீம:—நீர் கையில் பணமில்லாத வேளையில் வந்தீர். நேற்று வந்திருந்தால் நான் நல்ல வேஷ்டி வாங்கிக் கொடுத்திருப்பேன்; இருந்தாலும் இந்த ரூபாயை வைத்துக் கொண்டு ஒருவேஷ்டி வாங்கிக் கொள்ளும்.

வேங்க:—சித்தம். சித்தம். எனக்கு இதே பதினாயிரம். இராமதாஸு பந்துலு நாஜர் செய்கிறானென்ற பேரேயொழிய ஒரு கால்ரூபாய் கொடுப்பது பிரமாதமாய்விட்டது. உலகத்தில் தான கர்ணர் என்றால் தங்களுக்கே தகும்.

பீம:—சாஸ்திரிகளே நமஸ்காரம்.

வேங்க:—பஹுதன கனகவஸ்து வாகன ஸமர்த்தி ரஸ்து; அஷ்ட புத்திர பஹுதனமஸ்து! (என்று வீதியில்போய் தனக்குள்) கோர்ட் வேளையாய்விட்டது. சீக்கிரம் போகவேண்டும். இன்றைக்கு ஒரு ரூபாவும் ஆறணாவும் அகப்பட்டது. நான் எப்பொழுதும் தேவடியாள் வீட்டிற்குப் போகவில்லை; பட்டணவாசங்களில் தேவடியாள்கள் மிகவும் அழகாயிருப்பார்கள்; இன்னும் ஒருசாக்ஷியம் அகப்பட்டால் நன்றாயிருக்கும். இன்னும் நாலு ரூபாய் சம்பாதிப்பேன். (என்று போகிறான்.)

மீனம்பாள்—லக்ஷ்மி.

சிறுவர்க்கான பக்கங்கள்.

பிராமணனும் வேங்கைப்புலியும்.

முன்னொரு காலத்தில் ஒரு பிராமணன் ஒரு சாலையின் வழியாகத் தனியே போய்க் கொண்டிருந்தான். கொஞ்ச தூரம் போனதும் சாலையோரத்தில் ஒரு புலிக்கூடு இருப்பதைப் பார்த்தான். அதில் சமீப கிராமத்தார் ஒரு வேங்கைப் புலியைப் பிடித்து அடைத்து வைத்திருந்தார்கள். அடைபட்டு நான்கு தினமானபடியால் இரையில்லாமல் வேங்கைப்புலி பசியோடுமிகவும்வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது. அதனால் சாலையிற் போய்க்கொண்டிருக்கும் பிராமணனைக் கூப்பிட்டு "ஓய், பிராமணோத்தமரே! என்னிடத்தில் கொஞ்சங் கருணை வைக்கவேண்டும். ஒரு நிமிஷ நேரம் என்னை இந்தக் கூட்டைத் திறந்து வெளியில் விடுங்கள். மிகவும் தாகமாயிருக்கிறது. கொஞ்சந் தண்ணீர் குடித்துவிட்டு மறுபடியும் இந்தக்கூட்டில் வந்து அடைபடுகிறேன். தயவு செய்யுங்கள்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டது. அதற்குப் பிராமணன் "அது என்னாலாகாத காரியம். நீயோ லோகப் பிரஸித்தமான மகா துஷ்ட மிருகம். உன்னை நம்பி மோசம் போகலாமோ? நான்

உன்னைத் திறந்து வெளியில் விட்டேனாகில் முதலில் என்னைக் கொன்று தின்று பசியாற்றுவாயே. நான் மாட்டேன்" என்று சொல்லிவிட்டு நடந்துகொண்டே போனான்.

வேங்கைப்புலி மறுபடியும் அந்தப் பிராமணனைக் கூப்பிட்டு "ஏ கருணாநிதியே! பிராமண சிரேஷ்டரே! உபகாரஞ் செய்தவர்களுக்கு அபகாரம் செய்வேனா? நான் அப்படி நன்றி கெட்டவனாக இருக்கமாட்டேன். பயப்படவேண்டாம். மிகுந்த புண்ணியமுண்டு. சற்றுநேரந் திறந்து விடுங்கள். தாகத்தைத் தீர்த்துக்கொண்டு மறுபடியும் கூட்டில் வந்து அடைபடுகிறேன்." என்று இந்தவிதம் பலவாறாகப் பிராமணனுக்கு நம்பிக்கை வரும்படி சொல்லிற்று. பிராமணன் அந்தப் புலியின் வார்த்தையை நம்பி இரக்கங்கொண்டு வேங்கையைக் கூட்டைத் திறந்து வெளியேவிட்டான். வேங்கை ஒரு பாய்ச்சலாக வெளியிற் பாய்ந்து "பிராமணா! முதலில் இப்போது உன்னை யிரையாக்கி விட்டுப் பிறகுதான் தாகத்திற்குத் தண்ணீர் குடிக்கப் போகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றது. அதைக்கேட்டுப் பயந்து நடுநடுங்கிப் பிராமணன் "உபகாரம் பண்ண என்னைக் கொல்லுவது என்ன நியாயம்? அவசரப்படாதே. முதலில் இவ்வழியில் வருகிற ஆறு பெயர்கள் அபிப்பிராயத்தைக் கேட்போம். அவர்களெல்லோரும் ஒரே மாதிரியாக நீ என்னைக் கொல்வது நியாயந்தானென்று தீர்மானித்தார்களாகில் எனக்கு உன் கையில் மரணமடைய இஷ்டந்தான்' என்றான். அதற்கு வேங்கைப்புலி "மனிதர் முதலிய பிராணிகளைக் கொல்வது எங்கள் ஜாதியாசாரம்; ஆகிலும் நீ சொன்னபடி யாறு பெயர்கள் அபிப்பிராயத்தைக் கேட்போம் வா" என்று அந்தப் பிராமணனை யழைத்துக்கொண்டு ஒரு பெரிய ஆலமரத்தண்டை போய் நின்று "முதலில் இந்த மரத்தைக் கேள்" என்றது. பிராமணன் அந்த ஆலவிருக்ஷத்தைப் பார்த்து "ஏ! ஆலமரமே! எங்கள் வழக்கைக் கேள். இந்தப்புலி கூட்டிலடைபட்டுக் கிடந்தது. என்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதனால் நான் இதனைத்திறந்து வெளியில் விட்டேன். விட்டதும் என்னையே கொன்று தின்பேனென்கிறதே. இது என்ன நியாயம்" என்று சொன்னான். அதற்கு அந்த ஆலமரம் "மனிதர்கள் வெயில் சகிக்காமல் என் கிளைகளின்

நிழலில் இளைப்பாற வருகிறார்கள். சாயங்காலம் வெயில் தாழ்ந்தவுடன் என் கிளைகளை வெட்டிச் சின்னாபின்னஞ் செய்து நிழல் கொடுத்த இலைகளைப் பறக்கவிட்டுப் போகிறார்கள். ஆகையால் அந்தப்புலி உன்னைச் சாப்பிடட்டும். மனிதர்கள் நன்றி கெட்ட ஜாதி." என்று சொல்லிற்று.

உடனே வேங்கை மனிதனைக் கொல்ல ஆரம்பித்தது. பிராமணன் "வேங்கையே! நில். அவசரப்படாதே. ஆறு பேர்களைக் கேட்டு நியாயந்தெரிந்து நடப்பதாகச் சொல்லிவிட்டு ஆலமரம் ஒன்று சொன்னதை வைத்துக்கொண்டு கொல்லத் தொடங்கலாமா? இன்னும் ஐந்து பேர்களையும் கேட்போம் வா" என்று சொன்னான். சரிதான் போவோம் என்று புலி ஸம்மதித்துச் சற்றுத்தூரம் நடந்துபோகையில் அங்கேயொரு ஒட்டகம் காணப்பட்டது. பிராமணன் அந்த ஒட்டகத்தைக் கூப்பிட்டு வழக்கின் வரலாற்றைச் சொல்லித் தீர்மானத்தை யபேக்ஷித்தான். அதற்கு அந்த ஒட்டகம் "நான் சிறுவயதாக இருந்தகாலத்தில் என்னைப் போஷித்து நல்ல தீனி போட்டான் என்னுடைய யஜமானன், இப்போது நான் கிழவனாயிருக்கும்போது என்மீது ஏராளமான சுமைகளை யேற்றித் தீனியும் சரியானபடி போடாமல் இம்சிக்கிறான். ஆகையால் புலி உன்னைக் கொல்லத்தான் வேண்டும். மனிதர்கள் ஈரம் இரக்கமில்லாத ஜாதி" என்று தீர்மானஞ் சொல்லிற்று. இதைக்கேட்டதும் புலி பிராமணனைப் பார்த்து "உன்னைக் கொல்லலாமா?" என்றது. "நில். ஆறு பேரையுங் கேட்க வேண்டாமா? அது அல்லவா ஆதி யொப்பந்தம்." என்று பிராமணன் சொல்ல, சரி போவோம் என்று சற்றுத்தூரம் போகையில் ஒரு எருத்துமாடு வந்தது. அதை நியாயங் கேட்டதற்கு அந்த எருத்து மாடு "நான் இளம்பிராயமாய் இருக்கும்பொழுது என்னை ஒரு பிராமணன் நன்றாய்ப் போஷித்துக் காப்பாற்றி வேலைவாங்கி வந்தான். வயதானதும் என்னை யிப்படி சாலையின் பக்கத்தில் விழுந்து சாக விட்டுவிட்டான். புலியே பிராமணனைச் சாப்பிடு" என்றது. புலியும் பிராமணன் மீது பாயத்தொடங்கிற்று. "ஆறு பேரையுங் கேட்கவேண்டாமா?" என்று திரும்பவும் அந்தப் பிராமணன் சொல்ல, "மூன்று பேர் தீர்மானங் கேட்டாய் விட்டதே என்று

புலி சொல்ல, இப்படி வாக்குவாதம் நடந்து கொண்டிருக்குங் காலத்தில் ஒரு பெரிய கழுகு ஆகாயத்திற் பறந்துகொண்டிருப்பதைப் பிராமணன் பார்த்து அதைக் கூப்பிட்டு நியாயத்தைக் கேட்டான். பறந்துகொண்டிருந்தபடியே அந்தக் கழுகு பிராமணனைப் பார்த்து "என்னைப் பறக்கிறபோதே துப்பாக்கியை வைத்துக்கொண்டு மனிதர்கள் சுட முயற்சிக்கிறார்கள். மலைகளின்மேலேறி என் குஞ்சுகளைக் கொண்டுபோய் விடுகிறார்கள். ஆகையால், புலி உம்மைத் திருப்தியாகச் சாப்பிடட்டும்" என்று சொல்லிப் போய்விட்டது. உடனே வேங்கை யட்டகாசஞ் செய்துகொண்டு பிராமணனைப் பார்த்து "எல்லா மத்தியஸ்தர்களும் உனக்கு விரோதமாகத் தீர்மானித்தார்களே. நான் என் இன்னும் தாமதிக்கவேண்டும்? எனக்குப் பசி பொறுக்கவில்லை." என்று பிராமணன் மீது நகங்களை வைக்கப் போனவுடன், பிராமணன் பலவாறாகக் கெஞ்சி "மற்ற இரண்டு பேர்களையுங் கேட்டுவிட்டு அவர்களும் அந்தப்படி தீர்மானித்து விட்டால் என்னை விழுங்கிவிடலாமே. அவசரமென்ன?" என்றான். சரியென்று புலியும் ஒப்புக்கொண்டது. பிராமணன் சமீபத்தில் ஒரு முதலையைப் பார்த்து இந்த முதலையாவது தனக்கு அனுகூலமாகச் சொல்லாதா என்று மனத்திலெண்ணிக் கொண்டு அந்த முதலையினிடம் போய்த் தன் வழக்கைச் சொல்லிக் கொண்டான். அதற்கு அந்த முதலை "ஓ பிராமண! நான் ஜலத்திலே மூச்சு விட்டால் மனிதர்கள் என்னைக் குத்துகிறார்கள். என்னைக் கொல்ல யத்தனஞ் செய்கிறார்கள். ஆகையால், வேங்கை யுன்னை மிருஷ்டான்னமாகப் புஜிக்கட்டும். எனக்குச் சந்தோஷந்தான்" என்றது. இதைக் கேட்டதும் பிராமணனுக்கு உயிரெல்லாம் போய்விட்டது. ஆகிலும் ஆறாவது போவது நமக்கு உபகாரஞ் செய்யாதா? என்று கடைசி நம்பிக்கை வைத்துப் புலியை நோக்கி "ஆறாவது நியாயாதிபதியைக் கேட்போமே. அநேகமாக ஐந்து பேர் வாக்கியத்தால் நான் உனக்கு இரையாகி விட்டேன். ஆகிலும் இன்னுமொருவரையுங் கேட்டுவிடுவோமே." என்று சொன்னான். "ஆனால், இதோ வருகிற நரியிடம் உம்முடைய வழக்கைச் சொல்லும்" என்றது. பிராமணன் நரி யென்ன சொல்லுமோ வென்று பயந்து மிக்க நம்பிக்கையத்துடன் "தந்திரத்தில் மந்திரி

போன்ற நரீசுவரா! என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று கெஞ்சி வழக்கின் வரலாற்றையும் முன் ஐந்து பேர் செய்த தீர்மானத்தையும் உள்ளது உள்ளபடியே நரியிடஞ் சொல்லி, இனி ஆறுவது உன்னைத்தான் என்னுயிரைத் தப்புவிக்க நம்பியிருக்கிறேன்" என்று சொன்னான். நரி, வேங்கைக்குத் தன்னுடைய தந்திரத்தின் மோசம் தெரியாதபடி மிகவும் நட்பமாக நியாயத்தைச் சொல்லுவதாகப் பாசாங்குபண்ணி, வேங்கையையும் பிராமணனையும் பார்த்து "என்னால் இந்தச் சிக்கலான தர்மஸங்கட வழக்கில் நியாயஞ் சொல்ல முடியாதுபோல் காண்கிறது. இதற்குமுன் ஐந்து நியாயாதிபதிகளும் மனிதர்கள் மிருகங்களுக்கு விரோதியென்று மனிதனைக் கொல்லலாமென்று தீர்மானித்துவிட்டார்கள். ஐந்து பேர் தீர்மானங்களும் வேங்கைக்கு ஸாதகமாக இருக்கின்றன. நான் ஆறுவது நியாயாதிபதி. நான் ஒருவன் சொல்லி என்ன ஆகப்போகிறது? மேலும், உங்கள் வாய்மொழியை மாத்திரங் கேட்டுத் தீர்மானஞ் செய்வது நியாயமில்லை. உங்களில் யார் சொல்வது சரி; யார் சொல்வது தப்பு என்றும் அறியமுடியாது. உங்களுக்குள் வியவகாரம் ஏற்பட்ட காலத்தில் நீங்கள் எந்தஸ்திதியிலிருந்தீர்களோ அந்த ஸ்திதியை நேரில் கண்ணாலே பார்த்தால்தான் நான் ஒரு கிரமமான முடிவுக்கு வரக்கூடும். ஆகையால் அந்த இடத்தைக் காண்பியுங்கள்." என்று சொல்லக்கேட்டு இரண்டு பேரும் நியாயந்தானென்று திரும்பி நரியை யழைத்துக்கொண்டு இரும்புக் கூட்டண்டை வந்தார்கள். அங்கே வந்ததும் நரி பிராமணனைப் பார்த்து "தாங்கள் எங்கே நின்றீர்கள்? இருந்தபடி காண்பியுங்கள்." என்றது. "இதோ இங்கேதான்" என்று பிராமணன் காண்பித்தான். உடனே வேங்கைப் புலியைப் பார்த்து "தாங்கள் எங்கே யிருந்தீர்கள்?" என்றது. புலி "இந்தக் கூட்டிலிருந்தேன்" என்றது. "எப்படி, எனக்கு நன்றாய்த் தெரியவில்லையே. கூட்டிற்குள் எப்படி யிருந்தீர்கள்? எந்தப் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்?" என்று மீறபடியும் நரி கேட்டதற்குப் புலி திடீரென்று கூட்டிற்குள் குதித்து "இப்படித்தான், இந்தப் பக்கமாகப் பார்த்துக்கொண் டிருந்தேன்" என்று காண்பித்தது. புலி கூட்டில் ஏறினவுடன் "நல்லது தாங்கள் கூட்டில் நின்றவிதம்

16200

நன்ருய்த் தெரிந்து கொண்டேன். ஆகிலும் எல்லாவற்றையும் மனத்தில் வாங்காமல் தீர்மானஞ் சொல்லுவ தெப்படி? தாங்கள் நிற்கிற கூடு திறந்திருந்ததா? அல்லது மூடி யிருந்ததா?'' என்று கேட்டது. மூடித் தாள்போட்டிருந்தது என்று பிராமணன் சொன்ஞன். "அப்படியாஞல் அந்தப்படி தாள்போட்டுக் காட்டலாமே. பிறகு தீர்மானஞ் சொல்வது எளிது'' என்று சொல்லி நரி வாய்மூடுமுன் ஒருகால் புலி எங்கே குதித்துவிடப் போகிறதோ வென்று பிராமணன் கூட்டை மூடி நன்ருகத் தாள்போட்டு விட்டான்.

புலி உள்ளே யகப்பட்டுக் கொண்டதும் "நன்றிகெட்ட புலியே! கூட்டைத்திறந்து வெளியே விட்டால் முதலில் அந்தப் பிராமணனே யிரையாக்குவதுதாஞ பிரத்தியுபகாரம்? அங்கேயே கிட. ஜீவனுள்ள வரையில் கூடுதான் உனக்குக் கதி'' என்று சொல்லிவிட்டுப் பிராமணனைப் பார்த்து "ஓய் அசட்டுப் பிராமணு! தப்பினீர். இனி, இப்படி மோசம் போகாமலிரும். உமக்கு வழி யப்படி—போம்—எனக்கு வழி யிப்படி நான் போய் வருகிறே னென்று சொல்லி யோட்டம் பிடித்தவிட்டது.

பிராமணனும் ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்து வீடுபோய்ச் சேர்ந்தான்.

இதஞல் நாம் அறிந்துகொள்ளக்கூடிய நீதியென்னவெனில் துஷ்டர்களுக்கு உபகாரஞ்செய்யலாகாது. செய்தால் தீங்குக்கே யிடமாகும், என்பதாம்.

மனைவி:—"தோஷம், சந்தோஷம் இவை யிரண்டிற்கு முள்ள வித்யாச மென்ன?''

புருஷன்:—"எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது. நீ தான் இருக்கிருய். உன்னை நாஞக அடித்தாவது சோற்றில் விஷங் கலந்து கொடுத்தாவது கொன்று விடுவேஞல் அப்போது எனக்குண்டாவது தோஷம். அப்படிக்கின்றி வியாதியிஞலோ அல்லது வேறு காரணத்தாலோ நீ யிறந்துவிடுவாயாஞல் அப்போது எனக்குண்டாவது சந்தோஷம்.''

பையன்:—"மாமா, மாமா! கேட்டீர்களா விஷயத்தை? நேற்றுக் கூடிய சபையில் உங்களைப்பற்றி யில்லாதும் பொல்லாதும் சொன்னார்கள். நான் எழுந்திருந்து உங்களுக்காக வெகு தூரம் பரிந்துபேசி யவர்கள் சொன்னது பிழையென்று ஒப்புக் கொள்ளும்படி செய்துவிட்டேன்."

மாமன்:—"என்னடா பையா, என்ன சொன்னார்கள்?"

பையன்:—"அந்த அசட்டுக் கிழவனுக்கு என்ன தெரியும்? மூளை கலங்கிப் புலம்புகிறான், அவன் பேச்சும் ஒரு பேச்சா? என்று சொன்னார்கள்."

மாமன்:—"அதற்கு நீ என்ன சொன்னாய்?"

பையன்:—"நான் சொன்னதா கேட்கிறீர்கள். இப்படியெல்லாம் பொய்யும் புரட்டும் சொல்லாதீர்கள். அந்த மனுஷ்யன் கிழவனா? தடியையூன்றிக் கொண்டா நடக்கிறான்? அப்படிக் கெல்லாம் கிழவனைச் சொல்லக்கூடாதென்று சொன்னேன். சரியென்று ஒப்புக்கொண்டு விட்டார்கள்."

மனைவி:—"நீங்கள் எப்போது எனக்குச் சேலைவாங்கித்தரப் போகிறீர்கள்?"

புருஷன்:—"இந்த வாரத்தில் கட்டாயம் வாங்கித் தருகிறேன்."

மனைவி:—"போன வாரத்திலும் அப்படித்தான் சொன்னீர்கள்."

புருஷன்:—"ஆம், அப்படித்தான் சொன்னேன்; சில பேர்களைப் போல இன்றைக்கொரு வார்த்தை நாளைக்கொரு வார்த்தையாக மாற்றிச் சொல்ல என்னாலாகாது. நான் என்றைக்கும் ஒரே மாதிரியாகத்தான் சொல்வேன்."

மனைவி:—"நாயகனுடைய சரீரத்தில் சரி பாதி பத்னியென்று சொல்லியிருக்கிறதாமே சாஸ்திரத்தில்."

புருஷன்:—"அதில் என்ன சந்தேகம். உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்வதற்கு முன் என் சரீரம் எப்படியிருந்தது? இப்போது எப்படியிருக்கிறது பார். நான் முன்னுடம்பில் பாதியாயிருக்கிறதையும் நீ என் பாதியும் சேர்ந்து ஒன்றரை யுடம்பாகப் பருத்திருக்கிறதையும் பார்த்தால் தெரியவில்லையா!"

ராமன்:—"கோவிந்தா! நீ என்னைப்பற்றித் தூஷணமான வார்த்தைகள் சொன்னதாகக் கேள்விப்பட்டேனே."

கோவிந்தன்:—"இல்லை, ஒரு நாளுஞ் சொன்னதில்லை. ஒரு மனிதனைப்பற்றி நல்லதுண்டானால் சொல்லுகிறது. இல்லையோ நிந்தையான வார்த்தைகளைச் சொல்லுவதில்லை யென்று முன்னமேயே தீர்மானித்த விஷயம். அப்படியிருக்க உன்னைப் பற்றி நான் என் பேசப்போகிறேன்."

சந்த மேவிய சுந்தரி யெனுமொரு தையல்
கந்த னுமொரு காளையைக் கனிவொடும் விளித்தே
"எந்த வாறுநீ பிறருனக் கியற்றிட நினைப்பாய்
அந்த வாறுநீ யயலவற் கியற்றுக" வென்றாள்.

"நன்று, சுந்தரி! யவ்விதம் என்றுமே நடந்தால்
ஒன்று வாய்கொலோ?" என்னலும் "ஒன்றவ னுண்மை"
என்று சொல்லினள்; சொல்லிவாய் மூடுமு னெழுந்து
சென்று செய்யவாய் முத்தமிட் டணைத்தனன் சேயோன்.

ஈது கேளென முதன்முதல் வேட்டகம் ஏகும்
சாது வாகிய புதல்வனைத் தாய்தனி யழைத்தே
"ஏது சொல்லினும் மாமனார் மொழிகளை யெதிர்த்து
வாது செய்திடேல்; நன்றுபோய் வா"வென வுரைத்தாள்.

சொன்ன தாயரை யடிமிசைத் தொழுதுநற் சுதனும்
அன்ன வண்ணமே செய்குவ னென்றுவேட் டகம்போய்
மன்ன வாழ்ந்தனன் மருகனாய்; மாமனும் மகளுக்
கென்ன பாக்கிய மெதிர்ந்ததென் றகமகிழ்ந் திருந்தான்.

பொருந்து மன்பினில் மாமியும் மருகனைப் புகழ்ந்து
விருந்து செய்தனள்; மற்றிவர் புசித்திடும் வேலை
"அருந்து மாறிலை கழுதைநின் சமையல்" என் றன்பால்
முருந்து போனகை மாமியை மாமனும் முனிந்தான்.

ஈன்ற தாய்முன மு‍ரைத்ததை மறந்திடா திதயத்
தூன்ற வைத்தவம் மருமகப் பிள்ளையும் உடனே
"சான்ற மாமியுங் கழுதையே; சமையலுஞ் சரியாய்த்
தோன்ற வில்லையென்" றியாவரு நகைத்திடச் சொன்னான்.



மஹானாகிய ஸ்ரீமத் விவேகாநந்தஸ்வாமிகள் சென்ற 1893-ம் வருஷத்தில் அமெரிக்காவுக்குச் சென்று அங்கு கூடிய மதஸம்பந்தமான மஹா ஸபையில் சுமார் 6,000 கற்றோர்களுக்கு முன்பாக நமது ஆரியமதத்தைப் பற்றி உபந்யாஸம் செய்தது முதற்கொண்டே அந்நாடு முழுமையுமே ஜனங்களுக்கு நமது மதத்தின் தத்துவங்களை அறியவேண்டுமென்ற அவா மிகவும் மேலிட்டிருக்கிறது. 1897-ம் வருஷம் வரையில் ஸ்ரீ விவேகாநந்தரே அமெரிக்காவிலிருந்துகொண்டு பற்பல விடங்களில் பள்ளிக்கூடங்களும் சங்கங்களு மேற்படுத்தி அனேக உபந்யாஸங்கள் செய்து வந்தார். பின்பு இவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் இவருக்கு ஆஸேது ஹிமாசல பர்யந்தம் நடந்த அத்யத்புதமான உபசாரங்களும், ஜனங்களுக்கு அச்சமயத்திலிருந்த வாசாமகோசரமான உத்ஸாகமும் எல்லோருமறிந்த விஷயங்களே. அது முதல் அமெரிக்காவில் இவர் ஸ்தானத்தை வகித்து வருபவர் ஸ்வாமி அபே

தாநந்தரே. இவர் அதற்கு முன்பாக இங்கிலாண்டிலிரு ந்து வந்தார். இவர் அமெரிக்காவுக்குச் சென்றது முதல் சென்ற ஒன்பது வருஷகாலமாய் அவ்விடத்தில் செய்த வேலைக்கு ஓரளவில்லை; ஒவ்வொரு இடத்திலுமுள்ள பள் ளிக்கூடங்களும் சங்கங்களும் மிக ஊக்கத்துடன் நடந் தேறிவருகின்றன. இந்த வேதாந்த சங்கங்களி னங்கத் தினராயுள்ளவர்கள் ஆயிரக்கணக்கா யிருக்கிறார்கள். இவ்வளவு பேரும் மாம்ஸத்தையாவது, மத்யத்தையாவது தொடுகிறதில்லை. நமது ஸ்வாமிகள் பாடங்கள் சொல் லிக்கொடுக்கும் ஸமயங்களில் தரையில்தான் கால்களை மடக்கிக்கொண்டு இவர்கள் உட்காருவார்கள். இவர்களுள் பலர் ப்ராணாயாமம் முதலியவைகள்கூடச் செய்கிறார்கள். வேதாந்தம் என்று ஒரு மாதாந்தப் பத்திரிகை ஏற்படு த்தி நடத்திவருகிறார்கள். பற்பல விடங்களில் பிரணவ கோவில்கள் கட்டி அவைகளில் பிரணவ பிம்பத்தை வைத் துத் தொழுது வருகிறார்கள். நமது மதத்தைச் சற்றே னும் மதியாமல் இதைத் தொலைத்து விடவேண்டுமென்ற எண்ணத்துடன் கூடிய ஜாதியார்களின் நடுவில் இவ்வாறு நமது மதத்தை ஸ்தாபித்து இதில் அவர்களுக்கு விசு வாஸம் வரும்படி செய்து இதற்காக அவர்கள் ஏராள மான திரவியத்தையும் செலவிடும்படி ஏற்படுத்தி அட்ட ஹாஸம் செய்வது நமது மதத்தின் பெருமையன்றோ? அதை யெடுத்துரைக்கும் ஸ்வாமிகளின் திறமையன்றோ? இவ்வளவு திறமையுடன் ஒன்பது வருஷகாலம் அமெரிக் காவில் உழைத்து வந்த ஸ்ரீ அபேதாநந்த ஸ்வாமிகள் தமது தாய் தேசத்தைப் பார்க்கவேண்டு மென்ற அவா வுடன் சென்ற மாதத்தில் கொழும்புக்கு வந்து சேர்ந் தார்கள். அது முதல் இவர்கள் போகும் ஒவ்வொரு ஊரி லும் மிகவும் உத்ஸாகத்துடன் இவர்களை நல்வரவேற்று வருவதைப் பார்க்க ஸந்தோஷமாயிருக்கிறது. இதனு

லேயே இந்தியர்களுக்கு மதமே எல்லாவற்றுக்கும் ஜீவாதாரமாயுள்ளது, மதத்திற்குழைப்பவர்களே எல்லோரையும்விட மேம்பட்டவர்கள் என்பது நன்ருகப் புலப்படவில்லையா? ஸாக்ஷாத் அவதார புருஷனுகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சிஷ்யராகிய இந்த அபேதாநந்த ஸ்வாமிகள் இன்னும் வெகு காலத்திற்கு நமது மதத்தின் பெருமைகளை உலகம் உஜ்ஜீவிக்கும் பொருட்டு எடுத்துப் பிரஸங்கித்துக் கொண்டிருக்கவேண்டுமென்பதே நமது கோரிக்கை.

* * *

பாபு ஸுரேந்திரநாத பானர்ஜி செய்திருந்த வியாஜ்யங்கள் அவருக்கு அனுகூலமாக முடிந்தது மிகவும் ஸந்தோஷிக்கத்தக்க விஷயமே. கோர்ட்டாரை அவமதித்ததாக ஸுரேந்திர நாதரை தண்டித்தது பிசகென்று கல்கத்தா ஹைகோர்ட்டாரவர்கள், தீர்மானித்து அதை ரத்து செய்து விட்டார்கள். புல்லர் கவர்ண்மெண்டாரும் கடைசியாக நிதானிக்க வாரம்பித்து, பீனல் கோட் பிரகாரம் ஸுரேந்திர நாதர்மேல் புதிதாக வழக்குத் தொடுப்பது ஸரியல்ல வென்று சும்மாவிருந்து விட்டார்கள். இத்தகைய முடிவானது பலவிதத்திலும் சிலாகிக்கத் தக்கதாகவேயிருக்கிறது. இந்த வழக்குகள் ஹைகோர்டில் நடந்தகாலத்தில் பற்பல விஷயங்கள் வெளியாயின. மாஹாண கன்பரன்ஸ் நடப்பதற்கு முந்தியே ஸுரேந்திர நாதரையும் இன்னும் சில ப்ரமுகர்களையும் அரெஸ்டு செய்வதற்காகத் தன்னிடத்தில் வாரண்டு வாங்கி வைத்துக் கொண்டிருந்ததாகப் போலீஸ் ஸுப்ரண்டிண்டெண்ட் மிஸ்டர் கெம்ப் ஒப்புக்கொண்டதும், ஸெஷன்ஸ் ஜட்ஜாகிய மிஸ்டர் கார்கில் என்பவர் ஸுரேந்திர நாதர்மேல் சுமத்தப்பட்ட குற்றம் ஸரியல்ல வென்று ருஜுவானபின்பும் போலீஸ் ஆக்ட்படி விசாரணை செய்யச்சொல்லி

அதைத் திருப்பி யனுப்பியதும், மாஜிஸ்ட்ரேட்டாகிய மிஸ்டர் எமர்ஸன் தனது தீர்மானத்தை எழுதி வாசித்தான பின்பு மறுபடியும் அதில் நடுவில் நடுவில் எழுதிச் சேர்த்ததும், இன்னும் இவை போன்ற சட்டவிரோதமான பற்பல விஷயங்களும் கீழபெங்காளத்திலுள்ள அதிகாரிகளுக்கு இருக்கும் மனத்தின் நிலைமையை நன்கு காட்டுகின்றனவல்லவா? சீமையிலுள்ள நமது ஸ்நேகிதர்கள் பார்லிமெண்ட் மஹா ஸபையில் இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மோர்லியை இது விஷயமாக அநேக கேள்விகள் கேட்டார்கள். அவைகளுக் கெல்லாம் கிடைத்த உத்தரங்கள் மிகவும் திருப்திகரமானவைகளாகவே யிருப்பதால் கூடிய சீக்கிரத்தில் பற்பல நன்மைகளை எதிர்ப்பார்க்கலாமென்று தோன்றுகிறது.

* * *

இந்த வருஷத்தில் நமது சக்கிரவர்த்தியின் பிறந்தநாள் பட்டங்களில் அதிகமான பெயர்களைக் காணும். அதன் ஜாப்தா மிகவும் சிறிதாகவே இருக்கிறது. இருந்த போதிலும் மகா-ள-ள-ஸ்ரீ என். ஸி. ராஜகோபாலாசாரியாருக்கு ராவ் பஹதூர் என்னும் பட்டம் கிடைத்திருப்பதைப்பார்க்க நமக்கு அதிக ஸந்தோஷமாயிருக்கிறது. ராஜாங்கத்தார் சுதேச பத்திராதிபர்களையும் பத்திரிகா நிரூபர்களையும் பட்டம் முதலியவைகளால் கௌரவிக்கிறது வழக்கமில்லை. ஆதலால் நமது ராஜகோபாலாசாரியருக்கு கிடைத்திருக்கும் இந்த கௌரவமானபட்டத்தைச் சுதேச பத்திரிகைகளுக்கே கிடைத்ததாகக் கருதவேண்டும்.

* * *

தனது தாய் தேசத்திலுள்ள புத்திவலிமையையும் நுட்பத்தையும் இவ்வளவு திறமையுடன் வெளியிட்டதற்

காக தியாகராஜ அய்யரவர்களை நாம் மிகவும் கொண்டாடு கிறோம். சீமையிலுள்ள கேம்ப்ரிட்ஜில் ஸீனியர் ராங்க் ளர் என்னும் பட்டத்தை முதன் முதலில் பெற்ற இந்தி யன் மிஸ்டர் பரஞ்சபையாக விருந்தபோதிலும் தியாகராஜ அய்யரவர்கள் இப்பொழுது அந்தப் பட்டத்தைப் பெற்ற தானது நமக்கெல்லாம் மிகவும் கௌரவத்தை யுண்டாக் கியது. முக்கியமாகச் சென்னை ராஜதானி வாஸிகள் இந்த ஜயத்தை வெகுவாகக் கொண்டாடுதல் உசிதம்.

*
* *

தென் ஆபிரிக்காவில் நமது தேசத்தவர்கள் மிகவும் வருந்துகிறார்களென்பதையும், அவர்கள் என்ன முறை யிட்டுக்கொண்ட போதிலும் அங்குள்ள பிரிடிஷ் ராஜாங் கத்தாரிடம் கூட அவர்களுக்கு யாதொருவித கதிமோக்ஷ மும் உண்டாகிறதில்லை யென்பதையும் கேட்க மிகவும் வருத்தமாயிருக்கிறது. பக்கங்களில் ஸாதாரணமாகக் கிடைக்கும் பரிஹாரங்கள் கூட அவ்வூரில் இந்தியர்களுக் குக் கிடைப்பதில்லை. அவ்விடத்தில் சட்டப்படி இந்தி யர்கள் பூஸ்திதியொன்றுக்கும் ஸொந்தக் காரர்களாயி ருக்கக் கூடாதாம். இதென்ன அநியாயம்! அபூபாகர் ஆமட் என்பவர் வெகு காலத்திற்கு முந்தி டிரான்ஸ் வாலுக்குச் சென்று குடியேறிய இந்தியர்களில் ஒருவர். இவர் நல்ல வியாபாரியாயிருந்தமையால் நேடாலிலும் டிரான்ஸ்வாலிலும் ஏராளமான பூஸ்திதியை ஸம்பாதித் தார். இவருடைய அந்த்யகாலத்தில் இவரது ஸொத்து முழுமையையும் தமது ஸகோதரருக்கும் அவருடைய புத்திரருக்குமாக உயில் மூலமாக எழுதி வைத்தார். அவர்களும் 15 வருஷகாலமாக அந்த ஸொத்தை அனுப வித்தார்கள். பின்பு அந்த ஸொத்தை ஒரு கம்பெனி யாருக்கு குத்தகைக்குக் கொடுத்து அந்த குத்தகைப் பத்

திரத்தை ரிஜிஸ்தர் செய்யவேணுமாய் மனுக்கொடுத்த பொழுது, அவர்கள் இந்தியர்களாதலால் அவர்கள் பேரால் அந்த ஸொத்துக்கள் தாக்கல் செய்யப்பட மாட்டாவென்று அதிகாரிகள் சொல்லி விட்டார்களாம். இதன் மேல் நியாயஸ்தலங்களில் அப்பீல் செய்ததில் நியாயாதிபதிகள் அவர்களிடத்து மிகவும் அநுதாபப் பட்டார்களென்ருலும் சட்டப்படி தாங்கள் செய்யக் கூடிய தொன்றுமில்லை யென்று தீர்மானித்து விட்டார்கள். இதுவல்லவோ இந்நாளில் தென் ஆபிரிகாவில் வழங்கி வரும் நீதி! அவ்வூரில் இந்தியர்கள் வியாபாரம் செய்வதிலும் இவ்வாறே பற்பல இடையூறுகள் சட்டப்படி யிருப்பதாகத்தெரிகிறது. இங்கிஷ்காரர்களாளுகையில் கூட இவைகளைக் கவனியாமலிருப்பது மிகவும் ஆச்சரியமே. எல்லாக்குடிகளையும் ஸமமாகப் பர்க்கவேண்டியது ராஜநீதியல்லவா? இந்த நீதி பசுவின் தோல் கூடப் போர்த்துக் கொள்ளாத புலியினுடையதேயாம்!!

*
* *

நாளது மாதத்தில் W.C. பானர்ஜி என்னும் நமது தேசாபிமானி இங்கிலாந்தில் தமது வாஸஸ்தலமாகிய க்ராய்டன் என்னுமிடத்தில் காலஞ்சென்று விட்டதாகக் கேட்க நமக்கிருக்கும் வருத்தத்தை அளவிட வொண்ணுது. இவரிலும் மேலாக நமது தேசத்திற்கு நன்மை செய்தவர்கள் இல்லை யென்றே மிகத்துணிபுடன் கூறலாம். இந்த உத்தமரான தயாளுவைப் பற்றி விரிவாக எழுதுவதற்கு இப்பொழுது இடமின்மையாலும், துக்கத்தினதிகத்தாலும் பின்னொருமுறை விவரிப்போம். இந்த ஸஞ்சிகையில் இவரது படத்தையும், சரித்திர சுருக்கத்தையும் மட்டும் பிரசுரித்திருக்கிறோம்.

புத்தகவரவு.

தியாகராஜலீலை:—திருவாரூர்த்திரு விளையாடற் புராணம் என மற்றொரு பெயருமுடைய இந்நூலைத் தமிழில் இன் சுவை பெருக இயற்றியவர் மகாவித்துவானும் கவிஞர் பெருமானுமாகிய திரிசிரபுரம் ஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்கள். இதன் விருத்தத் தொகை 699. இவற்றில் 453 செய்யுட்கள் நாடு நகரச் சிறப்புக்களைக் கூறுவனவாக, மிகுந்த 246 செய்யுட்கள், முதல் பதின்மூன்று லீலைகளையும் பதனுன்காவது லீலையின் ஒரு பகுதியையுங் கூறுவனவாகும். லீலைகள் முந்நூற்றறுபதாதலால், அவற்றிற்குத்தக்கபடி யிருக்க வேண்டுமென்று நினைந்தே கடவுள் வாழ்த்து திருநாட்டுப்படல முதலியவை மிக்கவிரிவாக எழுதப்பட்டனவெனத் தெரிகின்றது. சொல்லணி பொருளணி முதலியவற்றான் மிகச் சிறந்த இந்நூலை மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தாம் எழுதிய குறிப்புரை முதலியவற்றோடு அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். செந்தமிழ்க் காவியத்தில் மிகச் சிறந்த தொன்றாகிய இதனை யாவரும் வாங்கிப் படித்து இம்மை மறுமைப் பயன்களை யடைய விரும்புகின்றோம்.

வீரவனப்புராணம்:—இது திருப்பெருந்துறைக்கு மேற்றிசையில் 10-நாழிகை வழித்தூரத்திலுள்ள வீரவனம் என்னும் சிவ க்ஷேத்திரத்தின் மாகாத்மியங்களை நன்கு மொழிவதோர் செந்தமிழ்க்காவியம். இதனை வடமொழி முதல் நூலிலிருந்து பெயர்த்து இனிய செய்யுள் நடையாக இயற்றியவர் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்கள். செய்யுள் நடை, பொருளமைதி முதலியவற்றால் மிகச்சிறந்தது. இதனை மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள் தாம் புதிதாக எழுதிய அரும்பதவுரையோடு அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இரண்டு பெரிய வித்வத் சிகாமணி

களால் வெளியிடப்பட்ட இந்நூலைப்பற்றி யாம் அதிகம் என்ன எழுதவேண்டுவது?

இந்துமதி யல்லது கற்பரசி:— இது ஆறு அங்கங்கள் கொண்ட ஒரு தமிழ்நாடகம். சருக்கை: ஸ்ரீமான் இராமசாமி ஐயங்கார் பி.ஏ. அவர்களா லியற்றப்பட்டது. இது கற்பின் மேன்மையையும், ஆடவர் எப்பொழுதும் ஸ்திரீகளிடம் அவநம்பிக்கைப்படலாகாதென்பதையும், நன்மை விதைத்தால் நன்மை விளையுமென்பதையும், தெய்வத்தை நம்பவேண்டிய தவசியமென்பதையும், அதிர்ஷ்டமென்பதொன்றுண்டென்பதையும், இன்னும் இவை போன்ற சில நீதிகளையும் நன்ருக எடுத்துக் கூறுகின்றது. இனிதான எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. மதுரைப் புதுத் தமிழ்ச்சங்க அக்கிராசனுதிபதியாகிய ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது. இது ஆண்பாலரும் பெண்பாலரும் அவசியம் வாங்கிப் படிக்கத்தக்கதொரு சிறு நூலாம்.

சித்திராங்கி, மனோன்மணி, திருப்போரூர் யாத்திரை, திருக்கழுக்குன்ற யாத்திரை:— இந்நூல்கள் விச்சூர் முத்துக்குமாரசாமி முதலியார் B. A. அவர்களா லியற்றப்பட்டனவாகும். ஒவ்வொன்றிலும் இவர் பிரதானமாக எடுத்தாளும் விஷயங்கள் நமக்குத் திர்ப்திகரமாகத் தோன்றவில்லை. நடைப்போக்கும் அத்தனையாகச் சிறந்திருக்கின்றதென்று சொல்ல வொண்ணுது; சொற்பிழைகளும் இலக்கணவழுக்களும், மிகுந்து காண்கின்றன. வடமொழிச் சொற்களை யுபயோகப்படுத்து மிடங்களிலெல்லாம் அவற்றைத் திருத்தமாகக் காணுமைகொண்டு வடமொழிப் பயிற்சி ஆசிரியர்க்கு இல்லையெனத் தெரிகின்றது.